
தரம் 11

புதிய பாடத்திட்டம்

# சமூகக் கல்வியும் வரலாறும்



கமலா குணராசா

# சமூகக் கல்வியும் வரலாறும்

## தரம் 11

(புதிய பாடத்திட்டம்)

கமலா குணராசா

வெளியீடு

கமலம் பதிப்பகம்

யாழ்ப்பாணம்

**பதிப்பு விபரம்**

**சமூகக்கல்வியும் வரலாறும் - தரம் 11**

ஆசிரியர்
**கமலா குணராசா**

© ஆசிரியருக்கு

முதலாம் பதிப்பு 2006

கணினி அட்டை வடிவமைப்பு, அச்சுப் பதிப்பு
**கிறிப்ஸ் - வத்தளை**


வெளியீடு
**கமலம் பதிப்பகம்**
**யாழ்ப்பாணம்**

விநியோகம்
**லங்கா புத்தகசாலை**
F.L. 1.14, டயஸ் பிளேஸ்
குணசிங்கபுர
கொழும்பு - 12
T.P. 2341942

**விலை :** 175/=

அத்தியாயம்

1



# சர்வதேச வர்த்தகமும் சர்வதேச ஒத்துழைப்பும்

**1) புராதன சமூக அமைப்பில் வர்த்தகப் பொருளாதாரம் ஏன் காணப்படவில்லை?**

(அ) புராதன சமூக அமைப்பில் சுயதேவைப் பொருளாதாரமே காணப்பட்டது. கிராமவாசிகள் தமக்குத் தேவையான வற்றைத் தாமே உற்பத்தி செய்துகொண்டனர்.

(ஆ) புராதன சமூக அமைப்பில் தேவைகள் மிகமிகக் குறைவு. அதனால் இலகுவான பொருளாதார அமைப்புக் காணப் பட்டது.

(இ) சுயதேவைக்கு மேலதிகமான பொருட்களைப் பண்ட மாற்றுச் செய்துகொண்டனர். அதுவும் மிகச் சிறியளவில் நிகழ்ந்தது.

(ஈ) தொழில் முறையின் அடிப்படையில் சமூகப்பிரிவுகள் இருந்தன. தச்சர், குயவர், கொல்லர், நெசவாளர் என

விளங்கிய தொழிற்பிரிவினர் ஒரு சமூகத்திற்குத் தேவையான பொருட்களை அக்குறித்த கிராமத்திலேயே உற்பத்தி செய்து கொடுத்தனர்.

(உ) புராதன சமூகத்தில் சனத்தொகை குறைவு. அதனால் தேவைகளும் குறைவு.

(ஊ) போக்குவரத்து, தொடர்பாடல் முதலான வசதிகள் விருத்தியடையாத புராதன சமூக அமைப்பில் வர்த்தகப் பொருளாதாரம் விருத்தியடைய வாய்ப்பில்லை.

**2. உலகில் எந்தவொரு நாடும் தனக்குத் தேவையான எல்லாப் பொருட்களையும் ஏன் உற்பத்தி செய்துகொள்ள முடியாதிருக்கின்றது?**

(அ) நாட்டிற்கு நாடு புவியியல் அமைப்பு, காலநிலை, வளங்களின் பரம்பல் முதலானவை வேறுபடுகின்றன. ஒரு நாட்டின் உற்பத்தியை மேற்குறித்த காரணிகளே தீர்மானிக்கின்றன.

(ஆ) ஒவ்வொரு நாடும் தனது நாட்டில் இலகுவாக உற்பத்தி செய்துகொள்ளக்கூடிய பொருட்களை உற்பத்தி செய்து கொள்வது இலாபகரமானதாகவும் இடர்ப்பாடற்றதாகவும் இருக்கின்றது.

(இ) ஒவ்வொரு நாடும் தான் உற்பத்தி செய்துகொள்ள முடியாதிருக்கின்ற பொருட்களை வேறுநாட்டிலிருந்து இறக்குமதி செய்துகொள்வது இலகுவாயும் இலாபகரமாயும் இருக்கின்றது.

**3.** (i) **வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகளை உருவாக்கிய முக்கிய காரணிகள் எவை?**

(ii) **அவற்றினைச் சுருக்கமாக விபரிக்க.**

(i) (அ) நாடுகாண் பயணங்கள்

(ஆ) கைத்தொழிற் புரட்சி

(இ) போக்குவரத்தினதும் செய்தித் தொடர்பாடலினதும் வளர்ச்சி

(ii) (அ) மத்திய கால ஐரோப்பாவில் கொலம்பஸ், வஸ்கொடகாமா, மகெலன் போன்ற நாடுகாண் பயணிகள், உலக

நாடுகளிடையே தொடர்புகளை ஏற்படுத்தி வைத்தனர். நாடுகாண் பயணங்களின் மூலமாக நாடுகளுக்கு இடையில் கொடுக்கல் வாங்கல்களிலும் தொடர்புகளிலும் விருத்தி ஏற்பட்டது. குறிப்பாக ஐரோப்பிய நாடுகளுக்கும் கீழைத்தேச நாடுகளுக்கும் இடையில் நெருங்கிய தொடர்புகள் விருத்தி அடைந்தன.

(ஆ) கைத்தொழிற்புரட்சி காரணமாக ஐரோப்பிய நாடுகளின் உற்பத்திகள் பல மடங்காகப் பெருகின. மூலப் பொருட்களை ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளிலிருந்து இலகுவாகப் பெறவும், அதேபோல உற்பத்தியான முடிவுப்பொருட்களை அந்நாடுகளில் சந்தைப்படுத்தவும் வாய்ப்பு ஏற்பட்டது. கைத்தொழிற் புரட்சியால் உயர் தொழில்நுட்பவிருத்தி, நவீன யந்திர சாதனங்கள், மூலதன அதிகரிப்பு, சிறப்புத்தேர்ச்சி என்பன அபிவிருத்தியடைந்த நாடுகளில் பெருமளவில் அதிகரித்தன.

(இ) கப்பல், விமானம், தரை ஆகியவற்றிலான போக்குவரத்து வசதிகளும் நவீன தொலைத்தொடர்பு ஊடகங்களின் முன்னேற்றமும் சர்வதேசத் தொடர்பு ஊடகங்களின் முன்னேற்றமும் சர்வதேசத் தொடர்புக்கும் அதனூடாக வர்த்தகப் பரிமாற்றத்திற்கும் தூண்டுதல்களாக அமைந்தன. நாடுகளுக்கிடையான இணைப்பு இன்று துரிதப்பட்டுள்ளது. இணையத்தின் (இன்ரநெற்) வளர்ச்சி இதில் முக்கியமானது. எந்த ஒரு நாடோ, இனமோ, தனிமனிதனோ தனித்து வாழமுடியாது என்பது இன்று தெளிவாகியுள்ளது.

**4. சர்வதேச ஒத்துழைப்புகள் குறித்து சுருக்கமான விளக்கந் தருக.**

(அ) உலகநாடுகள் ஒன்றிற்கு ஒன்று சமூக, பொருளாதார ரீதியில் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றன. பொருட்களாகவும், பணமாகவும், சேவைகளாகவும் இவ்வாறான ஒத்துழைப்புகள் உள்ளன.

(ஆ) புவி நடுக்கம், வெள்ளப்பெருக்கு, வரட்சி, பஞ்சம் போன்ற இயற்கை அனர்த்தங்கள் ஒரு நாட்டில் ஏற்படும்போது ஏனைய நாடுகள் தாமாகவே முன்வந்து உதவி வருகின்றன.

(இ) சர்வதேச ஒத்துழைப்புகளில் பாதிப்பினை ஏற்படுத்தும் காரணிகளுமுள்ளன. உதாரணமாக, மோதல்கள் (யுத்தம்) ஏற்பட்டுள்ள பிரதேசங்களில் உணவுப் பொருட்கள், மருந்துகள் என்பவற்றின் விநியோகம் தடைப்படுகின்றது. பெற்றோலியத்தை உற்பத்தி செய்யும் நாடுகள் தாம் ஒன்றிணைத்து விலையை ஏற்றும்போது, ஏனைய நாடுகள் பொருளாதார ரீதியில் பாதிப்படைகின்றன.

(ஈ) சனத்தொகையின் விரைவான வளர்ச்சி, தேவைகள் அதிகரித்தல், வளங்களின் பற்றாக்குறை என்பன காரணமாக உலகில் எந்த நாடும் தனித்து வாழமுடியாது உள்ளது. எனவே நாடுகளுக்கு இடையே பரஸ்பர ஒத்துழைப்பு அவசியமாகின்றது.

**5. சர்வதேச வர்த்தகம் என்றால் என்ன?**

உலகநாடுகளிடையே வியாபார ரீதியாக பரிமாறிக் கொள்ளப் படும்,கொடுக்கல் வாங்கல்களைச் சர்வதேச வர்த்தகம் என்பர். ஒரு நாட்டில் உற்பத்தி செய்யமுடியாத பொருட்களை இன்னொரு நாட்டிலிருந்து வாங்குதல், ஒரு நாட்டில் உற்பத்தியாகும் மேலதிகப் பொருட்களை ஏனைய தேவையான நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தல், தம் நாட்டில் உற்பத்தியாகாத பொருட்களை இறக்குமதி செய்தல் ஆகிய நடவடிக்கைகள் சர்வதேச வர்த்தகத்தில் அடங்கும். நாடுகளிடையே ஏற்படும் தொடர்ச்சியான கேள்வி நிரம்பல்களைப் பூர்த்தி செய்யும் முகமாகவே சர்வதேச வர்த்தகம் நிகழ்கிறது. சர்வதேச வர்த்தகத்தில் வாங்கலும் விற்றலும் இரு முக்கிய அம்சங்களாகும்.

**6. சர்வதேச வர்த்தக விருத்திக்கான காரணிகள் எவை?**

(அ) நாடுகாண் பயணிகளின் விருத்தி – பதினைந்தாம் நூற்றாண்டில் கீழைத்தேச நாடுகள், புதிய கண்டங்கள் என்பன கண்டறியப்பட்டன. நாடுகளுக்கிடையே கொடுக்கல் வாங்கல் உறவுகள் வளர்ச்சியுற்றன.

(ஆ) கைத்தொழிற்புரட்சியின் காரணமாகப் பொருட்களின் உற்பத்தித் தொகை பன்மடங்காக அதிகரித்தமை.

(இ) போக்குவரத்து, செய்தித் தொடர்பாடல்களின் விருத்தி – உதாரணமாக, கப்பல் போக்குவரத்தில் ஏற்பட்ட

அபிவிருத்தி முக்கியமானது. பாரிய கப்பல்கள், குளிர்சாதன வசதிகள், கொள்கலன்கள், நவீன தொலைத் தொடர்பாடல் வசதிகள் என்பன சர்வதேச வர்த்தக விருத்திக்கு உதவுகின்றன.

(ஈ) தொழில்நுட்ப அறிவும், பணப்பரிமாற்றமும் விருத்தியடைந்தமை, இறக்குமதியாகும் பொருட்களுக்கு ஏற்றுமதியாகும் பொருட்கள் மூலம் கிடைக்கும் அங்கீகரிக்கப்பட்ட பணத்தின் மூலம் (டொலர், ஸ்ரேலிங் பவுண், மார்க், யென், யூரோ) சீர்செய்ய முடிகின்றமை சர்வதேச வர்த்தகத்தின் விருத்திக்கு உதவியுள்ளது.

(உ) பௌதிகச்சூழல், காலநிலை, இயற்கை வளங்கள் என்பவற்றைப் பொறுத்து குறிப்பிட்ட பொருட்கள் சிறப்பாக உற்பத்தி செய்ய முடிந்தமை.

உதாரணம் : இடைவெப்ப வலயநாடுகள் கோதுமை, அயனமண்டல நாடுகள் நெல்

(ஊ) சிறப்புத் தேர்ச்சி அடிப்படையில் சில பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டமை.

உதாரணம் : யப்பான் – மோட்டார்வாகனம், சுவிற்சலாந்து – கடிகாரம், நியூசிலாந்து – பாற்பொருட்கள்

(எ) சில நாடுகளில சில உற்பத்திப்பொருட்கள் இல்லாமை.

உதாரணம் : இலங்கையில் பெற்றோலியம், ஐக்கிய அமெரிக்காவில் தேயிலை

(ஏ) ஒருநாட்டின் உற்பத்தி பற்றாக்குறையாக இருப்பதால் அவற்றை வேறு நாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டிய தேவை.

உதாரணம் : இலங்கை அரிசியை இறக்குமதி செய்கிறது. சிங்கப்பூர் தைத்த ஆடைகளை இறக்குமதி செய்கிறது.

(ஐ) சில பொருட்களைத் தமது நாடுகளில் உற்பத்தி செய்வதிலும் பார்க்க வேறு நாடுகளிலிருந்து குறைந்த விலையில் இறக்குமதி செய்வது இலாபகரமாக இருத்தல்.

உதாரணம் : ஐக்கிய இராச்சியம் தனக்குத் தேவையான தானியங்களை இறக்குமதி செய்து கொள்கின்றது. ஐக்கிய இராச்சியத்தில் கோதுமையை உற்பத்திசெய்ய முடியும்.

(ஒ) நுகர்வோருக்குத் தெரிவுச் சுதந்திரத்தை அதிகரித்தல்.

உதாரணம்: யப்பானியப் பொருட்களை வாங்கும் விருப்பம்.

இவை அனைத்தும் சர்வதேச வர்த்தகத்தை விருத்தியடைய வைத்துள்ளன.

7. (i) **சர்வதேச வியாபாரத்தின் இரு பிரதான பகுதிகள் எவை?**

(ii) **அவற்றினைச் சுருக்கமாக விளக்குக.**

(i) (அ) இருபக்க வியாபாரம்

(ஆ) பல்பக்க வியாபாரம்

(ii) **(அ) இருபக்க வியாபாரம்**

இரு நாடுகளுக்கிடையில் மேற்கொள்ளப்படும் பொருட்கள், சேவைகள் என்பனவற்றின் பரிமாற்றம் இருபக்க வியாபாரம் எனப்படும். இரு நாடுகள் தமக்கிடையே செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி பொருட்களைப் பரிமாறிக் கொள்ளும் ஒப்பந்தத்தில் பொருட்களின், தரம், விலைகள், காலம், பணம் கொடுக்கல் வாங்கல் தீர்த்துக் கொள்ளும் முறை போன்றன இடம்பெற்றிருக்கும். ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே கொடுக்கல் வாங்கல் இடம்பெறும். சர்வதேச சந்தையில் விலை தளும்பினாலும் (உயர்ந்தாலும், குறைந்தாலும்) ஒப்பந்தப்படியே வர்த்தகம் நிகழும்.

உதாரணம்: இலங்கைக்கும் சீனாவுக்குமிடையிலான இறப்பர் - அரிசி ஒப்பந்தம்

**(ஆ) பல்பக்க வியாபாரம்**

இரண்டிற்கு மேற்பட்ட நாடுகளுக்கிடையே பொருள், சேவைப்பரிமாற்றம் பல்பக்க வியாபாரம் எனப்படும். சர்வதேச வர்த்தகத்தில் காணப்படும் பண அலகுகளால் கொடுக்கல் வாங்கல் தீர்க்கப்படும். சர்வதேச வர்த்தகத்தில் பல்பக்க வியாபாரமே பிரதான முறையாக உள்ளது.

உதாரணம்: இலங்கை தேயிலையைப் பிரித்தானியாவிற்கு ஏற்றுமதி செய்வதால் பெறும் ஸ்ரேலிங் பவுணை பாவித்து அமெரிக்காவிலிருந்து இறக்குமதியாகும் கோதுமைக்குரிய பணத்தைச் செலுத்துகிறது.




ஐக்கிய அமெரிக்க டொலர் நாணயம்

**8.** (i) ***இருபக்க வியாபாரத்தின் அனுகூலங்கள் எவை?***

(ii) ***பிரதிகூலங்கள் எவை?***

(i) ***அனுகூலங்கள் :***

ஒப்பந்தத்தின் பிரகாரம் வியாபாரம் நடைபெறுவதால் திட்டமிட்ட முறையில் உற்பத்தி செய்யலாம். உலக சந்தையின் கேள்வி நிரம்பல், விலைக் குறைவு எதுவும் இருபக்க வியாபாரத்தைப் பாதிக்காது. இரு பக்க வியாபாரம் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு வாய்ப்பானது. அபிவிருத்தியடைந்த நாடுகளின் சுரண்டல் நிலைகளிலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ள உதவுகின்றது.

(ii) ***பிரதிகூலங்கள் :***

இரு பக்க வியாபார ஒப்பந்தத்தைக் காலக்கெடு முடிவடையும் வரை மாற்றமுடியாதுள்ளது. உலக சந்தையில் பொருட்களின் விலை அதிகரிக்கும் போது, நட்டமடைய நேரிடுகிறது. மக்களின் நுகர்வுத் தெரிவுக்கு இருபக்க வியாபாரத்தில் இடமில்லை. பொருளுக்குப்பொருளே கிடைப்பதால், வேறு தேவையான பொருட்களை ஏனைய நாடுகளிலிருந்து கொள்வனவு செய்வதற்கு பண அலகு கிடைப்பதில்லை.

**9.** (i) ***பல்பக்க வியாபாரத்தின் அனுகூலங்கள் எவை?***

(ii) ***பிரதிகூலங்கள் எவை?***

(i) ***அனுகூலங்கள் :***

சர்வதேச வர்த்தகத்தின் பல்பக்க வியாபாரமே பெருவழக்காக உள்ளது. ஒரு நாடு தான் விரும்பிய பொருட்களை, அவ்வேளை நிலவுகின்ற சந்தை விலைக்கிணங்கக் கொள்வனவு செய்யமுடிகின்றது. தான் விரும்பும் பொருள் எந்நாட்டில் விலை மலிவாக இருக்கிறதோ அந்த நாட்டில்

இருந்து வாங்க முடிகிறது. அதே போல, தனது ஏற்றுமதிப் பொருளுக்கு எந்தநாடு அதிக விலை தருகின்றதோ அந்த நாட்டிற்கு ஏற்றுமதி செய்யமுடிகின்றது. அபிவிருத்தி அடைந்த நாடுகள் தமது பண இருப்பிற்கு ஏற்ப இறக்குமதி செய்துகொள்ள வாய்ப்பிருப்பதால், செலவுச் சிக்கனம் ஏற்படுகின்றது. அன்னியச் செலாவாணியைச் சேமிக்க முடிகின்றது. நாணய அலகு மூலம் பல்பக்க வியாபாரம் நடைபெறுவதால், வர்த்தகம் இலகுவாக விளங்குகிறது.

(ii) **பிரதி கூலங்கள் :**

மூலப்பொருட்களை ஏற்றுமதி செய்யும் நாடுகளிலும் பார்க்க முடிவுப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் நாடுகளே பல் பக்க வர்த்தகத்தில் பெருநன்மையடைகின்றன. ஆனால், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலும் பார்க்க அபிவிருத்தியடைந்த நாடுகளே நன்மை அடைகின்றன. உலக நாணய அலகுகள் மூலம் வர்த்தகம் நடைபெறு வதால், சர்வதேச நிலையில் அந் நாணயங்களுக்கு ஏற்படும் பெறுமதித் தளம்பல்கள் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்குப் பாதகமாக அமைந்து விடுகின்றன. வெளி நாட்டு நாணய மாற்றத்திற்கேற்பவே உண்ணாட்டு நாணயப் பெறுமானம் அமைகிறது.

10. (i) **வன் நாணயங்கள் என்றால் என்ன?**

(ii) **மென் நாணயங்கள் என்றால் என்ன?**

(i) **வன் நாணயங்கள்:**

சர்வதேச வர்த்தகத்தில் பெறுமதியின் அடிப்படையில் உலகம் ஏற்றுக்கொண்ட பண அலகுகளான அமெரிக்க டொலர், ஸ்ரேலிங் பவுண், ஜேர்மனிய டொயிஸ் மார்க், யப்பானின் யென் என்பன விளங்குகின்றன. இவை அதிக கேள்வியுடையனவாதலால், வன் நாணயங்கள் எனப் படுகின்றன.

(ii) **மென்நாணயங்கள் :**

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் பாவனையிலுள்ள நாணயங்கள், மென் நாணயங்கள் எனப்படுகின்றன. இவற்றின் கேள்வி குறைவாகும்.

உதாரணம் : போலந்து ஸ்லோட், சீனா யு ஆன், இலங்கை ரூபா, ஈரான் றியால்

**11.** (i) **யூரோ (Euro) நாணயம் என்றால் என்ன?**

(ii) **ஏன் இது அறிமுகமாகியது?**

(i) ஐரோப்பிய பொருளாதார சமூகத்தில் அங்கம் வகிக்கும் 11 நாடுகள் ஒருங்கிணைந்து 1999 ஜனவரியில், தமது நாடு களுக்கிடையில் ஒரு பொது நாணயமாக 'யூரோ'வை உருவாக்கியுள்ளன. அந்நாடுகளின் நாணய அலகே யூரோ வாகும்.

(ii) (அ) அமெரிக்க டொலரின் பெறுமதி அதிகரித்தமையால் ஐரோப்பிய நாடுகளின் பணப்பெறுமதி குறைவடைந் தது. அதன் விளைவாக ஐரோப்பிய நாடுகள் ஒன்றி ணைந்து 'யூரோ' என்ற பண அலகை நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளன.

(ஆ) யூரோ நாணயக் கொடுக்கல் வாங்கல்கள் இதற்கென உருவாக்கப்பட்ட ஐரோப்பிய மத்திய வங்கியால் நிர்வகிக்கப்படும்.

**12.** (i) **நாணயமாற்று விகிதம் என்றால் என்ன?**

(அ) ஒருநாட்டில் பயன்பாட்டில் உள்ள பண அலகை இன்னொரு நாட்டின் பண அலகுடன் மாற்றும்போது சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மாற்று விகிதம், நாணயமாற்று விகிதம் எனப்படும்.

(ஆ) பெறுமதி விகிதம் நாளுக்கு நாள் வேறுபடும். மாற்று விகிதத்தை இலங்கை மத்திய வங்கி ஒவ்வொரு நாளும் அறிவிக்கும்.

உதாரணம் : இலங்கையில் ஒரு அமெரிக்க டொலர் இன்று 92.3 ரூபா. ஒரு ஸ்ரேலிங் பவுண் 120.3 ரூபா இவ்வாறு மாறும்.

(ii) **நாணய மதிப்பிறக்கம் என்றால் என்ன?**

தேசிய நாணயத்தின் வெளிநாட்டுப் பெறுமதியைக் குறைத் தல் நாணய மதிப்பிறக்கம் எனப்படும். அதனால் தேசிய நாணய அலகு எண்ணிக்கை அதிகரிக்கும்.

உதாரணம் : 110 ரூபா – 1 அமெரிக்க டொலர்

(iii) **நாணய மதிப்பேற்றம் என்றால் என்ன?**

தேசிய நாணயத்தின் வெளிநாட்டுப்பெறுதியைக் கூட்டு தல் நாணய மதிப்பேற்றம் எனப்படும். அதனால் தேசிய நாணய அலகு எண்ணிக்கை குறையும்.

உதாரணம் : 96 ரூபா – 1 அமெரிக்க டொலர்

**13. வர்த்தக மீதி என்றால் என்ன?**

(அ) ஏற்றுமதிப் பொருட்கள் மூலம் கிடைக்கும் வருமானத்திற் கும் இறக்குமதிப் பொருட்கள் மூலம் ஏற்படும் செலவுக் கும் இடையிலான வித்தியாசம், வர்த்தக மீதி என்ப்படும்.

(ஆ) ஏற்றும்தி வருமானம் இறக்குமதிச் செலவிலும் கூடுதலா யின் அது சாதகமான வர்த்தகமீதி எனப்படும்.

(இ) அதேபோல ஏற்றுமதி வருமானம் இறக்குமதிச் செல விலும் குறைவாக இருக்குமாயின் அதனை பாதகமான வர்த்தகமீதி என்பர்.

(ஈ) இலங்கையின் வர்த்தகமீதி பெரும்பாலும் பாதகமான தாகவே இருந்து வருகின்றது.

**14. வர்த்தக விகிதம் என்றால் என்ன?**

ஒரு நாடு இறக்குமதி செய்யும் பொருட்களின் பெறுமதிக்கும், ஏற்றுமதி செய்யும் பொருட்களின் பெறுமதிக்கும் இடையி லுள்ள மாற்று விகிதம், 'வர்த்தக விகிதம்' எனப்படும்.

**15. சர்வதேச வர்த்தகத்தின் அனுகூலங்கள் எவை?**

(அ) ஒரு நாடு தன்னால் உற்பத்தி செய்துகொள்ள முடியாத பொருளை அவசியமாயின் வேறொரு நாட்டிலிருந்து இறக்குமதி செய்துகொள்ள முடிகின்றது.

(ஆ) ஒவ்வொரு நாடும் தன் மிகையான உற்பத்திப் பொருட் களை மற்றைய நாடுகளுக்கு விற்க முடிகின்றது.

(இ) குறைந்த செலவில் உச்சப்பயனுள்ள தரமான பொருட் களை அதிகளவில் உற்பத்தி செய்துகொள்ள முடிகிறது. அவற்றைச் சந்தைப்படுத்தச் சர்வதேச வர்த்தகம் உதவு கிறது.

(ஈ) நாட்டின் வளங்களை உச்சளவிற்குப் பயன்படுத்தி உற்பத்தி யில் ஈடுபட முடிகின்றது.

(ஊ) பல்வேறு நாடுகளில் உற்பத்தியாகும் பொருட்களைப் பரிமாறிக்கொள்வதில் நுகர்வுக்கோலம் விரிவடைகின்றது.

(ஊ) உற்பத்திக்கான விரிவான சந்தை வாய்ப்பு கிடைக்கின்றது.

(எ) எமது நாட்டில் உற்பத்தி செய்வதிலும் மலிவாகப் பொருட்களைப் பெறமுடிகின்றது.

(ஐ) நாடுகளுக்கிடையிலான அரசியல், சமூக, பொருளாதார உறவுகள் அதிகரிக்கின்றன. பண்பாட்டு உறவுகள் உருவாகின்றன.

***16. சர்வதேச வர்த்தகத்தில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் யாவை?***

(அ) **முதனிலைப் பொருட்களின் விலைகள் வீழ்ச்சியடைதலும் தளம்பலடைதலும் :**

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் முதனிலைப் பொருட்களையே ஏற்றுமதி செய்து வருகின்றன.

உதாரணம் : உலோகத் தாதுகள்

கைத்தொழிற்பயிர்கள், சுத்திகரிக்காத பெற்றோலியம். இந்த முதனிலைப் பொருட்களின் விலையை அவற்றினை வாங்கும் அபிவிருத்தியடைந்த நாடுகளே நிர்ணயிக்கின்றன. அதனால் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் பாதிப்புறுகின்றன.

(ஆ) **முதனிலை வர்த்தகப் பொருட்களை விற்பனை செய்வதிலுள்ள இடையூறுகள்:**

அபிவிருத்தியடைந்த நாடுகள் செயற்கை மூலப் பொருட்களை உற்பத்தி செய்வதிலீடுபட்டுள்ளன.

உதாரணம் : இயற்கை இரப்பருக்குப் பதிலாக செயற்கை இரப்பர், மரங்களுக்குப் பதிலாக பிளாஸ்ரிக்

மேலும் முதனிலைப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் தமக்குள் போட்டியிட நேரிடுகிறது.

உதாரணம் : தேயிலை

(இ) **முதனிலைப் பொருட்களின் பெறுமதியில் பெரும்பகுதி அபிவிருத்தியடைந்த நாடுகளைச் சென்றடைதல் :**

சர்வதேச வர்த்தகத்தில் கப்பல் போக்குவரத்துச் சேவைகள், விமானப் போக்குவரத்துச் சேவைகள், தொடர்பாடல்

சேவைகள், காப்புறுதிச் சேவைகள் ஆகியன அபிவிருத்தியடைந்த நாடுகளாலேயே பெரும்பாலும் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன. அதனால் இவற்றிற்காக அந்நியச் செலாவணியில் பெரும்பகுதியை அபிவிருத்தி அடைந்த நாடுகள் இழக்க நேரிடுகின்றது.

(ஈ) **அபிவிருத்தியடைந்த நாடுகள் மேற்கொள்கின்ற பாதுகாப்பு ஒழுங்குகள் :**

அபிவிருத்தியடைந்த நாடுகளின் முடிவுப் பொருட்களை தம் நாடுகளுள் சந்தைவாய்ப்புப் பெறுவதைத் தடுக்கும் வகையில் அபிவிருத்தியடைந்த நாடுகள் பாதுகாப்பு ஒழுங்குகளைச் செய்துள்ளன. உயர்ந்த சுங்கவரி, கோட்டா முறை இறக்குமதிக்கு அனுமதியளித்தல், இறக்குமதிக் கட்டுப்பாடுகள் என்பனமூலம் இவ்வாறான தடைகள் விதிக்கப்படுகின்றன.

(உ) **அபிவிருத்தியடைந்த நாடுகளின் உற்பத்திப் பொருட்களின் விலைகள் உயர்வடைதல் :**

அபிவிருத்தியடைந்த நாடுகளின் முடிவுப் பொருட்களின் விலை சந்தையில் அதிகரித்து வருவதைக் காணலாம். அதனால் அபிவிருத்தியடைந்த நாடுகள் பெறும் அந்நியச் செலாவணி இறக்குமதிக்குப் போதியதாகவில்லை. வர்த்தகமீதி எப்போதும் பாதகமாகவே அமைகின்றது.

**17. சர்வதேச வர்த்தகத்தில் அபிவிருத்தியடைந்த நாடுகள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் எவை?**

(அ) **மூலப்பொருட்களைப் பெறுவதில் சிக்கல்கள்:**

முன்னர் மூலப்பொருட்களை இலகுவாகவும் மலிவாகவும் வழங்கிய அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள், இன்று தமது மூலப்பொருட்களைப் பயன்படுத்தி முடிவுப் பொருட்களை உற்பத்தி செய்யத் தொடங்கியுள்ளன. அதனால் மூலப் பொருட்களைப் பெறுவதில் தடைகள் ஏற்பட்டுள்ளன.

(ஆ) **முடிவுப் பொருட்களை விற்பனை செய்வதில் உள்ள பிரச்சினைகள் :**

சர்வதேச சந்தையில் இன்று பல நாடுகளின் முடிவுப் பொருட்கள் குவிந்துள்ளன. அதனால் பெரும் போட்டி

நிலவுகின்றது. சீனா, தாய்வான், தென்கொரியா, ஹொங்கொங், மலேசியா போன்ற புதிய கைத்தொழில் நாடுகளின் முடிவுப் பொருட்கள் சர்வதேச சந்தையில் மலிவாக வந்துள்ளன. அதனால் அபிவிருத்தியடைந்த நாடுகளின் முடிவுப் பொருட்களுக்கான சந்தை வாய்ப்பும் குறைகிறது.

**(இ) பெற்றோலியத்தின் விலை உயர்வடைதல் :**

பெற்றோலிய விலையேற்றம் உலகநாடுகள் அனைத்தையும் பாதித்துள்ளன. குறிப்பாக அபிவிருத்தியடைந்த நாடுகளின் பொருளாதார அமைப்பு முற்றாகக் கைத்தொழில் மயமாக்கப்பட்டிருப்பதனால் பெற்றோலியம் அவசியமான பொருளாகவுள்ளது. அதனால் அபிவிருத்தியடைந்த நாடுகளுக்குப் பாதிப்பு அதிகம்.

**18. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் சர்வதேச வர்த்தகத்தின் போது எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்கு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் எவை?**

**(அ) ஏற்றுமதியைப் பன்முகப்படுத்தல் :**

சர்வதேச வர்த்தகத்தில் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் ஒன்று அல்லது இரண்டு வகையான விளைவுப் பொருட்களை ஏற்றுமதி செய்துவருகின்றன. உ+ம் : இலங்கை தேயிலை, இறப்பர், தென்னை ஆகிய மூன்று விளைபொருட்களில் பெரிதும் தங்கியுள்ளது. நியாயமான விலைகள் கிடைப்பது இல்லை. அதனால் ஏற்றுமதிப் பொருட்களைப் பன்முகப்படுத்துவதில் நிலையான வருமானம் பெற வாய்ப்பு உண்டாகும்.

உதாரணம் : இலங்கை கறுவா, கோப்பி, கொக்கோ, சிங்கோனா, கராம்பு, ஏலக்காய், சாதிக்காய், மிளகு, பாக்கு, வெற்றிலை முதலான பல்வகைப் பொருட்களை இன்று ஏற்றுமதி செய்து வருகின்றது. ஏற்றுமதி பன்முகப் படுத்தப்படும்போது ஒரு பொருளின் விலை வீழ்ச்சியடைந்தாலும் பெரிதளவிலான வருமானப் பாதிப்பு ஏற்படாது.

**(ஆ) வர்த்தக உடன்படிக்கைகள் ஏற்படுத்திக்கொள்ளல் :**

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் ஏனைய நாடுகளுடன் வர்த்தக உடன்படிக்கைகளை ஏற்படுத்தி, சர்வதேச

வர்த்தகத்தில் தோன்றும் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள் கின்றன.

உதாரணம் : தெற்காசிய நாடுகளின் சப்தா வர்த்தக உடன் படிக்கையினால், தென்னாசிய நாடுகள் எதிர் கொண்ட வர்த்தகப் பிரச்சினைகள் குறைந்துள் ளன.

**(இ) வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக்கொள்ளல் :**

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் சர்வதேச வர்த்தகத் தின்போது எதிர்நோக்கும் சென்மதி நிலுவைப் பிரச்சினைக் குப் பரிகாரமாக வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக் கொள்ள முனைகின்றன.

*19.* (i) **இலங்கையின் புராதன வியாபாரத் தொடர்புகள் எந்த நாடு களுடன் இருந்தன?**

கிரேக்கம், உரோமம், பாரசீகம், சீனா, இந்தியா, பர்மா (மியான்மார்)

(ii) **புராதன வியாபாரத்தில் இலங்கை இறக்குமதி செய்த பொருட்கள் எவை?**

பட்டுத்துணி, பீங்கான் பொருட்கள், சுகந்த வாசனைப் பொருட்கள்

(iii) **புராதன இலங்கையின் ஏற்றுமதிப்பொருட்கள் எவை?**

வாசனைத் திரவியங்கள், மாணிக்கம், முத்து, யானைத் தந்தங்கள்

(iv) **மேலைத்தேசத்தவரின் வருகையால் இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களில் முக்கியம் பெற்றவை எவை?**

தேயிலை, இறப்பர், தென்னை

*20.* (i) **இலங்கையின் சர்வதேச வர்த்தக நடவடிக்கைகளை விரிவு பெறச் செய்த காரணி எது?**

1977 ஆம் ஆண்டில் ஆரம்பித்த திறந்த பொருளாதாரக் கொள்கையாகும்.

(ii) **இலங்கையின் விவசாய ஏற்றுமதிப்பொருட்கள் எவை?**

தேயிலை, இறப்பர், தெங்குப் பொருட்கள், ஏனைய சிறு ஏற்றுமதிப் பொருட்களான கறுவா, கொக்கோ, சிங்கோனா, கராம்பு ஏலக்காய் என்பன.

(iii) **இன்று இலங்கையின் ஏற்றுமதிப்பொருட்களில் முக்கியத் துவம் பெற்றிருக்கும் கைத்தொழில் சார்ந்த பொருள் எது?**

தைத்த ஆடைகள்

(iv) **இலங்கையின் ஏற்றுமதியிலிடம்பெறும் கனிப்பொருட்கள் எவை?**

சிலிக்கா, இல்மனையிட், காரியம், இரத்தினக் கற்கள்

(v) **இலங்கையின் இன்றைய பிரதான ஏற்றுமதி நாடு எது?**

ஐக்கிய அமெரிக்கா, 40 சதவீத ஏற்றுமதி ஐக்கிய அமெரிக்கா வுக்கே அனுப்பப்படுகின்றது. இதில் 74 சதவீதம் தைத்த ஆடைகளாகும்.

(vi) **இலங்கையின் ஏனைய முக்கிய ஏற்றுமதி நாடுகள் எவை? வரிசைப்படுத்துக.**

ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி, யப்பான், மத்திய கிழக்கு நாடுகள், கிழக்கு ஐரோப்பிய நாடுகள், ருஷ்யா.

(vii) **இலங்கையின் இறக்குமதிப் பொருட்கள் என**

**(அ) நுகர் பொருட்கள்**

**(ஆ) இடைநிலைப் பொருட்கள்**

**(இ) மூலதனப் பொருட்கள் என்பனவாம்.**
**ஒவ்வொன்றிற்கும் உதாரணங்கள் தருக.**

**(அ) நுகர்பொருட்கள்**

உணவுப் பொருட்களான தானியங்கள் (அரிசி, கோதுமை), பால்மா வகைகள்

**(ஆ) இடைநிலைப் பொருட்கள்**

நெசவுப் பொருட்கள், பெற்றோலியப்பொருட்கள், வைரங்கள்

**(இ) மூலதனப் பொருட்கள்**

இயந்திர சாதனங்கள், உபகரணங்கள், ரக்ரர்கள், லொறிகள்

(viii) **இலங்கைக்கு இறக்குமதி செய்யும் பிரதான நாடுகளை வரிசைக்கிரமத்தில் கூறுக.**

யப்பான், இந்தியா, சிங்கப்பூர், கொரியக்குடியரசு, தாய்வான், ஐக்கியஇராச்சியம், ஐக்கிய அமெரிக்கா

21. **வெளிநாட்டு உதவி என்றால் என்ன?**

ஒரு நாட்டின் பொருளாதார விருத்திக்கும் ஏனைய வாழ்க்கை நலன்களின் விருத்திக்கும் இலவசமாகவும், குறைந்த வட்டியிலும் பெறப்படும் கடன்கள் வெளிநாட்டு உதவிகள் எனப்படும்.

22. **அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் ஏன் வெளிநாட்டு உதவிகளை நாடுகின்றன?**

(அ) அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு முதனிலைப் பொருட்களின் ஏற்றுமதிமூலம் கிடைக்கின்ற வெளிநாட்டு வருமானம், தமக்குத் தேவையான உணவுப்பொருட்கள், மருந்துப்பொருட்கள், மூலதனப்பொருட்கள் என்பனவற்றை கொள்வனவு செய்யப் போதுமானதாகவில்லை.

(ஆ) இறக்குமதிச் செலவுகள் அதிகரிப்பதனாலும் ஏற்றுமதி வருமானம் குறைவடைவதனாலும் பாதகமான வர்த்தக மீதிகள் தோன்றுகின்றன. அதன் விளைவாக உற்பத்தி வீழ்ச்சி ஏற்படுகின்றது.

(இ) நாட்டின் தேவைகள், உற்பத்திகள், சொத்துக்கள் என்பனவற்றைப் பராமரிப்பதற்கான நடைமுறைச் செலவுகள் மீண்டெழும் செலவுகளுக்காக பண ஒதுக்கீடுகள் அதாவது, கடன், வட்டி என்பனவற்றை மீளச் செலுத்த நேரிடுகின்றன.

(ஈ) வெளிநாடுகளின் தொழில்நுட்பஅறிவு, சேவைகளைப் பெற்றுக்கொள்ளல் அவசியமாகின்றது.

(எ) நாட்டின் அபிவிருத்திக்கான புதிய திட்டமிடல் முதலீடுகள் என்பனவற்றிற்கு நிதி இன்மை இந்த நாடுகளில் நிலவுகின்றது.

இவை காரணமாக வெளிநாட்டு உதவிகளை நாட வேண்டிய இக்கட்டில், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுள்ளன.


23. **மார்ஷல் திட்டம் என்றால் என்ன?**

இரண்டாம் உலக மகாயுத்தத்தினால், ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரச் சீர்குலைவை நீக்கவும், மக்களின் இன்னல்களைப் போக்கவும் அமெரிக்காவினால் ஐரோப்பிய நாடுகளுக்கு உதவிகள் வழங்கும் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

அதனை மார்ஷல் திட்டம் என்பர். அது பின்னர் உலகின் ஏனைய நாடுகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டது.

**24. வெளிநாட்டு உதவிகள் எவ்வெவ் முறைகளில் வழங்கப்படுகின்றன?**

நன்கொடைகள், கடன்வசதிகள், சேவைகள்




**25.** (i) **வெளிநாட்டு நன்கொடைகள் எவ்வாறு பரிமாறிக் கொள்ளப் படுகின்றன?**

(அ) நாடுகளிடையே பரிமாறிக்கொள்ளப்படுகின்றன.

(ஆ) உலக நிதி நிறுவனங்களும் நாடுகளுக்கும் நன் கொடைகள் வழங்கப்படுகின்றன.

(ii) **எவ்வகையான நன்கொடைகள் பொதுவாக வழங்கப் படுகின்றன?**

நிதி, இயந்திர உபகரணங்கள், பொருட்கள், கட்டிடங்கள், சேவைகள்

(iii) **இவ்வகையான நன்கொடைகள் எதற்காக வழங்கப்படுகின்றன.**

விவசாயம், கைத்தொழில், வைத்தியம், கல்வி, மீன்பிடி, சூழற்பாதுகாப்பு ஆகிய பல்வேறு அபிவிருத்திகளுக்காக வழங்கப்படுகின்றன.

**26.** (i) **வெளிநாட்டுக் கடன்கள் பல்வேறு தேவைகளுக்காக பல நிபந்தனைகளின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன. எவ்வாறான கடன்கள் வழங்கப்படுகின்றன?**

(அ) வட்டியோடு கூடிய கடன்கள்

(ஆ) வட்டியில்லாத கடன்கள்

இவை,

(1) நீண்டகாலக் கடன்களாகவும்

(2) குறுகியகாலக் கடன்களாகவும் வழங்கப்பட்டு வருகின்றன.

அவை,

(1) பண்ட உதவிக் கடன்களாகவும் 1996இல் இலங்கை யின் வெளிநாட்டுக்கடன் 52 117 கோடிகளுமாகும்.

(2) வேலைத்திட்டக் கடன்களாகவும் அமையும்.

(ii) **வெளிநாட்டுதவிகள் பொருட்களாக வழங்கப்படுவதன் தன்மைகளைச் சுருக்கமாக விளக்குக.**

(அ) இயந்திர உபகரணங்கள், வாகனங்கள் என்பன வெளி நாட்டு உதவியாக வழங்கப்படுகின்றன.

(ஆ) விவசாயம், கைத்தொழில்கள், கல்வி, சுகாதாரம், நீர்ப்பாசனம் என்பனவற்றின் பயன்பாட்டுக்கு இவை வழங்கப்படுகின்றன.

(இ) பல்கலைக்கழகங்கள், வைத்தியசாலைகள், சமூக தாபனங்களுக்குரிய கட்டிடங்கள் முதலானவையும் நன்கொடைகளாக வழங்கப்பட்டு வருகின்றன.

உதாரணம்: பேராதனை வைத்தியசாலை
– யப்பான்

ரூபவாஹினி தொலைக்காட்சி நிலையம்
– யப்பான்

பண்டாரநாயக்க சர்வதேச மண்டபம்
– சீனா

மகாவலிகங்கைத் திட்டம்
– பெரிய பிரித்தானியா, கனடா, ஜேர்மனி, சுவீடன்

(iii) **வெளிநாட்டுதவியாக சேவைகள் கிடைக்கும் தன்மையை விளக்குக.**

(அ) வைத்தியம், பொறியியல், விவசாயம், மீன்பிடி ஆகிய துறைகளில் ஆராய்ச்சி, பயிற்றுவித்தல் போன்ற வற்றுக்கு வெளிநாடுகளிலிருந்து நிபுணத்துவம் பெற்றவர்கள் வருகின்றனர்.

(ஆ) இத்துறைகளில் பணி செய்வோருக்குப் புலமைப் பரிசில்கள் வழங்கி, பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இதற்கு உலகநாடுகள் பலவும் முன்வந்துள்ளன.

**27. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு உதவும் உலக நிறுவனங்கள் எவை?**

(அ) உலகவங்கி (IBRD)

(ஆ) சர்வதேச அபிவிருத்திச் சங்கம்(IDA)

(இ) ஆசிய அபிவிருத்திச் சங்கம் (ADB)

(ஈ) கொழும்புத்திட்டம் (CLOMBO PLAN)

(உ) ஒபெக் நிறுவனம் (OPEC)

(ஊ) ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்த நிறுவனங்கள்.

**28. உலகவங்கி (IBRD) யின் பணிகள் எவை?**

(அ) அங்கத்துவநாடுகளின் அங்கத்துவப் பணத்திலிருந்து அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்குக் கடன் உதவி களை வழங்கி வருகின்றது.

(ஆ) அந்நாடுகளில் வாழும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவது.

(இ) வருமானம் தரக்கூடிய திட்டங்களுக்கு மாத்திரம் கடன் வழங்குதல்.

**29. உலகவங்கியின் ஒரு அங்கமாக சர்வதேச அபிவிருத்திச்சங்கம் இருந்தும், உலக வங்கியின் பணிகளிலிருந்து எவ்வாறு வேறுபடு கின்றது?**

(அ) உலக வங்கியின் நிபந்தனைகளைவிட தளர்த்தப்பட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் உதவி வழங்கப்படும் சங்கமாகும்.

(ஆ) ஒரு அரசாங்கத்தின் பிணையின்றி அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலுள்ள திட்டங்களுக்கு இது உதவி வழங்கு கின்றது.

(இ) அதிகமான கடன்கள் விவசாயம், சக்தி, கிராமிய அபிவிருத்தி என்பனவற்றிற்கு வழங்கப்படுகின்றது.

**30. ஆசிய அபிவிருத்தி வங்கி குறித்து முக்கிய அம்சங்களைத் தருக.**

(அ) 1966இல் ஆரம்பிக்கப்பட்டது. பிலிப்பைன் நாட்டின் தலை நகரான மணிலாவிலுள்ளது.

(ஆ) ஆசிய பசுபிக் நாடுகள், ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் என்பன இதன் அங்கத்துவ நாடுகளாகவுள்ளது.

(இ) ஆசிய பசுபிக் நாடுகளுக்கு உதவி வழங்குவதே இவ் வங்கியின் நோக்கமாகும்.

(ஈ) சக்தி, கல்வி, நகராக்கம், நீர்ப்பாசனம், சுகாதாரம் ஆகிய அபிவிருத்திகளுக்கு ஆசிய வங்கி உதவி வழங்கி வருகின்றது.

**31. கொழும்புத் திட்டம் குறித்த தகவல்களைத் தருக.**

(அ) 1950இல், தெற்கு ஆசியா, தென்கிழக்கு ஆசியா ஆகிய நாடுகளின் பொருளாதார சமூக அபிவிருத்திக்காக இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

(ஆ) இதன் தலைமையகம் கொழும்பில் அமைந்துள்ளது.

(இ) இத்திட்டத்தில் ஆரம்பத்தில் பொதுநலவாய நாடுகள் அங்கம் வகித்தன. இன்று பொதுநலவாயத்திலில்லாத நாடுகளும், குறிப்பாக ஐக்கிய அமெரிக்காவும் தொடர்பு கொண்டுள்ளது.

(ஈ) இத்திட்டத்தின் மூலம் வட்டியில்லாக்கடன், இயந்திர உபகரணங்கள், கோதுமை மா, நிபுணத்துவப்பயிற்சி, பல்கலைக்கழகங்களுக்கான உபகரணங்கள் என்பன உதவியாக வழங்கப்படுகின்றன.

**32. ஒபெக் நிறுவனம் குறித்து சிறு விளக்கந் தருக.**

(அ) பெற்றோலியத்தை உற்பத்திசெய்து ஏற்றுமதி செய்யும் நாடுகள் ஒன்றிணைத்து ஏற்படுத்திக் கொண்ட நிறுவனமே ஒபெக் ஆகும்.

(ஆ) பெற்றோலியத்தின் விலையை உயர்வாகவும், நிலையாகவும் வைத்திருப்பதே இதன் நோக்கமாகும்.

(இ) பெற்றோலியத்தின் விலை உயர்வால் பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு உதவி செய்வதும் இத்தாபனத்தின் நோக்கம்.

**33. குறைவிருத்தி நாடுகளுக்கு உதவும் ஐக்கிய நாடுகளுடன் இணைந்த நிறுவனங்கள் எவை?**

(அ) உலக உணவு விவசாயத்தாபனம்

(ஆ) ஐ.நா. கைத்தொழில் அபிவிருத்தி நிதியம்

(இ) யுனெஸ்கோ நிறுவனம்

(ஈ) ஐ.நா.சிறுவர் நிதியம்

(உ) உலக சுகாதாரத் தாபனம்

(ஊ) ஐ.நா. சனத்தொகை நிதியம்

(அடுத்த அத்தியாயத்தில் விரிவாக நோக்குவோம்.)

**34.** (i) **வெளிநாட்டு வியாபாரம் தொடர்பான சர்வதேச தாபனங்கள் எவை?**

(அ) ஐரோப்பிய பொதுச்சந்தைச் சமூகம்

(ஆ) உங்டாட் (UNCTAD)

(இ) சர்வதேச வர்த்தகச் சங்கம் (WTO)

(ii) **ஒவ்வொன்றினதும் பணிகளை விளக்குக.**

**(அ) ஐரோப்பிய பொதுச்சந்தைச் சமூகம்**

பிரான்ஸ், ஜேர்மனி, ஒல்லாந்து, லக்ஷம்பேர்க், இத்தாலி, ஐக்கிய இராச்சியம், ஸ்பெயின், போர்த்துக்கல் முதலான இருபது நாடுகளின் கூட்டு இதுவாகும். அங்கத்துவ நாடுகளுக்கிடையே வியாபாரத் தீர்வைகள் இருக்காது. மூலதனம், தொழிலாளர் என்பன பரிமாறிக் கொள்ளப்படும். அனைத்து நாடுகளும் ஒரே நாடு போன்று இயங்குகின்றன.

**(ஆ) உங்டாட்**

(1) 1964 இல் வர்த்தகத்திற்கும் அபிவிருத்திக்குமான ஐ. நா. மாநாடு இதுவாகும்.

(2) அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் முதனிலைப் பொருட்களுக்கு தக்கவிலை பெற்றுக் கொடுப்பதும், இந்நாடுகளில் கைத்தொழில் அபிவிருத்திக்காகத் தொழில்நுட்பத்தைப் பெற்றுக் கொடுப்பதும் இந்த அமைப்பின் பிரதான பணிகள்

(3) இதில் 179 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. சுவிற்சலாந்திலுள்ள ஜெனிவாவில் தலைமைக் காரியாலயம் உள்ளது.

**(இ) சர்வதேச வர்த்தக சங்கம்**

(1) வர்த்தகத்திற்கும் தீர்வைக்குமான பொது ஒப்பந்தம் இன்று சர்வதேச உலக வர்த்தக சங்கமாக (WTO) மாறியுள்ளது.

(2) வெளிநாட்டு வர்த்தகத் தொடர்பாகக் காணப்படும் தீர்வைகள், இறக்குமதிக் கட்டுப்பாடுகளை நீக்கி சர்வதேச வர்த்தகத்தை விரிவடையச் செய்யும் நோக்கினது.

(3) முதனிலைப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் பாதகமான நிலமைகளை இச்சங்கம் கூடியவரை களைய முயல்கின்றது.

**35. சர்வதேச வர்த்தகத்தில் அபிவிருத்தியடைந்த நாடுகள், பல்தேசியக் கம்பனிகளை உருவாக்கிக் கொண்டு உலக வர்த்தகத்தில் ஆதிக்கம் செலுத்துகின்றன. அதனால் பாதிப்புறும் அபிவிருத்தியடைந்த நாடுகள் யாது செய்ய வேண்டும்?**

முதனிலைப் பொருட்களை உற்பத்தி செய்யும் மூன்றாம் உலக நாடுகள், ஆசிய, அமெரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளைக் கொண்ட பலம்வாய்ந்த ஒரு வர்த்தகக் கூட்டை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

**36.** (i) **கோளமயமாதல் என்றால் என்ன?**

(ii) **அதன் அனுகூலங்கள் எவை?**

(iii) **அதன் பிரதிகூலங்கள் எவை?**

(i) (அ) உலகநாடுகள் அனைத்தும் சமூக, பொருளாதார ரீதியில் ஒன்றிணைதலை கோளமயமாதல் அல்லது உலகமயமாதல் (Globalisation) என்பர்.

(ஆ) நாடுகாண் பயணங்கள், சர்வதேச வர்த்தக உறவுகள் உலகநாடுகளை இணைத்துள்ளன.

(இ) உலகின் 97சதவீதமான நாடுகள் சுதந்திரமானவை. (Independent Nations) ஆனால், எல்லா நாடுகளும் ஏதோ ஒருவகையில் ஒவ்வொரு நாட்டிலும் தங்கியுள்ளன. (Interdependent Nations)

(ஈ) தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியால் தகவல் தொழில் நுட்ப வளர்ச்சியால் (Information Technology) இன்று உலக நாடுகள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

(உ) உலக நிறுவனங்கள் ஒவ்வொரு நாட்டிற்கும் ஏதோ ஒரு வகையில் உதவியாகவுள்ளன. இவை

அனைத்தும் இன்று 'கோளக்கிராமம்' (Global Village) அல்லது எல்லைகளால் பிரிக்கப்படாத உலகம் (Boarderless world) என்ற கருத்தினைத் தோற்று வித்துள்ளன.

(ii) **கோளமயமாதலின் அனுகூலங்கள்**

(அ) நாடுகள் ஒன்றிற்கு ஒன்று சகல நடவடிக்கைகளிலும் துணையாக இருத்தல்.

(ஆ) அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் அபிவிருத்தி பெறுவதற்கான மூலதன வருகை, தொழில்நுட்ப வருகை, முகாமைத்துவ வருகை என்பன ஏற்படுதல்.

(இ) நுகர்கோலம் மாறி, உலக மக்கள் அனைவரும் எல்லா வகையான உற்பத்திப் பொருட்களை நுகரமுடிதல்.

(ஈ) அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் அந்நிய முதலீடுகள் ஏற்படுவதால் உள்ளூர் மூல வளங்கள் பயன்படுத்தப்படும், தொழில் வாய்ப்புக்கள் அதிகரிக்கும் வாழ்க்கைத்தரம் உயரும். பொதுவாக பொருளாதார அபிவிருத்தி ஏற்படும்.

(iii) **கோள மயமாதலின் பிரதிகூலங்கள்.**

(அ) அந்நிய முதலீடுகளைச் செய்யும் பல்தேசிய கம்பனி களின் ஆதிக்கம் அதிகரித்தல்.

(ஆ) உள்ளூர் மூலவளங்களின் அழிவு

(இ) உள்ளூருக்கு பொருத்தமற்ற தொழில்நுட்ப வரவு

(ஈ) சூழல் பாதிப்படைதல்

(உ) சமூக, கலாசாரச் சீரழிவுகள் ஏற்படுதல்.


(ஊ) தனித்துவ அடையாளங்களை இழத்தல்.

(எ) சமதர்மப் பொருளாதாரம் அழிந்து, முதலாளித்துவப் பொருளாதாரம் மேலோங்கல்.

# சர்வதேச வர்த்தகமும் சர்வதேச ஒத்துழைப்பும் - வினாவிடைகள்

## பகுதி - I

★ தரப்பட்டுள்ள தேசப்படத்தைப் பயன்படுத்தி 1 தொடக்கம் 5 வரையான வினாக்களுக்கு விடை எழுதுக.




1. இலங்கையுடனான வர்த்தகத்தில் தைத்த ஆடைகள் மிகக் கூடுதலாக வாங்கிக் கொள்ளும் நாடு எது?

   1) - G  2) - D  3) - A  4) - E

2. ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைமைக் காரியாலயம் அமைந்துள்ள நாடு

   1) - C  2) - I  3) - D  4) - B

3. ஒபெக் நிறுவனத்தில் அங்கம் வகிக்கும் நாடுகள் உள்ள பகுதி

   1) - H  2) - G  3) - C  4) - F

4. உங்டாட் நிறுவனத்தின் தலைமைப்பீடம் அமைந்துள்ள இடம்

   1) - G  2) - D  3) - A  4) - C

5. **பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தை இலங்கைக்கு நன்கொடையாகக் கட்டி வழங்கிய நாடு எது?**

*1)* - B *2)* - J *3)* - F *4)* - C

6. **சார்க் நாடுகள் ஒன்றிணைந்து உருவாக்கிய 'சப்ரா'** (SAFTA) **உடன்படிக்கையின் அடிப்படை நோக்கம்**

*1)* வெளிநாட்டு வியாபாரத்தில் சார்க் நாடுகளினால் அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்குப் பாய்ந்து செல்லும் பெருமளவு பணத்தைக் குறைத்துக் கொள்ளல்.

*2)* சார்க் நாடுகளிடையே குறுகியகால நீண்டகால வியாபார உடன்படிக்கைகளை ஏற்படுத்தல்.

*3)* சார்க் நாடுகளுக்கிடையிலான வியாபாரத்தில் உறுப்பு நாடுகளின் தெரிவுசெய்யப்பட்ட பொருள்களுக்குச் சுங்கவரி நிவாரணம் வழங்குதல்.

*4)* சார்க் நாடுகளுக்கிடையிலான வியாபாரம் தடைகளின்றிச் சுதந்திரமாக நடைபெற உதவுதல்.

7. **சப்தா ஒப்பந்தம் எந்த நாடுகளுக்கிடையே கைச்சாத்திடப்பட்டது?**

*1)* ஐரோப்பிய பொதுச்சந்தை நாடுகள்

*2)* பொதுநலவாய அமைப்பு நாடுகள்

*3)* சார்க் நாடுகள்

*4)* G7 குழு நாடுகள்

8. **இலங்கை போன்ற நாடுகள் தொடர்ந்து உணவுப் பொருட்களை இறக்குமதி செய்தல் பொருத்தமற்றது. ஏனெனில்**

*1)* எமது நாட்டிற்குத் தேவையான உணவுப் பொருட்களை இங்கு உற்பத்தி செய்வதற்குத் தேவையான பின்னணி காணப்படுதல்.

*2)* உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதற்குப் பெருமளவு பணத்தைச் செலவிட வேண்டியுள்ளது.

*3)* உணவு உற்பத்தி செய்யும் நாடுகள் காலத்திற்குக் காலம் உணவு விலையை அதிகரித்தல்.

*4)* உணவை இறக்குமதி செய்வதனால் உண்ணாட்டு உற்பத்தியாளர்கள் அதைரியப்படுதல்.

9. **ஏற்றுமதி இறக்குமதிப் பொருட்களின் விலை மட்டங்களுக்கு ஏற்ப தீர்மானிக்கப்படுவது பின்வருவனவற்றுள் எது?**

*1)* வர்த்தகநிலுவை *2)* விலைத்தளும்பல்கள்

*3)* நாணய மாற்றுவிகிதம் *4)* வர்த்தக விகிதம்

10. உலகில் பல்வேறு நாடுகளும் ஒன்றிலொன்று தங்கியிருத்தல் ஆரம்பமாவதற்குச் செல்வாக்குச் செலுத்திய அடிப்படைக் காரணி பின்வருவனவற்றுள் எது?

1) பொருளாதார அபிவிருத்தியும் சனத்தொகைப் பெருக்கமும்.
2) இயற்கை வளங்களின் சமனற்ற பரம்பல்.
3) மறுமலர்ச்சிக் காலத்தில் ஏற்பட்டுள்ள நாடுகாண் பயணங்கள்.
4) கைத்தொழிற்புரட்சி காரணமாகத் தொழிற்துறையில் ஏற்பட்ட விளைவு.

11. இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் சர்வதேச வர்த்தகத்தில் வர்த்தக நிலுவையைச் சாதகமாக்கிக் கொள்வதற்கு முக்கியமான நடவடிக்கை பின்வருவனவற்றில் எதுவாக அமையும்?

1) நுகர்வுக்கான செலவைக் குறைப்பதும் ஏற்றுமதிக்கான பொருட்களை உற்பத்தி செய்வதற்கு முதலீட்டாளர்களை ஊக்குவித்தலும்.
2) ரூபாவின் பெறுமானத்தைக் குறைத்தலும் ஏற்றுமதி வரிகளைக் குறைத்தலும்.
3) அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கிடையில் வர்த்தகக் கூட்டுக்களை ஏற்படுத்தல்.
4) அபிவிருத்தியடைந்த நாடுகளுடன் இருபக்க வர்த்தக ஒப்பந்தங்களை ஏற்படுத்திக்கொள்ளல்.

12. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் அவற்றின் இறக்குமதிச் செலவுகளைக் குறைப்பதற்குப் பின்பற்றக்கூடிய மிகப் பொருத்தமான முறையைப் பின்வருவனவற்றிலிருந்து தெரிவு செய்க.

1) இறக்குமதியை வரையறை செய்தலும் அவசியமான பொருட்களைப் பங்கீட்டுமுறையில் வழங்கலும்.
2) இறக்குமதிப் பிரதியீட்டுக் கைத்தொழில்களைத் தேசிய மூலப்பொருட்களைக் கொண்டு ஆரம்பிக்க ஊக்கமளித்தல்.
3) இறக்குமதிப் பொருட்களின்மீது அதிகளவு சுங்கவரிகளை விதித்தல்.
4) உழைப்புச் செறிவு மூலம் வளங்களைப் பயன்படுத்தச் சந்தர்ப்பங்கள் வழங்குதல்.

13. **சர்வதேச வர்த்தகத்தில் மிக அதிக காவு பண்டங்களைப் போக்கு வரத்துச் செய்யப்படுவது பின்வரும் சமுத்திரங்களில் எது?**

1) பசுபிக்
2) அத்திலாந்திக்
3) இந்து
4) ஆர்க்டிக்

14. **மத்தியதரைக்கடலைச் சூழ்ந்திருக்கும் நாடுகளுக்கும் கிழைத்தேசங் களுக்குமிடையில் வர்த்தகத் தொடர்புகள் ஏற்பட்டது,**

1) நாடுகாண் பயணங்களின் பின்னர்
2) மத்திய காலப்பகுதிக்கு முன்னர்
3) கல்வி மறுமலர்ச்சியின் பின்னர்
4) மத்திய காலப்பகுதிக்குப் பின்னர்

15. **இலங்கையின் பிரதான ஏற்றுமதிப் பொருட்களின் விலைகளின் தளம்பல்கள் ஏற்படுவதனைக் குறைப்பதற்குப் பொருத்தமான காரணி யாது?**

1) முதனிலைப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் நாடுகளுடன் புரிந்துணர்வுடன் செயற்படுதல்.
2) உலக சந்தைக்கு அனுப்பும் பொருட்களின் அளவைக் குறைத்தல்.
3) சிறு ஏற்றுமதிப் பொருட்களை ஏற்றுமதிசெய்ய ஊக்க மளித்தல்.
4) தேசிய நுகர்வுகளை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்தல்.

16. **பின்வரும் அம்சங்களில் அபிவிருத்தியடைந்த நாடுகளுடன் மட்டும் தொடர்புள்ள விடைத்தொகுதி யாது?**

அ – வருமானத்தில் சேமிப்புக்கு மேலாக நுகர்வுக்குச் செலவு செய்தல்.
ஆ – முடிவுப் பொருட்களை ஏற்றுமதி செய்தல்.
இ – முதல் விளைவுப் பொருட்களை ஏற்றுமதி செய்தல்.
ஈ – மூலப்பொருட்களை இறக்குமதி செய்தல்.

1) அ, ஆ  2) ஆ, இ  3) இ, ஈ  4) ஆ, ஈ

**17. இலங்கையின் தற்கால ஏற்றுமதிப் பண்டங்கள் தொடர்பிலே பின்வருவனவற்றுள் பிழையான கூற்றானது?**

1) தைத்த ஆடைகள், சிறு ஏற்றுமதிப் பொருட்கள், இரத்தினங்கள் போன்ற ஏற்றுமதிப் பண்டங்களின் முக்கியத்துவம் படிப்படியாக அதிகரிக்கின்றது.

2) தேயிலை, இறப்பர், தெங்குப் பொருட்கள் முதலான பாரம்பரிய ஏற்றுமதிப் பொருட்களுக்குக் கொடுக்கப்படும் முன்னுரிமை படிப்படியாகக் குறைகின்றது.

3) நமது ஏற்றுமதிப் பொருட்களை இறக்குமதி செய்யும் நாடுகள், அப்பொருட்களை அத்தியாவசியமெனக் கருதுவதால், கொள்வனவு செய்யப்படும் தொகை மாற்றத்திற்கு உள்ளாகாமல் இருக்கின்றது.

4) ஏற்றுமதிப் பொருட்கள் விலை தளம்பல்களுக்கு உட்படுவதனால் ஏற்றுமதி வருமானம் தொடர்ச்சியாக மாற்றத்திற்குள்ளாகிறது.

**18. வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகளை உருவாக்கிய முக்கிய காரணி அல்லாதது?**

1) நாடுகாண் பயணங்கள்

2) போக்குவரத்தினதும் செய்தித் தொடர்பாடலினதும் வளர்ச்சி

3) யூரோ நாணயத்தின் அறிமுகம்

4) கைத்தொழிற் புரட்சி

**19. சர்வதேச வர்த்தகத்தில் பயன்படுத்தப்படும் வன்நாணயங்களின் தொகுதி எது?**

1) ஸ்லோட், யு ஆன், ரூபா, றியால்

2) அமெரிக்க டொலர், ஸ்ரேலிங் பவுண், டொயிஸ் மார்க், யென்

3) அமெரிக்க டொலர், யூரோ, ரூபியா, பெஸோ

4) எகிப்திய பவுண், கனேடிய டொலர், தினார், ரூபா

## பகுதி - II

1. (i) பண்டைக்காலத்தில் சர்வதேச வர்த்தகத்தின் மத்திய நிலையமாக இலங்கை முக்கியமான இடத்தை ஏன் பெற்றுக் கொண்டது என்பதை இரு காரணிகள் மூலம் விளக்குக.

(ii) (அ) இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையிலான குறுகிய கடற்பரப்பைப் பெருங்கப்பல்கள் பயணம் செய்வதற்குப் பொருத்தமான வகையில் ஆழமாக்குவதற்கான கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது.

(ஆ) இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் பாலம் ஒன்றைக் கட்டுவதற்கான ஆலோசனையும் அண்மையில் முன்வைக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய (அ), (ஆ) எனும் ஆலோசனைகள் நடைமுறைப்படுத்தப்பட்டால் எமது நாட்டில் அபிவிருத்திச் செயன்முறையில் அவை எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடுமென வேறுவேறாக விளக்குக.

2. புனரமைப்புக்கும் அபிவிருத்திக்குமான சர்வதேச வங்கி / ஆசிய அபிவிருத்திவங்கி / ஐரோப்பிய பொதுச்சந்தை / சர்வதேச அபிவிருத்திச்சங்கம் / உங்ராட் நிறுவனம் / கார்ட் (GATT) தாபனம்.

(i) மேலே கூறப்பட்டுள்ள நிறுவனங்களில் வெளிநாட்டு வியாபாரத்துடன் தொடர்புடைய சர்வதேச தாபனங்கள் மூன்றின் பெயர் குறிப்பிடுக.

(ii) சர்வதேச வர்த்தகத்தில் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் நான்கைக் குறிப்பிடுக.

(iii) இந்தியா போன்ற பெரிய நாட்டுடன் வியாபார உடன்படிக்கைகளை ஆரம்பிப்பதால் இலங்கை போன்ற சிறிய நாட்டுக்கு ஏற்படும் அனுகூலம் ஒன்றையும், பிரதிகூலம் ஒன்றையும் விபரிக்க.

(iv) வெளிநாட்டு உதவிகளைப் பெறுவதனால் இலங்கை எதிர்நோக்கும் பிரச்சினை ஒன்றைக் குறிப்பிட்டு அவற்றைத் தீர்ப்பது தொடர்பாகப் பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள் இரண்டினை விளக்குக.

3. (i) கீழே தரப்பட்டுள்ள நாணயங்களின் பட்டியலிலிருந்து அதிக கேள்வியுடைய வன்நாணயங்கள் எனக் கருதப்படும் மூன்றின் பெயர்களைக் குறிப்பிடுக.

★ அமெரிக்க டொலர் ★ இந்திய ரூபா ★ யென் ★ இலங்கை ரூபாய் ★ ஸ்ரேலிங்பவுண் ★ பாகிஸ்தான் ரூபா

(ii) சர்வதேச வர்த்தகம் விரிவடைவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் நான்கினைக் குறிப்பிடுக.

(iii) சர்வதேச வர்த்தகம் தொடர்பாக அபிவிருத்தியடைந்த நாடுகளும் பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளன. இரண்டு காரணிகளின் உதவியுடன் இதனை விளக்குக.

(iv) தற்போதைய பொருளாதாரக் கோலத்திற்கு ஏற்ப உலகில் எந்த ஒரு நாடும் தனிமைப்படுத்திய வாழ்க்கையை நடாத்துதல் இலகுவானதன்று. இரண்டு உதாரணங்கள் கொண்டு இதனை நிறுவுக.


4. (i) வர்த்தகமீதி என்பதனை வரையறை செய்க.

(ii) ஒரு நாட்டின் வர்த்தக விகிதம் பாதகமடையும் சந்தர்ப்பங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

(iii) இலங்கையின் சர்வதேச வர்த்தகம் பன்முகப்படுத்தப்பட்டுள்ளமைக்குப் பிரதான காரணியாயமைவது முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்கள், கைத்தொழில் பேட்டைகள் உருவாக்கப்பட்டமையாகும். இந்நடவடிக்கை காரணமாக வெளிநாட்டு வியாபாரத்தில் ஏற்பட்டுள்ள பிரதான மாற்றங்கள் இரண்டினைச் சுருக்கமாக விபரிக்குக.

5. (i) இலங்கையில் வெளிநாட்டு வியாபாரம் தொடர்பாகத் தரப்பட்டுள்ள இந்த வரைபை அவதானிக்கவும்.

இலங்கையின் வெளிநாட்டு வியாபாரம்




(இலங்கை மத்திய வங்கி வருடாந்த அறிக்கை 1999)

இந்தத் தரவுகளின்படி

A - ஆகக்கூடிய ஏற்றுமதி வருமானம் பெறப்பட்ட ஆண்டையும்,

B - இறக்குமதிச் செலவு ஏற்பட்ட ஆண்டினையும்,

C - ஆகக்குறைந்த மறை வர்த்தக மீதி ஏற்பட்ட ஆண்டையும்

A, B, C என்ற ஒழுங்கு வரிசைப்படி குறிப்பிடுக.

(ii) ஏற்றுமதி வருமானம், இறக்குமதிச் செலவு என்பன வற்றிற்கிடையிலான வேறுபாடு இலங்கைக்குச் சாதகமாக அமைவதற்கு எடுக்கக்கூடிய நான்கு நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

(iii) சர்வதேச வியாபாரத்தில் அபிவிருத்தியடைந்த நாடுகள் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் மீது செல்வாக்குச் செலுத்தும் முறையை நான்கு விடயங்கள் கொண்டு விபரிக்குக.

(iv) 'சர்வதேச வியாபாரத்தில் ஏற்படும் பிரச்சினைகளை இழிவளவாக்குவதற்கு அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் வலயரீதியான அமைப்புகளை ஏற்படுத்துதல் முக்கியமானதாகும்' இதை நீங்கள் ஏற்றுக்கொள்கின்றீர்களா? உமது விடையை இரண்டு உதாரணங்கள் கொண்டு நிறுவுக.

# விடைகள்

## பகுதி - I

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| *(1)* | 3 | *(2)* | 2 | *(3)* | 1 | *(4)* | 4 |
| *(5)* | 2 | *(6)* | 4 | *(7)* | 3 | *(8)* | 1 |
| *(9)* | 4 | *(10)* | 2 | *(11)* | 1 | *(12)* | 2 |
| *(13)* | 2 | *(14)* | 2 | *(15)* | 1 | *(16)* | 4 |
| *(17)* | 3 | *(18)* | 3 | *(19)* | 2 | | |

## பகுதி II

**1.** (i) *(அ)* இந்து சமுத்திரத்தின் மத்தியில், கேந்திர மையத்தில், கடல்போக்குவரத்திற்கு உகந்த நிலையத்தில் இலங்கை அமைந்துள்ளது.

*(ஆ)* கிரேக்க, உரோம, அராபிய வர்த்தகர்களுக்கும் கடலோடிகளுக்கும் நன்கு அறியப்பட்ட தீவாகப் பண்டைக் காலத்திலிருந்தே இலங்கை விளங்கு கின்றமை. வாசனைப் பொருட்கள், யானைத் தந்தங்கள், இரத்தினக் கற்கள் முதலானவற்றையும் காலி, திருகோணமலை முதலான துறைமுகங்களையும் கொண்டிருந்தமை.

(ii) *(அ)* இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் குறுகிய கடற்பரப்பில் ஆழமாக்கிச் சேதுகால்வாய் அமைப் பதனால், கப்பல் பயணத்தூரம் குறைவடைகின்றது. இந்தியா இதனால் பெருநன்மையடையும். இப்பொழுது இலங்கைத் தீவைச்சுற்றிப் பயணப்பட வேண்டிய தூரம் சேதுகால்வாயால் குறுகும். அதே சமயம், இலங்கைத் துறைமுகங்களின் இன்றைய முக்கியத்துவம் குறைய வாய்ப்புண்டாகும்.

*(ஆ)* இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் பாலம் ஒன்றைக் கட்டுவதால் இருநாடுகளுக்குமிடையிலான தரைப்பாதைத் தொடர்பு அதிகரிப்பதோடு, ஐரோ-ஆசிய-ஆபிரிக்க கண்டங்களுக்கிடையிலான தரைவழி இணைப்பும் ஏற்படும். வர்த்தகமும் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் வளர்ச்சியடையும். உல்லாசப் பயணிகளின் வரவும் அதிகரிக்கும். அந்நியச்

செலாவணி அதிகரிக்கும். பிரதிகூலமாக, இலங்கையின் சந்தைகளில் இந்தியப் பொருட்கள் மலிவாக நிரம்புவதால், உள்ளூர் உற்பத்திகள் பாதிப்படையும். அதனால் வேலைவாய்ப்பின்மையும் அதிகரிக்க வாய்ப்புண்டு.

**2.** (i) *(1)* ஐரோப்பிய பொதுச்சந்தை
*(2)* உங்ராட் நிறுவனம்
*(3)* கார்ட் (GATT) (தாபனம்)

(ii) (விளக்கக்குறிப்பிலுள்ளது.)

(iii) **அனுகூலம்**

இந்தியா பெரிய நாடாகவும், அதிக சனத்தொகை கொண்ட நாடாகவும் இருப்பதனால், பரந்த சந்தையைக் கொண்டுள்ளது. அதனால் இலங்கையின் உற்பத்திப் பொருட்களைப் பெருமளவு விற்பதற்கு வாய்ப்பு உண்டாகும். அதேவேளை இந்தியப் பொருட்களை மலிவாகப் பெற்றுக்கொள்ள வாய்ப்புண்டாகும்.

**பிரதிகூலம்**

இலங்கையிலுற்பத்தியாகும் உற்பத்திப் பொருட்களும் ஏனைய உற்பத்திப்பொருட்களும் இந்தியாவிலும் உற்பத்தியாகின்றன. அதனால், இலங்கையில் உற்பத்தியாகாத பொருட்கள் இலங்கைச் சந்தைகளை ஆக்கிரமிக்க வாய்ப்பு உண்டு. உண்ணாட்டு கைத்தொழில்கள் பாதிப்படைய வாய்ப்புண்டு.

(iv) இலங்கை வெளிநாட்டு உதவியாகப் பெருமளவு கடனை (வட்டியுடனும் இல்லாமலும்) பெற்றுள்ளது. அதனை அபிவிருத்தி நடவடிக்கைகளில் முதலீடு செய்யாமல், உண்ணாட்டுக் குழப்பங்கள் காரணமான யுத்தச் செலவீனங்களுக்குப் பயன்படுத்தி வருகின்றது. அதனால், கடன்கள் அதிகரித்துச் செல்கின்ற போக்கினைக் காணலாம். வெளிநாட்டு உதவியால் அதிகரித்துள்ள கடன் பளுவைக் குறைக்க முதலில் போர்ச் செலவினங்களைக் கட்டுப்படுத்த வேண்டும். அதற்கு நாட்டில் சமாதானமும் அமைதியும் நிலவவேண்டும். மேலும் பெறும் கடன்களை தக்க அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பயன்படுத்த வேண்டும்.

3. (i) அமெரிக்க டொலர், ஸ்ரேலிங் பவுண், யப்பானிய யென்

(ii) விளக்கத்தில் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.)

(iii) (விளக்கத்தில் விரிவாகவுள்ளது.)

(iv) (அ) இன்றைய பொருளாதாரக் கோலத்தில் எந்தவொரு நாடும் தனித்து வாழ்வது சாத்தியமல்ல. கோளமயமாதல் நோக்கிய போக்கினால், நாடுகளிடையே உறவுநிலைகளும், நுகர்வுப் பொருள்களின் பரிமாற்றங்களும் அதிகரித்துள்ளன. ஒரு நாட்டில் இல்லாத பொருளை இன்னொரு நாட்டிலிருந்து பெறுவது மட்டுமன்றி, உற்பத்தியாகக்கூடிய பொருள் மலிவாக இன்னொரு நாட்டில் கிடைக்குமாயின் அதனைப் பெறும் கோலம் இன்றுள்ளது.

(ஆ) தகவல் தொழில்நுட்ப விருத்தியால் (கணினி, இன்ரநெற், ஈமெயில்) இன்று நாடுகளிடையே நெருக்கம் ஏற்பட்டு உள்ளது. உற்பத்திப் பொருட்களில் சிறப்புத் தேர்ச்சி தோன்றிவிட்டது. பொதுவான சட்ட திட்டங்கள் உலக ரீதியாக கைக்கொள்ளப்படுகின்றன. தொழில் வாய்ப்புகள் சர்வதேசரீதியாக மாறிவிட்டது. எனவே தனித்து ஒரு நாடு இயங்கமுடியாத நிலை தோன்றியுள்ளது.

4. (i) ஏற்றுமதிப் பொருட்கள் மூலம் கிடைக்கும் வருமானத்திற்கும், இறக்குமதிப் பொருட்கள் மூலம் ஏற்படும் செலவுக்கும் இடையிலான வித்தியாசம் 'வர்த்தகமீதி' எனப்படும்.

(ii) (அ) பொருட்களின் ஏற்றுமதி வருவாயைவிட இறக்குமதிச் செலவு அதிகரிக்கும்போது.

(ஆ) ஏற்றுமதிப் பொருட்களின் விலை குறைவாயும், இறக்குமதிப் பொருட்களின் விலை அதிகரிக்கும்போது

(இ) ஏற்றுமதி இறக்குமதிப் பொருட்களின் விலைமாறாத நிலையில் ஏற்றுமதியின் அளவு குறைந்து இறக்குமதி அளவு அதிகரிக்கும்போது

(iii) (அ) முதலீட்டு வலயங்கள், கைத்தொழில் பேட்டைகள் என்பனவற்றின் காரணமாகவும், திறந்த பொருளாதாரம் காரணமாகவும் இலங்கையின் பாரம்பரிய ஏற்றுமதிப் பொருட்கள் (தேயிலை, இரப்பர், தென்னை) தம் முக்கியத்துவத்தினை இழந்து, தைத்த

ஆடைகள் (61%) ஏற்றுமதிப் பொருளாதாரத்தில் முதன்மை பெற்றுள்ளன.

(ஆ) சர்வதேச வர்த்தகத்தில் இலங்கை, மூலப்பொருட்களுக்குப் பதிலாக ஓரளவு முடிவுப்பொருட்களை ஏற்றுமதி செய்யும் நிலை உருவாகியுள்ளது. மேலும், மூலதனப் பொருட்களின் இறக்குமதியும் அதிகரித்து உள்ளது.

**5.** (i) A – 1998 B – 1995 C - 1998

(ii) (அ) இறக்குமதிப் பொருட்களின் செலவினத்தைக் கட்டுப் படுத்தல் வேண்டும்.

(ஆ) ஏற்றுமதிப் பொருட்களின் அளவினை அதிகரித்து வருமானத்தைக் கூட்டுதல் வேண்டும்.

(இ) ஏற்றுமதிப் பொருள்களினைப் பன்முகப்படுத்த வேண்டும். ஒரே பொருளின் ஏற்றுமதி வருமானத்தில் தங்கியிராது, பல பொருட்களின் ஏற்றுமதி வருமானத் தில் தங்கியிருக்கும் நிலை உருவாதல் அவசியம்.

(ஈ) ஏற்றுமதிப் பொருட்களில் மூலப்பொருட்களின் அளவு குறைந்து, முடிவுப் பொருட்கள் ஏற்றுமதியாக வேண்டும்.

(iii) (அ) அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் உற்பத்திப் பொருட்களுக்கு நியாயவிலை வழங்காமல், தமது ஏற்றுமதிப் பொருள்களின் விலையில் தளம்பலை ஏற்படுத்தல்.

(ஆ) அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் இயற்கை உற்பத்திப் பொருட்களுக்குப் பதில் செயற்கைப் பொருட்களை அல்லது பதிலீட்டுப் பொருட்களை உற்பத்தி செய்தல்,

உதாரணம் : செயற்கை இரப்பர், பிளாஸ்டிக்

(இ) அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் கைத்தொழில் பொருட்களுக்கு உயர்ந்த தீர்வை வரி விதித்தல், கப்பல் கட்டணத்தை அதிகரித்தல், 'கோட்டா', முறையில் தமது சந்தைகளைப் பாதுகாத்தல்.

(ஈ) அபிவிருத்தியடைந்த நாடுகள் தமது ஏற்றுமதிப் பொருட் களின் விலையை அதிகரிப்பதன் மூலமும் உலக விலை

அதிகரிக்கும்போது கையிருப்புகளைச் சந்தையில் வெளிவிடுதல்.

இவ்வாறான முறைகளில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின்மீது வர்த்தகச் செல்வாக்குச் செலுத்துகின்றன.

(iv) சர்வதேச வியாபாரத்தில் ஏற்படும் பிரச்சினைகளைக் குறைப்பதற்கு அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் சார்க், ஒபெக், ஆசியான் போன்ற வலயரீதியான அமைப்புகளை உருவாக்கிக்கொள்வது முக்கியமானதாகும்.

அதன் மூலம்,

(அ) இந்நாடுகளின் உற்பத்திப்பொருட்களின் ஏற்றுமதி விலையை நியாயமாக இணைந்து தீர்மானிக்கமுடியும்.


(ஆ) விலையைக் கட்டுப்படுத்தவும், விலைத் தளம்பலை நீக்கவும் இவ்வாறான அமைப்பு உதவும்.

(இ) அந்நாடுகளிடையே தொழிலாளர் அசைவுகள் தகவல் தொழில்நுட்பப் பரிமாற்றம், நாணய உறுதிப்பாடு என்பன உருவாகும்.

மிகமிக வறிய நாடுகள் சுரண்டப்படும் நிலைமை இருப்பினும், நன்மைகள் அதிகமே.

அத்தியாயம்

**2**



# சர்வதேச அமைப்புகள்

**1. இன்றைய உலகில் சர்வதேச அமைப்புகளின் முக்கியத்துவம் யாவை?**

(அ) சமகால உலக சமூகத்தில் ஒரு நாடு மற்றொரு நாட்டின் உதவியில் தங்கியிருப்பது தவிர்க்கமுடியாதுள்ளது.

(ஆ) சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளுக்கான உதவிகளை சர்வதேச அமைப்புக்கள் மூலம் தேவையேற்படும் நாடு பெற்றுக்கொள்ள முடியும்.

(இ) இவ்வலயங்களைச் சேர்ந்த நாடுகள் தங்கள் பிரச்சினை களை கூட்டாக இயக்குவது தீர்த்துக்கொள்ள முடிகின்றது.

(ஈ) கோளயமாதலின் நோக்கினை சர்வதேச அமைப்புக்கள் ஒருவகையில் நிறைவு செய்து வருகின்றது.

(உ) நாடுகளுக்கிடையே நல்லுறவு, சமாதானம், கலாசாரப் பரிமாற்றம், பொருளாதார, கைத்தொழில், தொழில் நுட்பப் பரிமாற்றம் என்பன சர்வதேச அமைப்பு மூலம் இலகுவில் சாத்தியமாகின்றது.

**2.** (i) **பிராந்திய அமைப்பு என்றால் என்ன?**

ஒரு வலயத்தைச் சேர்ந்த நாடுகள் ஒருங்கிணைந்து உருவாக்கிக்கொள்ளும் கூட்டினைப் பிராந்திய அமைப்பு என்பார்.

(ii) **பிராந்திய அமைப்புகளுக்கு உதாரணங்கள் தருக.**

(அ) சார்க்
(ஆ) ஆசியான்
(இ) கொழும்புத்திட்டம்

**3.** (i) **'சார்க்' என்ற பிராந்திய அமைப்பின் விரிவுப் பெயர் யாது?**


தென்காசிய நாடுகளின் பிராந்திய ஒத்துழைப்புக்கான கூட்டமைப்பு

(ii) **சார்க் அமைப்பினை உருவாக்கிய நாடுகள் எவை?**

இலங்கையும் அதன் அயலிலுள்ள தென்னாசிய நாடுகளும் சேர்ந்து சார்க் அமைப்பை உருவாக்கின.


(அ) இந்தியா (ஆ) இலங்கை
(இ) பாகிஸ்தான் (ஈ) வங்களாதேசம்
(உ) நேபாளம் (ஊ) பூட்டான்
(எ) மாலைதீவுகள்

ஆகிய ஏழு நாடுகள் சார்க் அமைப்பிலுள்ளன.



(iii) **'சார்க்' அமைப்பின் இலட்சினை யாது?**


(iv) **'சார்க்' நாடுகளின் தேசியக் கொடிகள் யாவை?**




இலங்கை



மாலைதீவு



இந்தியா



பாகிஸ்தான்



பங்களாதேஷ்



நேபாளம்



பூட்டான்

(v) **'சார்க்' அமைப்பு எவ்வாண்டு எங்கு உருவாகியது?**

*1995 ஆம் ஆண்டு டாக்காவில்*

**4.** (i) **சார்க் அமைப்பின் குறிக்கோள்கள் எவை?**

*(அ) தென் ஆசிய நாட்டு மக்களின் வாழ்க்கை தரத்தை விருத்தியடையச் செய்தல்.*

*(ஆ) தென் ஆசிய நாடுகள் பொருளாதாரத்தை வளர்ச்சி யடையச் செய்தல், அந்நாடுகளின் சமூக முன்னேற்றத் தையும், கலாசாரத்தையும் பாதுகாத்தல்.*

(இ) தென் ஆசிய நாடுகளின் பாதுகாப்பைப் பலப்படுத் துதல்.

(ஈ) தென் ஆசிய நாடுகள் தமக்குள் ஏற்படும் பிரச்சினை களைப் பேசித் தீர்த்துக்கொள்ளல்.

(உ) விஞ்ஞானம், தொழில்நுட்பம், கலை, கலாசாரம், தொழில் வசதி, பொருளாதாரம் என்பனவற்றில் இணைந்து ஒருவருக்கொருவர் உதவுதல்.

(ஊ) ஏனைய அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுடன் ஒத்துழைத்தல், தமது நாட்டு இயற்கை வளங்களைப் பகிர்ந்து அபிவிருத்தியடைதல்.

(எ) சர்வதேச பொதுநியாயத் தீர்வுகளில் கூட்டாக முடிவெடுத்து ஆதரவளித்தல் அல்லது கண்டித்தல்.

(ஏ) சர்வதேச பொதுத் தாபனங்களில் ஒன்றுபட்ட கருத்தை வெளிப்படுத்தல்.

**5.** (i) **சார்க் அமைப்பு உருவாக்கியுள்ள வர்த்தக உடன்பாடு எது?**

சப்தா (SAPTHA) (தென் ஆசிய நாடுகளின் முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தம்)

(ii) **சார்க் நாடுகள் உருவாக்கியுள்ள தனிமனித நலன்பேணல் அமைப்புக்கள் எவை?**

(அ) சேவ் (SAVE) (சார்க் ஒலி ஒளி பரிமாற்றம்)

(ஆ) சிவோப் (SYVOP) (சார்க் இளைஞர் ஒத்துழைப்புத் திட்டம்)

(iii) **சார்க் அமைப்பின் கீழ் உருவாக்கப்பட்டிருக்கும் பிராந்திய நிறுவனங்கள் எவை?**

(அ) சார்க் பிராந்திய தொடர்பு நிலையம் (டாக்கா – 1988)

(ஆ) சார்க் காசநோய் நிலையம் (நேபாளம் – 1992)

(இ) சார்க் ஆவண நிலையம் (நியூடெல்லி – 1994)

(iv) **'சார்க்' பிராந்திய அமைப்பு, பிரகடனம் செய்து நடைமுறைப் படுத்திய ஆண்டுகளும் நோக்கங்களும் யாவை?**

(அ) போதைப்பொருள் எதிர்ப்பு ஆண்டு – 1989

(ஆ) சிறுவர் நலன்பேணல் ஆண்டு – 1990

(இ) வதிவிட ஆண்டு – 1991

(ஈ) சூழல் பேணல் ஆண்டு – 1992

(உ) வலது குறைந்தோர் ஆண்டு – 1993

(ஊ) இளைஞர் ஆண்டு – 1994

(எ) எழுத்தறிவு ஆண்டு – 1996

**6. சார்க் அமைப்பு தத்தமது நாடுகளில் வறுமையை ஒழிப்பதற்காக நடைமுறைப்படுத்திய செயற்றிட்டங்கள் எவை?**

(i) விவசாய அபிவிருத்தி

(ii) கல்வி கலாசார விளையாட்டு அபிவிருத்தி

(iii) சுகாதாரம், குடித்தொகை, குழந்தை நலன் பேணல்

(iv) உல்லாசப் பயணத்துறை

(v) சப்தா – தென் ஆசிய நாடுகளின் முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தம் (SAPTHA)

(vi) தொடர்பாடல் அபிவிருத்தி

(vii) சப்ரா – தென் ஆசிய நாடுகளின் சுதந்திர வர்த்தக விருத்திக் கான ஒப்பந்தம் (SAPTA)

(viii) போதைவஸ்து பாவனை, கடத்தல் ஆகியவற்றைத் தடுத்தல்.

(ix) கிராமிய அபிவிருத்திச் செயற்பாடுகள்

(x) போக்குவரத்து அபிவிருத்தி

(xi) அங்கத்துவ நாடுகள் இடருறும் போது உணவுப் பரிமாற்றம் தொழில்நுட்பப் பரிமாற்றம்.

**7.** (i) **கொழும்புத்திட்டம்** (Colombo Plan) **என்றால் என்ன?**

தென்னாசியா, தென்கிழக்காசியா ஆகிய நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கான ஒத்துழைப்புத் திட்ட மாகும்.

(ii) **இது எப்போது, எங்கு, எவர்களால் ஆரம்பிக்கப்பட்டது?**

1950ஆம் ஆண்டு, கொழும்பில் நடைபெற்ற பொதுநலவாய வெளிவிவகார அமைச்சர்கள் மகாநாட்டில், இலங்கையின் நீதியமைச்சராக விளங்கிய ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, அவுஸ்ரேலியப் பிரதிநிதி, சேர்.பேர்சி.ஸ்பென்சர் ஆகியோ ரால் முன்மொழியப்பட்டு உருவாகியது. 1951 இலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

(iii) **கொழும்புத்திட்டத்தின் அங்கத்துவ நாடுகள் எவை?**

ஆரம்பத்தில் 7 நாடுகள் இருந்தன. இன்று 27 நாடுகள் உள்ளன. பெரிய பிரித்தானியா, நியூசிலாந்து, சிங்கப்பூர், அவுஸ்ரேலியா, கனடா, ஐக்கிய அமெரிக்கா ஆகிய 6 அபிவிருத்தியடைந்த நாடுகளும், இலங்கை, லாவோஸ், மியான்மார், பிலிப்பைன்ஸ், ஈரான், பப்புவா, நீயூகினி, பாகிஸ்தான், நேபாளம், தாய்லாந்து, பூட்டான், பங்களா தேசம், கொரியா, ஆப்கானிஸ்தான், இந்தியா, கம்பூச்சியா, வியட்னாம், இந்தோனேசியா, மலேசியா, மாலைதீவு, பிஜித்தீவு எனும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளும் உள்ளன.

**8.** (i) **கொழும்புத்திட்ட அமைப்பினது பிரதான நோக்கம் யாது?**

அங்கத்துவ நாடுகளின் அபிவிருத்தித் திட்டங்களுக்குத் தேவையான மூலதன உதவியை வழங்குவதாகும்.

(ii) **மூலதன உதவிகளும் ஏனைய உதவிகளும் எவ்வெவ் வழிகளில் அங்கத்துவ நாடுகளுக்கு வழங்கப்படுகின்றன?**

(அ) விவசாயம், செய்திப் பரிமாற்றம், சக்தி, கல்வி, சுகாதாரம், வனப் பாதுகாப்பு, நீர்வசதிகள், மண் ஆராய்ச்சி போன்ற சமூகப் பொருளாதார அபிவிருத்தி களுக்கு மூலதனம் வழங்குதல்.

(ஆ) இவற்றிற்குத் தேவையான நிபுணத்துவ சேவை களைப் பெற்றுக்கொடுத்தல்.

(இ) பயிற்சிகள் பெறுவதற்கான புலமைப் பரிசில்களை வழங்குதல்

(ஈ) ஆய்வுகளுக்குத் தேவையான உபகரணங்களை வழங்குதல்.

(iii) **தொழில்நுட்பம் சார்ந்த புலமைப் பரிசில்களைக் கூடுதலாக வழங்கி வருகின்ற நாடுகள் எவை?**

பிரித்தானியா, கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து

(iv) **கொழும்புத்திட்டத்தின் கீழ் பயனடைந்த நாடுகளையும், உதவிய நாடுகளையும், பயனடைந்த துறைகளையும் சில உதாரணங்கள் மூலம் குறிப்பிடுக.**

| பயனடைந்த நாடு | உதவிய நாடு | துறை |
|---|---|---|
| மலேசியா | அவுஸ்திரேலியா | புலமைப்பரிசில்கள் |
| வங்காளதேசம் | அவுஸ்திரேலியா | குழாய்க்கிணறுகள் |
| நேபாளம் | பெரிய பிரித்தானியா | வனப்பாதுகாப்பு |
| பிஜி தீவுகள் | நியூசிலாந்து | மண்ணாராட்சி |
| இலங்கை | கனடா | புகையிரத இயந்திரவியல் |

**9.** (i) **கொழும்பின் திட்டத்தின் மூலம் இலங்கையடைந்த நன்மைகள் எவை?**

(அ) இலங்கையின் பொருளாதார, சமூக அபிவிருத்திக்காக இயந்திரங்கள், வாகனங்கள், புகையிரத இயந்திரங்கள், விவசாய உபகரணங்கள், மீன்பிடி வள்ளங்கள் வழங்கப் பட்டுள்ளன.

(ஆ) தொழில்நுட்பவியலாளருக்கான விஷேட பயிற்சிகளும் மாணவர்களுக்கான புலமைப்பரிசில்களும் வழங்கப் பட்டு வருகின்றது.

(ii) **கொழும்புத்திட்டம் வேறு எவ்வகைகளில் உறுப்பு நாடு களுக்குப் பயன் தருகின்றது?**

(அ) பயங்கரவாதத்தை ஒழித்தல்.

(ஆ) போதைவஸ்துப் பாவனையையும், கடத்தலையும் தடுத்தல்.

(இ) போதைவஸ்து கடத்தல் தடுப்பு சம்பந்தமான பயிற்சி களை வழங்கல்.

(ஈ) தனியார் முயற்சிகளுக்கு உதவிகளை அளித்தல்.

(உ) இயற்கை அழிவுகளின் வருகையை முன்கூட்டியே அறியத்தருதல்.

(ஊ) விவசாயத் தகவல்களைப் பரிமாறல்.

(எ) இடர்காலங்களில் உணவு, மருத்துவ உதவிகளைச் செய்தல்.

(ஏ) குடித்தொகை, சுகாதாரம் சம்பந்தமான பயிற்சிகளும் உதவிகளும் வழங்கல்.


(ஐ) சக்தி, தொடர்பாடல், உல்லாசப் பயணத்துறை என்பவற்றினை அபிவிருத்தியடையச்செய்தல்.

**10. சூரியன் அஸ்தமிக்காத நாடென பிரித்தானியாவை முன்னர் குறிப்பிடுவர். அது ஏன்?**

இரண்டாம் உலக மகாயுத்தம் வரை பிரித்தானியா உலகமெங்கும் குடியேற்ற நாடுகளைக் கொண்டிருந்தது. அதனால் எங்கோ ஒரு நாட்டில் எப்பொழுதும் சூரியன் உதயமாகிக் கொண்டே இருக்கும்.

**11.** (i) **பிரித்தானியா பொதுநலவாயம் என்ற அமைப்பை ஏன் உருவாக்கியது?**

பிரித்தானியாவின் ஆதிக்கத்தின் கீழ் இருந்த ஆசிய, ஆபிரிக்க நாடுகள் சுதந்திரம் பெற்ற நாடுகளாக மாறுகின்றன. இவ்வாறு சுதந்திரம் பெற்ற நாடுகளிடையே கூட்டுறவை வலுப் படுத்தவே பிரித்தானியப் பொதுநலவாயம் உருவாக்கப்



(ii) **இன்று ஏன் பொதுநலவாயம் என்று மட்டும் அழைக்கப் படுகின்றது?**

காலம் செல்லச்செல்ல பிரித்தானிய பொதுநலவாய அமைப்பில், ஆசிய ஆபிரிக்க நாடுகளின் தொகை அதிகரித் ததினால் இவ்வமைப்பு 'பொதுநலவாயம்' எனப் பெயரை மாற்றிக்கொண்டது. ஏனெனில் ஏனைய ஐரோப்பிய நாடு களின் குடியேற்ற நாடுகளுடன் சுதந்திரத்தின் பின்னர் இவ் அமைப்பில் இணைந்து கொண்டமையால் ஆகும்.

(iii) **பொதுநலவாயத்தின் மொத்த அங்கத்துவ நாடுகள் எத்தனை?**

பிரித்தானியா உட்பட 54 நாடுகள் ஆகும்.

**12. பொதுநலவாயத்தின் பொதுவான குறிக்கோள்கள் எவை?**

(அ) அங்கத்துவ நாடுகளுக்கிடையே அரசியல், பொருளாதார, கலாசார துறைகளில் பரஸ்பர நல்லுறவை விருத்திசெய்து கொள்ளுதல்.

(ஆ) தொழில்நுட்பங்களைப் பரிமாறிக்கொள்ளல்.

(இ) புலமைப் பரிசில்களை வழங்கி, அறிவுப்பரிமாற்றத்தை ஏற்படுத்தல்.

(ஈ) அங்கத்துவ நாடுகளுக்கிடையில் வர்த்தகத் தொடர்பு களைப் பேணுதல்.

**13. பொதுநலவாய அமைப்பினால் இலங்கைக்குக் கிடைத்த உதவிகள் எவை?**

(i) நீர்மின் சக்தியைப் பெறுவதற்கான உதவிகள்

(ii) வனவள அபிவிருத்தித் திட்டங்களுக்கான உதவிகள்

(iii) கைத்தொழில் விருத்திக்கான தொழில்நுட்ப உதவிகள்

(iv) மாணவர்கள் புலமைப்பரிசில்களூடாகப் பயிற்சியையும் தொடர்புகளையும் பெருக்கிக்கொள்ளல்.

(v) வர்த்தகம் தொடர்பான பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கான உதவிகளைப் பெற்றுக்கொள்ளல்.

(vi) பல்கலைக்கழகங்களின் விருத்திக்கான உதவிகளைப் பெற்றுக்கொள்ளல்.

**14. ஐக்கிய நாடுகள் சபையின் தோற்றம் குறித்து விபரிக்க.**

(i) இரண்டாம் உலகமகா யுத்தத்தில் பல இலட்சக் கணக்கான மக்கள் இறந்தனர். எண்ணற்ற பல இலட்சம் அங்கவீனமாயினர். பலகோடி சொத்துக்கள் அழிந்தன. இதன் பின்பு தான் இந்த யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. இத்தகைய கொடிய யுத்தம் இனிமேலும் ஏற்படக் கூடாது என்பதற்காக, சனநாயகவாதிகளின் கருத்தில் ஐக்கியநாடுகள் சபை பற்றிய உண்மைக்கரு உருவாகியது.

(ii) 1945ஆம் ஆண்டு அக்டோபர் 24ம் திகதி தியோடர் ரூஸ்வெல்த், பிரித்தானிய பிரதமர் வின்சன்ற் சேர்ச்சில், சோவியத் ருசியாவின் தலைவர் யோசெப் ஸ்ராலின் ஆகியோரின் ஆலோசனையில் தொடக்கப்பட்டது.

(iii) முதலில் 5 நாடுகள் ஐ.நா.சபையின் சாசனத்தில் ஒப்பமிட்டு ஆரம்பித்து வைத்தன.

(iv) இன்று (2002) 191 நாடுகள் ஐ.நா.சபையின் அங்கத்துவ நாடுகளாக உள்ளன.

**15. ஐக்கிய நாடுகள் சபையின் தினம் யாது?**

ஒக்டோபர் 24. (சீனா, பிரான்ஸ், ஐக்கிய ராச்சியம், ஐக்கிய அமெரிக்கா, ருசியா ஆகிய ஐந்து நாடுகள் கையொப்பமிட்ட தினம் இதுவாகும்.)

**16. ஐக்கியநாடுகள் அமையத்தின் நோக்கங்கள் யாவை?**

(i) சர்வதேச சமாதானத்தையும், உலகப் பாதுகாப்பையும் பேணுதல்.

(ii) நாடுகளிடையே நட்புறவை வளர்த்தல்.

**17. ஐ.நா.சபையின் புதிய அங்கத்துவ நாடுகள் எவை?**

கிரிபாடி, நௌரு, டோங்கா – 1999

தூவலூ – 2000; சுவிற்சலாந்து, கிழக்கு தீமோர் – 2002

**18.** (i) **ஐ.நா.சபையின் இன்றைய செயலாளர் நாயகம் யார்?**

கோபி அனான் (கானா) 2001 சமாதானத்திற்கான நோபல் பரிசு பெற்றவர்.

(ii) **ஐ.நா.சபையின் முன்னைய செயலாளர் நாயகங்கள் யாவை?**

*1940* – டிரைக்வே – லை (நோர்வே)

*1953* – டாக்காமர்ஸ்க் ஜோல்டு (சுவீடன்)

*1961* – உதாண்ட் (பர்மா – மியன்மார்)

*1972* – குர்ட்வால்ட்ஹைம் (ஆஸ்திரியா)

*1982* – பெரிஸ்.டி. கொய்லர் (பேரு)

*1992* – பெட்ரோஸ் காயி (எகிப்து)

(iii) **ஐ.நா.சபையின் தலைமையகம் எங்குள்ளது?**

நியூயோர்க்

**19. ஐக்கியநாடுகள் அமையத்தின் அமைப்புக் குறித்து விளக்குக.**

(i) ஐ.நா.சபையின் கோட்பாடுகளை ஏற்று சமாதானத்துக்கு ஒத்துழைப்பு வழங்கும் நாடுகள் அனைத்தும் அதில் அங்கம் வகிக்கலாம்.

(ii) எந்த நாடும் பாதுகாப்புச் சபையின் சிபார்சுக்கு இணங்க பொதுச்சபை ஊடாக அங்கத்துவத்தைப் பெறமுடியும்.

(iii) சீனம், அரபி, ஆங்கிலம், பிரெஞ்சு, ருஷியன், ஸ்பானிஷ் ஆகிய மொழிகள் ஐ.நா சபையின் உத்தியோக மொழிகளாகும்.

(iv) ஐக்கிய நாடுகள் சபை 6 உறுப்புக்களைக் கொண்டது.


(அ) பொதுச்சபை

(ஆ) பாதுகாப்புச்சபை

(இ) பொருளாதாரசமூக சபை

(உ) சர்வதேசநீதிமன்றம்

(ஊ) செயலகம்



**20. ஐ.நா. பொதுச்சபை குறித்து விளக்கம் தருக.**

(i) ஐ.நா உறுப்பு நாடுகள் அனைத்தும் இதில் அங்கம் வகிக்கின்றன.

(ii) உறுப்பு நாடுகள் ஒவ்வொன்றும் தலா ஐந்து பிரதிநிதிகளை இச்சபைக்கு அனுப்பலாம். என்றாலும் ஒரு நாட்டிற்கு ஒரு வாக்குரிமையே உள்ளது.

(iii) பொதுச்சபைக் கூட்டம் ஒவ்வொரு வருடமும் செப்டெம்பர் மூன்றாம் வியாழக்கிழமையிலிருந்து டிசம்பர் நடுப்பகுதி வரை நடைபெறும்.

(iv) முக்கிய பிரச்சினைகளில் தீர்மானம் நிறைவேற்ற மூன்றிலிரு பங்கு பெரும்பான்மை வேண்டும்.

**21. ஐ.நா. பொதுச்சபையின் செயற்பாடுகளும் அதிகாரங்களும் யாவை?**

(i) ஆயுதங்களைக் களைதல், ஆயுதங்களைக் கட்டுப்படுத்தல், சர்வதேச அமைதி, பாதுகாப்பு சம்பந்தமான விதப்புரைகளை வழங்கல்.

(ii) பாதுகாப்புச் சபையிடமிருந்தும் ஏனைய ஐ.நா. அமைப்புக்களில் இருந்தும் அறிக்கைகளைப் பெற்று ஆலோசனை வழங்கல்.

(iii) ஐ.நா. சபையின் வரவு செலவுத்திட்டத்தை அங்கீகரித்தல்.

(iv) பாதுகாப்புச்சபையின் தற்காலிக உறுப்பினர்களையும், பொருளாதார சமூகவகை மற்றும் தர்மகர்த்தா குழு உறுப்பினர்களையும் தேர்ந்தெடுத்தல்.

(v) பாதுகாப்புச்சபையின் சிபார்சுப்படி செயலாளர்நாயகத்தைத் தெரிந்து எடுத்தல்.

(vi) பாதுகாப்புச்சபையோடு சேர்ந்து பன்னாட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகளைத் தேர்ந்தெடுத்தல்.

**22. ஐ.நா பாதுகாப்புச்சபை குறித்து சுருக்கமான விளக்கம் தருக.**

(i) சர்வதேச சமாதானத்தையும், பாதுகாப்பையும் பேணும் முக்கிய பொறுப்பு பாதுகாப்புச்சபையிடம் வழங்கப்பட்டுள்ளது.

(ii) சீனா, ருஷியா, பிரான்ஸ், ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா ஆகிய ஐந்தும் நிரந்தர அங்கத்துவ நாடுகளாகும்.

(iii) இவற்றோடு இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பத்து நாடுகள் பாதுகாப்புச் சபைக்குத் தெரிவாதல்.

(iv) 15 அங்கத்துவ நாடுகளுக்கும் ஒவ்வொரு வாக்குண்டு.

(v) ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற ஐந்து நிரந்தர உறுப்புரிமை நாடுகளுக்குட்பட்ட ஆகக் குறைந்தது 9 நாடுகள் ஆதரவாக வாக்களிக்க வேண்டும்.

(vi) எந்தவொரு தீர்மானத்தையும் ஐந்து நிரந்தர உறுப்புகளில் ஒன்று விரும்பாவிடின் இரத்துச் செய்யும் அதிகாரம் உண்டு. இதனை 'வீற்றோ' அதிகாரம் (VETO POWER) என்பர்.

**23. ஐ.நா. பாதுகாப்புச் சபையின் செயற்பாடுகளும் அதிகாரங்களும் யாவை?**

(i) சர்வதேசப் பாதுகாப்பையும் சமாதானத்தையும் பேணுதல்.

(ii) சர்வதேசப் பிரச்சினைகளுக்கான எந்தவொரு விடயம் தொடர்பான காரணகாரியங்களைப் பகுத்து ஆராய்தல்.

(iii) அவ்வகையான பிரச்சினைகளைத் தீர்க்கும் வழிவகைகளைச் சிபார்சு செய்தல்.

(iv) ஆக்கிரமிப்பாளருக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

(v) ஆயுதங்களை நிர்வகித்தல் தொடர்பான ஒழுங்கு முறையினைத் திட்டமிடல்.

**24. உலக அமைதிக்கும் பாதுகாப்புக்குமாக ஐ.நா. பாதுகாப்புச்சபை எவ்வித நடவடிக்கைகளை மேற்கொள்ளும்?**

(i) சமாதானமாகத் தீர்க்கும் வழிகளைச் சிபார்சு செய்தல்.

(ii) கடும் கண்டனங்களை வெளியிடுதல்.

(iii) பொருளாதாரத் தடைகளை ஏற்படுத்தல்.

(iv) அமைதி காக்கும் படைகளை அனுப்பிச் சமாதானத்தை ஏற்படுத்துதல்.

(v) இறுதியாகப் படைகளை அனுப்பி தீர்க்கமான ஒரு முடிவுக்குக் கொண்டு வருதல்.

**25. ஐ.நா. பொருளாதார சமூக சபையின் அம்சங்களைக் கூறுக.**

(i) ஐ.நா. பொதுச்சபையின் பொறுப்பின் கீழ் இயங்கிவரும் இச்சபை ஐ.நா. சபையின் பன்னாட்டுப் பொருளாதாரம்,

சமூகம், கலாசாரம், கல்வி சுகாதாரம் இவற்றோடு தொடர்புடைய பணிகளைச் செய்கிறது.

(ii) இச் சபையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 54 ஆகும்.

(iii) பதவிக்காலம் மூன்றாண்டுகள். மேற்படி உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் அதாவது 18 உறுப்பு நாடுகள் ஆண்டுதோறும் பதவி விலக அதே தொகையினர் பொதுச் சபையால் நியமிக்கப்படுவர்.

(iv) ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒவ்வொரு வாக்கேயுண்டு.

**26. ஐ.நா. பொருளாதார சமூக சபையின் செயற்பாடுகளும் அதிகாரங்களும் யாது?**

(i) சர்வதேச ஒத்துழைப்புடன் மிக முக்கியமான பொருளாதார, சமூக விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடல்.

(ii) மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக முக்கிய செயற்பாடுகளில் ஈடுபடல்.

(iii) அதன் அதிகாரத்திற்குட்பட்ட விடயங்களில் சர்வதேச மகாநாடுகளைக் கூட்டி பொதுச்சபைக்கு அறிக்கை சமர்ப்பித்தல்.

(iv) விசேட ஸ்தாபனங்களுடன் பேசி ஒப்பந்தங்களை மேற்கொள்ளல்.

(v) சபையானது மேற்கொள்ளும் விடயங்கள் பற்றி அரசு சார்பற்ற நிறுவனங்களோடு ஆலோசனை செய்தல்.

**27. ஐ.நா. பொருளாதார சமூகச் சபையில் அடங்கும் பிராந்திய பொருளதார நிறுவனங்கள் எவை?**

(i) ஐரோப்பிய பொருளாதார நிறுவனம் (ECE)
(Economic and Social Commission for Europe)

(ii) ஆசிய பசுபிக் பொருளாதார நிறுவனம் (ESCAP)
(Economic and Social Commission for Asia and the Pacific)

(iii) இலத்தீன் அமெரிக்கப் பொருளாதார நிறுவனம் (ECLA)
(Economic and Social Commission for Latin America)

(iv) ஆபிரிக்கப் பொருளாதார நிறுவனம் (ECA)
(Economic and Social Commission for Africa)

(v) மேற்காசிய பொருளாதார நிறுவனம் (ECWA)
(Economic and Social Commission for West Asia)

**28. (அ) ஐ.நா. நம்பிக்கைப் பொறுப்புச்சபை குறித்து சுருக்கமான விளக்கம் தருக.**

(i) சுயாட்சி அதிகாரம் பெறாத நாடுகளின் நலனைப் பாதுகாக்க அமைக்கப்பட்ட சபை.

(ii) காலக்கிரமத்தில் இந்நாடுகள் சுதந்திரமடைந்ததும், ஐ.நா. சபையில் உறுப்பு நாடுகளாக இணைந்து கொள்ளும்.

(iii) இச்சபையில் ஐ.நா. சபையின் நிரந்தர உறுப்பு நாடுகளான சீனா, பிரான்ஸ், ருஷியா, ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா என்பன உள்ளன.

(iv) ஆரம்பத்தில் 11 நாடுகள் நம்பிக்கைப் பொறுப்புச் சபையின் பொறுப்பில் இருந்தன. இன்று எதுவுமே இல்லை. கடைசியாக 1994இல் ஐக்கிய இராச்சியத்தின் பொறுப்பில் இருந்த பாலுத்தீவும் சுதந்திரமடைந்தது.

**(ஆ) ஐ.நா. நம்பிக்கைப் பொறுப்புச் சபையின் செயற்பாடுகளும் அதிகாரங்களும் எவை?**

(i) பொறுப்பேற்கப்பட்ட நாடுகளின் அரசியல், பொருளாதார, சமூக, கல்வி விருத்தியினை ஏற்படுத்தல்.

(ii) பொறுப்பாக்கப்பட்ட நாடுகளில் இருந்து கிடைக்கும் முறைப்பாடுகளை விசாரித்தல்.

(iii) நாடுகளைப் பொறுப்பேற்ற நாடுகளுடன் ஆலோசனை மேற்கொள்ளல்.

(iv) பொறுப்பேற்கப்பட்ட நாடுகளுக்கு விஷேச குழுக்கள் செல்லல்.

**29.** (i) **ஐ.நா. சர்வதேச நீதிமன்றம் எங்குள்ளது?**

நெதர்லாந்தின் ஹேக் நகரில் உள்ளது.

(ii) **சர்வதேச நீதிமன்றத்தின் நீதி அதிகாரம் யாவை?**

(அ) அங்கத்துவ நாடுகள் சர்வதேச விவகாரம் தொடர்பான பிரச்சினைகளை முன்வைக்கும்போது அதனை விபரிக்கும் உரிமை.

(ஆ) முக்கிய விடயங்களில் பிரச்சினைக்கு உட்பட்ட இரு நாடுகளும் நீதிமன்றத்திற்கு ஏற்றுக்கொள்ளுமாறு உடன்படிக்கை அல்லது வற்புறுத்தும் உரிமை.

(iii) **இதன் கட்டமைப்பினை விளக்குக.**

(அ) 15 நீதிபதிகள் ஐ.நா. பொதுச்சபையாலும் பாதுகாப்புச் சபையாலும் தெரிவாவர்.

(ஆ) ஒரு நாட்டிலிலிருந்து ஒரு நீதிபதி தெரிவாவார். அவரது பதவிக்காலம் ஒன்பது ஆண்டுகள்.

(இ) சர்வதேச நீதிமன்றத்தின் நாடுகளே வழக்குத் தாக்கல் செய்யலாம்.

**30. ஐ.நா. சர்வதேச நீதிமன்றத்தின் பணிகள் யாது?**

(i) அங்கத்துவ நாடுகள் சர்வதேச பிணக்குகளை சமாதானமாகத் தீர்த்துக்கொள்ளச் சமர்ப்பிக்கும் அறிக்கைகளைப் பரிசீலித்தல்.

(ii) பாதுகாப்புச்சபை குறித்த விடயங்கள் தொடர்பாக விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பணித்தல்.

(iii) பாதுகாப்புச்சபைக்கும் பொதுச்சபைக்கும் நீதி தொடர்பான சட்ட ஆலோசனைகளை வழங்குதல்.

**31. ஐ.நா. சபையின் செயலகம் குறித்து விளக்கம் தருக.**

(i) ஐ.நா. வின் முக்கிய நிர்வாக நடவடிக்கைகள் இதன்மூலம் நடைபெறுகின்றது.

(ii) தலைமையகம் நியூயோர்க்கிலுள்ளது. தலைமையகத்தில் சுமார் 4800 பேர் பணிபுரிகின்றனர்.

(iii) ஐ.நா.சபையின் தாபனங்களுக்கான சேவைகளை வழங்குவதும், நிகழ்ச்சித் திட்டமிடலும் செயலகத்தின் பணிகள்.

(iv) செயலகத்தின் முக்கிய நிர்வாகி, செயலாளர் நாயகம் ஆவார். இவர் பாதுகாப்புச் சபையின் விதந்துரையின்படி பொதுச் சபையால் நியமிக்கப்படுவார். இவரது பதவிக் காலம் 5 வருடங்களாகும்.

(v) செயலாளர் நாயகம் ஐக்கிய நாடுகளின் சாசனங்களுக்கு அமைவாக அவற்றைச் செயற்படுத்தும் பிரதான நிர்வாக அதிகாரியாவார்.

(vi) இவர் அதி பொறுப்புள்ள அதிகாரி, இராஜதந்திரி, செயற்பாட்டாளர், ஆலோசகர் புதிய கருத்துக்களின் ஊற்றுமாவர்.

(vii) உலக அமைதி, பாதுகாப்பு ஆகியவற்றிற்கு அச்சுறுத்தல் ஏற்படும்போது அதனைப் பாதுகாப்புச் சபையின் கவனத்திற்குக் கொண்டு வருபவரும், தேவையான ஆலோசனையை வழங்குபவராகவும் செயற்படுவார்.

(viii) சர்வதேச சமூகத்தில் அங்கத்துவ நாடுகளுக்காக அரச மட்டத்தில் செயற்படும் சேவையாளராகவும் விளங்குகிறார்.

**32. ஐ.நா. சபையின் இணைப்பு நிறுவனங்கள் எவை?**

(i) **யுஎன்டிபி** – ஐ.நா. அபிவிருத்தித்திட்டம்
(UNDP) - (United Nations Development Programme)

(ii) **யுனிசெப்** (UNICEF) ஐ.நா சர்வதேச சிறுவர் நலநிதியம்
(U.N Children Educational Fund)

(iii) **யுஎன்எஃப்பிஏ** (UNDFPA) ஐ.நா. குடித்தொகைச் செயற்பாட்டு நிதியம்
(UN Fund for Population Activities)

(iv) **யுஎன்ஈபி** (UNEP)- ஐ.நா சுற்றுச்சூழல் திட்டம்.
(UN Environment Prgramme)

(v) **அங்ராட்** (UNCTAD) வர்த்தகம் மற்றும் அபிவிருத்திக்கான ஐ.நா. மகாநாடு
(UN Conference on Trade and Development)

(vi) **யுஎன்டிசிபி** (UNDCP) -
ஐ.நா. போதைப்பொருள் கட்டுப்பாட்டுத் திட்டம்
(UN International Drug Control Programme)

(vii) **யு.என்.எச்.சி.ஆர்**(UNHCR)
ஐ.நா. அகதிகள் உயர் ஆணையாளர்
(UN High Commissioner for Refugees)

**33. ஐ.நா. தாபனத்தின் பிரதான சிறப்பு கழகங்கள் எவை?**

(i) எப்ஏஓ (FAO) உணவு மற்றும் விவசாய நிறுவனம்
(Food and Agriculture Organization)

(ii) ஐபிஆர்டி (IBRD) – புனரமைப்பிற்கும் அபிவிருத்திக்குமான சர்வதேச வங்கி. உலக வங்கி
(International Bank for Reconstruction and Development) (World Bank)

(iii) ஐடிஏ (IDA) – சர்வதேச அபிவிருத்திக் கழகம்
(International Development Association)

(iv) ஐ.எஃப்சி (IFC) – சர்வதேச நிதிக்கழகம்
(International Finance Corporation)

(iv) ஐசிஏஓ – (ICAO) சர்வதேச விமானப் போக்குவரத்து நிறுவனம்
(International Civil Aviation Organization)

**34. யுனெஸ்கோ (UNESCO) குறித்துச் சுருக்கமாக விளக்குக.**

(i) 1946இல் ஆரம்பிக்கப்பட்டது. 182 நாடுகள் இந்த நிறுவனத்தில் உள்ளன. தலைமையகம் பிரான்சில் உள்ளது.

(ii) அங்கத்துவ நாடுகளின் கல்வி, அறிவியல், கலாசாரம் தொடர்பான விருத்தியை ஏற்படுத்துதல்.

(iii) சர்வதேச மட்டத்தில் உள அமைதியை உருவாக்கல், அதனால் உலக சமாதானம் நிலவ வைத்தல்.

**35. இலங்கையில் யுனெஸ்கோ நிறுவனம் மேற்கொண்டுள்ள சேவைகள் யாவை?**

(i) இலங்கையின் முறைசார் கல்வி தொடர்பான கல்வி வளர்ச்சிக்கு உதவுதல்.

(ii) இலங்கையின் திறந்த பல்கலைக்கழகம், மொரட்டுவ பல்கலைக்கழகம், இலங்கைத் தேசிய நூல் நிலையம், இலங்கைத் தேசிய கல்வி நிறுவனம், சக்தி வளங்கள், விஞ்ஞான அதிகாரசபை ஆகிய நிறுவனங்களின் வளர்ச்சிக்கு உதவுதல்.

(iii) கலாசார முக்கோண வலயத்தினுள் உள்ள முக்கிய நிலையங்களை புனரமைக்க உதவுதல். (இவ்வகையில் ஜேத்துனராம தாதுகோபம் புனரமைக்கப்பட்டு வருகின்றது.)

**36. யுனிசெப் – ஐக்கிய நாடுகளின் சர்வதேச சிறுவர் நிதியம் குறித்து விளக்கம் தருக.**

(i) இரண்டாம் உலக மகாயுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இலட்சக்கணக்கான சிறுவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக 1946இல் ஆரம்பிக்கப்பட்டது.

(ii) நாதியற்ற சிறுவர்களின் எதிர்கால நீண்ட வளர்ச்சிக்காக உருவாக்கப்பட்டது.

(iii) உலகம் பூராகவும் வாழும் உதவி தேவைப்படும் சிறுவர்களுக்கு சமூக அபிவிருத்திக்கான நிதியத்தை பெற்றுக் கொடுத்தலே இதன் பிரதான நோக்கம்.

(iv) சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல், சிறுவர்களின் முழு வளர்ச்சியை ஏற்படுத்தல், குறித்த நாடுகளினதும் ஐ.நா. தாபனங்களினதும், அரச சார்பற்ற நிறுவனங்களினதும் உதவியைப் பெற்றுக்கொடுத்தல் இதன் நோக்கமாகும்.

ஐக்கிய நாடுகள்
மனித உரிமைகள் நிலையம்

யுனிசெப்

**37. யுனிசெப்பின் குறிக்கோள்கள் எவை?**

(i) குழந்தைகளின் மரண விகிதத்தை மூன்றில் ஒன்றாகக் குறைத்தல்.

(ii) குழந்தைகளின் போசாக்கின்மையைக் குறைத்து போசாக்கு நிலையை உயர்த்தல்.

(iii) எல்லாக் குழந்தைகளுக்கும் அடிப்படை சுகாதார வசதிகளை வழங்க திட்டமிடல்.

(iv) சகல குழந்தைகளும் ஆரம்பக்கல்வியைப் பெறுவதை உறுதிப்படுத்தல். சிறுவர் துஷ்பிரயோகங்களை ஒழித்தல்.

**38. உலகச் சுகாதார தாபனம் (WHO) குறித்து தகவல்கள் தருக.**

(i) 1948ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 189 நாடுகள் இதில் அங்கத்துவம் வகிக்கின்றது.

(ii) அங்கத்துவ நாடுகளின் சுகாதார சேவைகளை வளர்ச்சியுறச் செய்வதே இந்த அமைப்பின் பிரதான நோக்கமாகும்.

**இதன் நோக்கங்கள் வருமாறு :**

(i) உலகிலுள்ள மக்கள் அனைவரினதும் சுகநலன்களை உச்ச அளவில் பேணுதல்.

(ii) நாடுகளின் சுகாதார செயற்திட்டங்களை திட்டமிடல், நிர்வகித்தல், மதிப்பீடு செய்தல் ஆகியவற்றிற்கு உதவியளித்தல்.

(iii) சுகாதாரம் தொடர்பான தகவல்கள், தொழில்நுட்பங்கள், உபகரணங்கள் என்பனவற்றைப் பரிமாறிக்கொள்ளல்.

(iv) இந்தத் தாபனம் இலங்கையின் 40க்கு மேற்பட்ட செயற் திட்டங்களுக்கு உதவி அளித்துள்ளது.

**39. புனரமைப்பும் அபிவிருத்திக்குமான சர்வதேச வங்கி குறித்து விளக்குக.**

(i) இது உலகவங்கி எனவும் அழைக்கப்படும். 1944ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டே பின்பு 1949ஆம் ஆண்டு தனது செயற்பாட்டைத் தொடங்கியது. 175 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

(ii) ஏழை நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்கு உதவுவது இதன் நோக்கமாகும்.

(iii) அங்கத்துவ நாடுகளின் புனரமைப்புக்கும் அபிவிருத்திக்கும் தேவையான முதலீட்டு உதவிகளை வழங்கல்.

(iv) நாடுகளின் சென்மதி நிலுவைப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள உதவுதல்.

(v) அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் வறுமையை ஒழிப்பதும், வறிய நாடுகளின் பொருளாதார சக்தியைப் பெருக்குதலும்.

(vi) நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தல்.

**40. உலகவங்கியின் செயற்பாடுகள் யாவை?**

(i) கோரும் நாடுகளுக்குக் கடன் வழங்குதல். அது வட்டியுடனோ, வட்டியில்லாமலோ அமையும்.

(ii) பொருளாதார ஆலோசனைகளையும் தொழில்நுட்ப உதவிகளையும் வழங்குதல்.

(iii) குறிப்பாக அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்குத் தேவையான முதலீடு தொடர்பான வழிகாட்டல்களை வழங்கல்.

**41. உலகவங்கியின் இலங்கைக்கான உதவிகள் எவ்வாறுள்ளன?**

இலங்கையின் பலதரப்பட்ட திட்டங்களுக்கு உதவி வந்துள்ளது. இன்றும் உதவி வருகின்றது. உதாரணமாக, கொழும்பு சுற்றாடல் அபிவிருத்தித் திட்டம், வறுமை ஒழிப்புத்திட்டம், பொதுக்கல்வி அபிவிருத்திட்டம், கொழும்புப் போக்குவரத்து

அபிவிருத்தி திட்டம், சுகாதாரம் – சனத்தொகைத் திட்டம், நீர்ப்பாசனப் புனருத்தாரணத்திட்டம், பொருளாதார மறுசீரமைப்புத் திட்டம், மின்சக்தி – தொலைத்தொடர்பு அபிவிருத்தித் திட்டங்கள் எனப் பல திட்டங்களுக்கு உலகவங்கி உதவிகளைப் புரிந்து வந்துள்ளது.

**42. ILO, UNTAD, IMF, UNDP, UNFPA, UNIDO, WFP எனும் நிறுவனங்கள் குறித்துச் சுருக்க விளக்கம் தருக.**

(i) ILO சர்வதேச தொழிலாளர் நிறுவனம். உலகத் தொழிலாளர்களின் நலன்களைப் பேணுகின்றது.

(ii) UNTAD வர்த்தகம் அபிவிருத்தி தொடர்பான ஐ.நா. மகாநாடு. வளரும் நாடுகளின் வர்த்தகப் பங்கெடுப்பை அதிகரிக்கச் செய்யும நோக்கமுடையது.

(iii) IMF – சர்வதேச நாணய நிதியம் 1945இல் நிறுவப்பட்டது. வளரும் நாடுகளுக்கான நிதியுதவும் நிறுவனம்.

(iv) UNDP – ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்டம். மூலதனம், தொழில்நுட்ப உதவிகளை வழங்கும் நிறுவனம்.

(v) UNFPA ஐ.நா சனத்தொகை நிதியம், மக்கள் பெருக்க அபாயத்தைச் சுட்டிக்காட்டுதல், குடும்பக் கட்டுப்பாட்டை வலியுறுத்தல் இதன் நோக்கம்.

(vi) UNIDO ஐ.நா. கைத்தொழில் அபிவிருத்தி அமையம் – அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு கைத்தொழில் சம்பந்தமான தொழில் ஆலோசனைகளை வழங்கி வருகின்றது.

(vii) WFP - உலக உணவுத்திட்டம் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு உணவு சம்பந்தமான உதவிகள், நிவாரணங்கள் அளித்தல், உணவில் தன்னிறைவடைய ஆலோசனை வழங்கல், போஷாக்கு மட்டத்தை உயர்த்த உதவுதல்.

***43. ஐ.நா. தாபனத்தின் முக்கிய நோக்கங்களும் செயற்பாடுகளும் யாவை?***

உலக சமாதானத்தை நிலைநாட்டுதல், உலக சனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கை கொண்டிருக்கும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் சமூக, பொருளாதார அபிவிருத்திக்கான செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

**44. ஒவ்வொரு காலத்திலும் சில முக்கிய அம்சங்களைக் கருத்தில் கொண்டு, அவை தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு சர்வதேச சமூகத்தை ஒன்றுதிரட்டும் மகாநாடுகள் நடத்தப் பட்டு வருகின்றன. அவற்றிற்கு உதாரணங்கள் தருக.**

(i) ஐ.நா.நீர்வழங்கல் மாநாடு (மாடல்சியாட் – 1977)

(ii) பெண்கள் தொடர்பான மாநாடு (நைரோபி – 1977)

(iii) அபிவிருத்தியடைந்து நாடுகளுக்கு தொழில்நுட்ப உதவிகள் வழங்கல் மாநாடு ( புவனஸயர்ஸ் – 1978)

(iv) பெண்கள் சமவுரிமை, அபிவிருத்தி, சமாதானம் தொடர்பான மாநாடு (கொபன்கேயன் – 1980)

(v) குறைவிருத்தி நாடுகள் தொடர்பான மாநாடு (பாரிஸ் – 1981)

(vi) சனத்தொகை மாநாடு (மெக்சிக்கோ – 1983)

(vii) போதைப்பொருள் பாவித்தல், சட்டவிரோதப் போக்குவரத்து தொடர்பான மாநாடு (வியன்னா – 1987)

(viii) ஐ.நா.வின் குறைவிருத்தி நாடுகள் தொடர்பான இரண்டாவது மாநாடு (பாரிஸ்)

(ix) குழந்தைகள் தொடர்பான மகாநாடு (நியூயோர்க் – 1990)

(x) சுற்றாடல் அபிவிருத்தி தொடர்பான மாநாடு (றியோடிஜெனிரோ – 1992)

**45. ஐ.நாடுகள் அமையம் உலக சமாதானத்தை நிலைநாட்டுவதற்காக மேற்கொண்ட சந்தர்ப்பங்கள் நான்கினைக் கூறுக.**

(i) ஈரான் – ஈராக் நாடுகளுக்கிடையில் எட்டு ஆண்டுகளாக நடந்த யுத்தத்தில் ஐக்கிய நாடுகள் தலையிட்டு 1997இல் தீர்த்து வைத்தது.

(ii) 1991ஆம் ஆண்டு சோமாலியாவில் ஏற்பட்ட யுத்தத்தால் 3 இலட்சம் பேர் இறந்து, 10 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டு அகதியாயினர். அவர்களுக்கான நிவாரண உதவிகளை ஐ.நாடுகள் வழங்கி வருகின்றது. அவ்வாறே ருவாண்டாவிலும் 30 இலட்சம் பேர் அகதிகளாயினர். அவர்களுக்கும் நிவாரண உதவி வழங்கி வருகின்றது.

(iii) மத்திய அமெரிக்காவில் எல்சல்வடோர் அரசாங்கத்திற்கும் தீவரவாதிகளுக்கும் (பராவுண்டோ மார்டி விடுதலை முன்னணி) இடையில் நடந்த 12 வருட யுத்தத்தை நிறுத்தி சமாதான ஒப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

(iv) கம்போடியாவில் குழுக்களிடையே நிகழ்ந்த மோதல்களை நிறுத்தி, ஒப்பந்தம் மூலம் சமாதானத்தை ஏற்படுத்தியுள்ளது.

**46. ஐ.நா. அமையத்தின் விருப்பிற்கு மாறாக ஏற்பட்ட நிகழ்வுகள் இரண்டினைத் தருக.**

(i) ஈராக் மீது அமெரிக்காவும் பிரித்தானியாவும் (மார்ச் 2003) இல் தொடுத்த யுத்தம் ஐ.நா விருப்பிற்கு மாறானது. வீட்டோ எனப்படும் ரத்துச் செய்யும் அதிகாரம் அமெரிக்காவிற்கு இருப்பதால் ஐ.நா விருப்பிற்கு மாறாக இந்த யுத்தத்தை தொடங்கியது.

(ii) நிலக்கண்ணிவெடி, பொறிவெடி என்பவற்றிற்கு ஐ.நா தடை விதித்தும் பயன் ஏற்படவில்லை. அவை தொடர்ந்து விதைக்கப்பட்டு வருகின்றன. அதேபோல இரசாயன ஆயுதங்களின் உற்பத்திக்கும் தடையுள்ளது. எனினும், சில நாடுகளுடன் இரசாயன ஆயுதங்களுள்ளன எனக் கூறப் படுகின்றது.

**47. ஐ.நா. அமையம் நடாத்திய ஆயுதக் குறைப்பு சம்பந்தமான மாநாடுகள் எவை?**

(i) *1963* – அணுசக்தி ஆயுதங்களைப் பரீட்சிப்பதைத் தடை செய்யும் ஒப்பந்தம்

(ii) *1967* – லத்தீன் அமெரிக்கா, கஸ்பியன் பிரதேசம் தென்பசுபிக் சமுத்திரம் ஆகியவற்றில் அணு ஆயுதங்களைப் பரீட்சிப் பதைத் தடைசெய்யும் மாநாடு

(iii) *1981* – நிலக்கண்ணிவெடி, பொறிவெடி பாவித்தலை தடைசெய்வதற்காக மாநாடு

(iv) *1985* – தென் பசுபிக் பிரதேசத்தில் அணு ஆயுதமற்ற சுதந்திர விவசாய ஒப்பந்தம்

**48. ஐக்கிய நாடுகள் அமையத்திற்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகளை விளக்குக.**

(i) *1955*ஆம் ஆண்டு இலங்கை ஐ.நா அமையத்தில் அங்கத்துவ நாடாகச் சேர்ந்து கொண்டது.

(ii) சமூகப் பொருளாதார கலாசார கல்வி தொடர்பான விடயங் களுக்கு ஐ.நா. சபையின் உதவிகளை இலங்கை பெற்றுக் கொண்டது.

(iii) மனிதவள மேம்பாட்டிற்கும் ஐக்கிய நாடுகள் சபையில் இருந்தும் இலங்கை ஐ.நா. விடமிருந்து பெருமளவு உதவிகளைப் பெற்றுக்கொண்டது.

(iv) நிதி, பண்டங்கள், தொழில்நுட்ப உதவிகள் என்பன ஐ.நா சபையால் இலங்கைக்கு காலத்திற்குக் காலம் வழங்கப்பட்டு வருகின்றது.

**இலங்கைக்கு உதவி**

| | | |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் அமயமும் அதன் இணைப்பு நிறுவனங்களும் இலங்கைக்கு வழங்கும் உதவிகள் | முதல் | தேசிய அபிவிருத்திக்கான வேலைத்திட்டங்களுக்கு உதவி |
| | பயிற்சி வசதிகள் | |
| | சிறப்பு அறிவு | பிரதான பொருளாதாரத் துறைகளுக்கும் தாபனங் களுக்கும் உதவி |
| | தொழில்நுட்ப உதவி | மூலதனம் (கடன் பொருட்கள்) |
| | உதவிப் பொருட்கள் | உணவு வசதிகள்<br>உபகரணங்கள்<br>பயிற்சி உதவிகள்<br>சிறப்பு அறிவு |

(v) இலங்கையில் ஐ.நா.வுடன் தொடர்பான 13 நிறுவனங்கள் தமது பணிமனைகளை நிரந்தரமாக அமைத்து இயங்கி வருகின்றன. UNESCO, உலகவங்கி (IBRD), UNICEF, UNFPA

(vi) இலங்கையின் இலக்ரோனிக் தொடர்புசாதனத் துறைக்கு உதவி பலவும் வழங்கி வருகின்றது.

(vii) கொழும்புப் பல்கலைக்கழம், சப்பிரகமுகா இணைந்த பல்கலைக்கழகம் என்பனவற்றிற்கு நவீன தொடர்பாடல் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து உள்ளது.


(viii) இலங்கை அரசுக்கும் தமிழ்ப் போராளிகளுக்குமிடையிலான யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பல்வேறு ஐ.நா. இணைப்பு நிறுவனங்கள் உதவிவருகின்றன. (UNESCO, UNDP, UNICEF )

# சர்வதேச அமைப்புகள் வினாவிடைகள்

## பகுதி - I

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**தரப்பட்டுள்ள தேசப்படத்தைப் பயன்படுத்தி 1 தொடக்கம் 5 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.**




1. **ஐ. நா. தலைமையகம் நியூயோர்க் அமைந்துள்ள எழுத்து?**

   *1)* A  *2)* D  *3)* B  *4)* C

2. UNHER **(யுனென்எச்சிஆர்) அமைந்துள்ள தலைநகரம் அமைந்துள்ள எழுத்தும் தலைநகரமும்**

   *1)* D நியூயோர்க்  *2)* B வியன்னா
   *3)* A சுவிற்லாந்து  *3)* C வாஷிங்டன்

3. IBRD **உலக வங்கியின் தலைமைப்பணிமனை அமைந்துள்ள நகரத்தைக் குறிக்கும் எழுத்து**

   *1)* C  *2)* B  *3)* D  *4)* E

4. UNESCO ஐ.நா. கல்வி, அறிவியல், கலாசார நிறுவனம் (பாரிஸ்) தலைமையகம் அமைந்துள்ள நகரத்தைக் குறிப்பது

1) A  2) G  3) F  4) C

5. Wito உலக சுகாதார நிறுவனத்தின் தலைமைப் பணிமனை அமைந்து உள்ள நகரத்தைக் குறிப்பிடுக.

1) D  2) A  3) H  4) 2F

6. ஐ.நா பாதுகாப்புச்சபையின் நிரந்தர உறுப்பினர்களான ஐந்து நாடுகளுக்கும் உள்ள விசேட சிறப்புரிமை யாது?

1) செயலாளர் நாயகத்தை நியமித்தல்
2) எந்தவொரு உறுப்பு நாட்டின் மீதும் ஆயுதப்படையைப் பயன்படுத்தல்.
3) உறுப்பு நாடுகளுக்கு உதவிப் பணத்தை பகிர்ந்தளித்தல்.
4) இரத்துச் செய்யும் அதிகாரத்தைப் பயன்படுத்தல்.

7. (A) சர்வதேச சமாதானத்தையும் பாதுகாப்பையும் பேணுதல்.
(B) உறுப்பு நாடொன்றிலே உள்நாட்டுப் பிணக்குகள், ஏற்படும் போது தலையிடுதல்.
(C) நாடுகளிடையே நட்புறவை வளர்த்தல்.
(D) அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுடனான ஒத்துழைப்பை வலுப்படுத்தல்.

மேற்கூறிய கூட்டுக்களிடையே ஐக்கிய நாடுகள் அமையத்தின் நோக்கங்களை மட்டும் உள்ளடக்கிய விடையைத் தெரிவு செய்க.

1) BD  2) BE  3) AC  4) AE



A  B  C  D

8. மேற்தரப்பட்ட இலச்சினைகளில் சார்க், யுனிசெப் ஆகிய தாபனங் களின் இலச்சினைகளை ஒழுங்குமுறைப்படி தருக.

1) A யும் B யும்  2) B யும் C யும்
3) C யும் D யும்  4) D யும் A யும்

9. **ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பினர்களான அரசுகளின் பெயர்கள் அடங்குகிற விடை யாது?**

1) ருஷியா, அமெரிக்கா, சீனா, ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ்
2) அமெரிக்கா, கனடா, ருஷியா, பிரான்ஸ், ஐக்கிய இராச்சியம்
3) ஐக்கிய இராச்சியம், சீனா, அவுஸ்திரேலியா, ருஷியா, பிரான்ஸ்
4) பிரான்ஸ், இந்தியா, சீனா, அமெரிக்கா, ஜேர்மனி

10. **'சார்க்' அமைப்பின் குறிக்கோள் அல்லாதது.**

1) தென் ஆசிய நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை விருத்தி யடையச் செய்தல்.
2) சமூக முன்னேற்றத்தையும் கலாசாரத்தையும் பாதுகாத்தல்.
3) அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு படை உதவிகளை வழங்குதல்.
4) தென்னாசிய நாடுகளின் பாதுகாப்பைப் பலப்படுத்துதல்.

11. **சார்க் அமைப்பின் வர்த்தக உடன்பாடு எது?**

1) SAVE 2) UNCTAD 3) GATT 4) SAFTHA

12. **கொழும்புத்திட்டத்தில் அங்கம் வகிக்காத நாடுகளின் தொகுதி**

1) கானா, பிறேசில், பிரான்ஸ், ஜேர்மனி, நோர்வே
2) ஐக்கிய இராச்சியம், நியூசிலாந்து, சிங்கப்பூர், அவுஸ்தி ரேலியா, கனடா
3) ஐக்கிய அமெரிக்கா, இலங்கை, லாவோஸ், மியன்மார்க், பிலிப்பைன்ஸ், இந்தியா
4) ஈரான், பப்புவா, நியூகினி, பாகிஸ்தான், நேபாளம், தாய்லாந்து, பூட்டான்.

13. (A) **அங்கத்துவ நாடுகளுக்கிடையில் அரசியல், பொருளாதார, கலாசாரத்துறைகளில் பரஸ்பர நல்லுறவுகளை வளர்த்தல்.**

(B) **தொழில்நுட்பங்களைப் பரிமாறிக் கொள்ளல்.**

(C) **தொடர்பாடல் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.**

(D) **அங்கத்துவ நாடுகளிடையே பாதுகாப்பைப் பேணல்.**

**மேல்குறித்த கூற்றுக்களில் பொதுநலவாயத்தின் குறிக்கோள்க ளெனக் குறிப்பிடத்தக்கவை.**

1) B யும் C யும் 2) A யும் B யும்
3) D யும் C யும் 4) A யும் C யும்

14. **ஐக்கிய நாடுகள் சபையின் தினம் யாது?**

*1)* மே 8 ஆந் திகதி *2)* மார்ச் 8 ஆந் திகதி
*3)* அக்டோபர் 24 ஆந் திகதி *4)* ஜூலை 11 ஆந் திகதி

15. **அங்கத்துவ நாடுகளின் கல்வி, விஞ்ஞானம், கலாசாரம் தொடர்பான அபிவிருத்தியை ஏற்படுத்தும் ஐ.நா தாபனம் எது?**

*1)* UNICEF *2)* UNESCO *3)* UNDIO *4)* UNDP

## பகுதி - II

*1.* புனரமைப்புக்கும் அபிவிருத்திக்குமான சர்வதேசவங்கி, ஆசிய அபிவிருத்திவங்கி, ஐரோப்பிய பொதுச்சந்தை, சர்வதேச அபிவிருத்திச் சங்கம், உங்ராட் நிறுவகம், கார்ட் (Catt) தாபனம்

(i) மேலே கூறப்பட்டுள்ள நிறுவகங்களில் வெளிநாட்டு வியாபாரத்துடன் தொடர்புடைய சர்வதேச தாபனங்கள் மூன்றின் பெயர் குறிப்பிடுக.

(ii) சர்வதேச வர்த்தகத்தில் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் நான்கைக் குறிப்பிடுக.

(iii) இந்தியா போன்ற பெரிய நாட்டுடன் வியாபார உடன்படிக்கைகளை ஆரம்பிப்பதால் இலங்கை போன்ற சிறிய நாட்டுக்கு ஏற்படும் அனுகூலம் ஒன்றையும் பிரதிகூலம் ஒன்றையும் விவரிக்க.

(iv) வெளிநாட்டு உதவிகளைப் பெறுவதினால் தற்போது இலங்கை எதிர்நோக்கும் பிரச்சினை ஒன்றைக் குறிப்பிட்டு அவற்றைத் தீர்ப்பது தொடர்பான பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள் இரண்டினை விளக்குக.

**2.**




(i) மேலே அ, ஆ, இ என்பதால் காட்டப்படுபவை சார்க் அமைப்புக்கு உரிய நாடுகள் மூன்றின் தேசியக் கொடிகளாகும். அவற்றுக்குரிய நாடுகளை அ, ஆ, இ என்ற ஒழுங்கு வரிசைப்படி பெயர் குறிப்பிடுக.

(ii) (A) பெற்றோலியப் பொருள்களின் விலையை உறுதியாக வைத்திருத்தல்.

(B) உறுப்பு நாடுகளின் சுகாதார வசதிகளை அதிக முன்னேற்றமடையச் செய்தல்.

(C) சுதந்திரம் பெற்ற பிரித்தானியாவின் குடியேற்ற நாடுகளுடன் தொடர்பினை மேலும் கொண்டிருத்தல்.

(D) தென் ஆசிய நாடுகளில் பொருளாதார சமூக முன்னேற்றத்தை ஏற்படுத்தல்.

மேற்குறிப்பிட்ட அடிப்படை நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு ஆரம்பிக்கப்பட்ட அமைப்புக்கள் எவை என்பதை A, B, C, D என்ற ஒழுங்குவரிசைப்படி எழுதுக.

(iii) குறிப்பிட்ட நாடுகள் வலய அமைப்புக்களை உருவாக்குவதால் பெறக்கூடிய அனுகூலங்கள் யாவை என்பதை இரண்டு காரணிகள் மூலம் விளக்குக.

(iv) சார்க் அமைப்பின் வெள்ளி ஏனைய உறுப்பு நாடுகள் தொடர்பாக இந்தியா பின்பற்றும் கொள்கையிலேயே தங்கியுள்ளது என்பதை இரண்டு உதாரணங்கள் மூலம் விளக்குக.

3. (i) UNCEF நிறுவனம் இலங்கைக்குச் செய்த உதவிகள் நான்கினைக் குறிப்பிடுக.

(ii) WFP, UNHCR, UNDP, UNFPA நிறுவனங்களின் இலங்கைக்கான செயற்பாடுகள் ஒவ்வொன்றைக் குறிப்பிடுக.

(iii) 'ஐக்கிய நாடுகள் சபையில் பல குறைபாடுகள் காணப்பட்டபோதும் இதுவே சமூகத்தின் நன்மையைக் கருதும் ஒரே ஒரு அமையமாக விளங்குகிறது.' இக்கூற்றினை இரண்டு காரணங்கள் தந்து நிரூபிக்க.

4. (i) பின்வரும் நிறுவன அமைப்புக்களை சர்வதேச நிறுவனங்கள், பிராந்திய நிறுவனங்கள் என வகைப்படுத்துக.

ஐக்கிய நாடுகள், கொழும்புத்திட்டம், சார்க், பொதுநலவாயம், உலகவங்கி, ஆசியான், நேட்டோ, உலக வர்த்தக தாபனம், அங்டாட், ஐரோப்பிய பொருளாதார ஒன்றியம்

(ii) ஐக்கிய நாடுகள் உலக சமாதானத்தை நிலைநாட்டுவதற்காக ஆற்றியுள்ள பங்களிப்புக்கள் நான்கினைக் குறிப்பிடுக.

(iii) அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் சர்வதேச வியாபாரத்தில் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக உருவாக்கப்பட்ட 'அங்டாட்' (UNCTAD) தாபனம் வளர்முக நாடுகளுக்கு உதவும் விதத்தை இரு காரணிகளின் உதவியுடன் விளக்குக.


(iv) பிராந்திய அமைப்புக்கள் தோற்றுவிக்கப்படுவதனால் ஒரு நாடு அடைந்துகொள்ளும் இரு அனுகூலங்களைச் சுருக்கமாக விளக்குக.

5. (i) 'சார்க்' அமைப்பில் உள்ள மூன்று நாடுகளைக் குறிப்பிடுக.

(ii) இவ்வமைப்பினைச் சார்ந்த நாடுகளுக்குரிய பொதுவான பிரச்சினைகள் நான்கினைக் குறிப்பிடுக.

(iii) 'சார்க்' நாடுகளிடையே ஒற்றுமைகள் காணப்படுவது போல் வேறுபாடுகளும் காணப்படுகின்றன. அந்நாடுகளுக்கிடையில் காணப்படும் வேறுபாடுகள் இரண்டினைச் சுருக்கமான விபரிக்குக.

(iv) சார்க் நாடுகள் ஒரு வலயமாகக் கூட்டு ஒத்துழைப்பினை மேற்கொள்வதால் ஏற்படும் இரண்டு சாதகமான விளைவுகளை விளக்குக.




மேலே தரப்பட்டுள்ள படத்தில் 'சார்க்' அமையத்தில் இடம் பெறும் நாடுகள் காணப்படுகின்றன.

(v) படத்தின் 1, 2, 3 என்ற இலக்கங்களினால் காட்டப்படும் நாடுகளின் பெயர்களை, அவ்வவ் எண்களின் ஒழுங்கில் எழுதுக.

(vi) இந்த வலயத்திலுள்ள நாடுகளை, அபிவிருத்தியடைந்த நாடுகளிலில் இருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்கு உதவும் நான்கு காரணிகளை எழுதுக.

# விடைகள்

## பகுதி I

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| *(1)* | 2 | *(2)* | 4 | *(3)* | 1 | *(4)* | 2 |
| *(5)* | 2 | *(6)* | 4 | *(7)* | 3 | *(8)* | 3 |
| *(9)* | 1 | *(10)* | 3 | *(11)* | 4 | *(12)* | 1 |
| *(13)* | 2 | *(14)* | 3 | *(15)* | 2 | | |

## பகுதி II

*1.* (i) உங்டாட் நிறுவனம், கார்ட் தாபனம், ஐரோப்பிய பொதுச் சந்தை

(ii), (iii), (iv) ஆகிய வினாக்களுக்கான விடைகள் சர்வதேச வர்த்தகம் என்ற அத்தியாயத்தில் ஏற்கனவே தரப்பட்டுள்ளன.

*2.* (i) A – இந்தியா B – பாகிஸ்தான் C – நேபாளம்

(ii) A – ஒபெக் B – உலக சுகாதார நிறுவனம் (WHO)
C – பொதுநலவாயம் D – சார்க் அமைப்பு

(iii) *(அ)* பிராந்தியங்களுக்கிடையே பொருளாதார, உத்திகளையும், பாதுகாப்பினையும் பேணிக்கொள்ளமுடியும்.

*(ஆ)* விஞ்ஞானம், தொழில்நுட்பம், கலை, கலாசாரம், தொழில் வசதி என்பனவற்றில் இணைந்து செயற்பட முடியும்.

(iv) *(அ)* சார்க் அமைப்பில் மிக முக்கியமான நாடு இந்தியாவாகும், பரப்பளவிலும் குடித்தொகையிலும், இராணுவப் பலத்திலும் பெரியநாடு அதுவாகும்.

*(ஆ)* இந்து சமுத்திரப்பிராந்தியத்தில் பொருளாதாரத்தில் ஏனைய சார்க் நாடுகளிலும் பார்க்க கைத்தொழில், தொழில்நுட்பம் ஆகியவற்றில் முன்னேறிய நாடாக இந்தியா உள்ளது. எனவே சார்க் அமைப்பின் வெற்றி ஏனைய உறுப்பு நாடுகள் தொடர்பாக இந்தியா பின்பற்றும் கொள்கையிலேயே தங்கி உள்ளது.

*3.* (i) குழந்தைகளின் நலன்களை ஓம்புதல் நோக்கமாகச் செயற்பட்டு வருகின்றது. குழந்தைகளுக்கான நோய்த் தடுப்புக்களுக்கு உதவுகிறது.

(ii) குழந்தைகளின் போஷாக்கின்மையைத் தவிர்ப்பதற்கு திரிபோஷா போன்ற உணவுப் பொருட்களை வழங்கி வருகின்றது.

(iii) சிறுவர்களைத் துஷ்பிரயோகத்திற்குட்படுவதைக் கண் காணித்துத் தடுக்கிறது.

(v) குழந்தைகளுக்கான கல்வி, அடிப்படை உரிமைகள் என்பனவற்றிற்காகக் குழந்தைகளின் சர்வதேச நிதியத்தி லிருந்து உதவி வருகின்றது.

(vi) WFPC **(உலக உணவுத்திட்டம்)**

இயற்கை அனர்த்தங்கள் ஏற்பட்ட வேளைகளில் உதவி உள்ளது. உணவுற்பத்திக்கு உதவியுள்ளது.

UNHCR **(ஐக்கிய நாடுகள் தாபன அகதிகள் உயர் ஆணையம்)**

இலங்கையில் உள்நாட்டு யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட அகதிகளைப் பல வழிகளில் பராமரித்து வருகிறது.

UNDP **(ஐ.நா.அபிவிருத்தித் திட்டம்)**

இலங்கையின் வட பகுதியில் நிகழ்ந்துள்ள போர் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட கட்டமைப்புகளை மீளமைக்க உதவி வருகின்றது.

UNFPA **(ஐ.நா.குடித்தொகைச் செயற்பாட்டு நிதியம்)**

இலங்கையின் குடும்பக்கட்டுப்பாட்டு நடவடிக்கை களுக்கு நிதிவசதி, சுகாதார ஆலோசனைகளை வழங்கி வருகின்றது.

(vii) ஐக்கியநாடுகள் சபையில் பல குறைபாடுகள் காணப் படினும் சமூகத்தின் அபிவிருத்திக்கும் உலக சமாதானத் துக்கும் வழிகோலும் ஒரே ஒரு அமையமாக விளங்கு கின்றது. உலக நாடுகளிடையே ஏற்படும் பிரச்சினை களைத் தீர்ப்பதற்குப் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. குவைத் – ஈரான் போர், ஈரான் – ஈராக் போர், திமோரின் சுதந்திரம் ஆகியவற்றில் ஈடுபட்டு நியாயமான தீர்வைக் கண்டுள்ளது. தென்ஆபிரிக்கா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் மீது பொருளாதாரத் தடை களை விதித்து அவற்றின் மூலம் அவற்றின் தீய நடவடிக் கைகளைக் கட்டுப்படுத்தியுள்ளது. உலகில் சமாதானம் நிலவ ஐ.நா.இருப்பதும் ஒரு காரணம்.

4. (i) சர்வதேச நிறுவனங்கள் - ஐக்கிய நாடுகள் பொது நலவாயம், உலகவங்கி, உலக வர்த்தக தாபனம், அங்டாட்

**பிராந்திய நிறுவனங்கள்** - கொழும்புத்திட்டம், சார்க், ஆசியான், நேட்டோ, ஐரோப்பிய பொருளாதார ஒன்றியம்.

(ii) (அ) 1945 இல் இரண்டாம் உலக மகாயுத்தம் முடிவடைந்த பின்னர் மீண்டும் ஒரு உலக மகாயுத்தம் ஏற்படுவதைப் பல்வேறு சந்தர்ப்பங்களில் தடுத்துள்ளது.

(ஆ) பொஸ்னிய சேர்பிய யுத்தம், ஈராக் குவைத் ஆக்கிர மிப்பு, மத்தியகிழக்கு சமாதான முயற்சிகள் என்பன வற்றில் சமாதானம் நிலவ ஆற்றிய பணிகள் முக்கிய மானவை.

(இ) பாதுகாப்புச்சபையினூடாக ஐ.நா.வின் விதிகளை மீறிய தென்னாபிரிக்கா, பாகிஸ்தான், ஈராக், கியூபா ஆகிய நாடுகளுக்கு எதிராகப் பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது.

(ஈ) அதேபோல இராணுவ பலத்தை கிழக்கு திமோர் சுதந்திர நாடாக்கப்படவும், குவைத்தை ஈராக்கின் ஆக்கிரமிப் பிலிருந்து விடுவிக்கவும் பிரயோகித்துள்ளது.

(உ) அங்கத்துவ நாடுகளிடையே ஏற்படும் முரண்பாடு களைச் சமரசப்பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்து வைத்துள்ளது.

(iii) (அ) அங்டாட் நிறுவனம், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் ஏற்றுமதிப் பண்டங்கள் விலைத்தளும் பலுக்கு உள்ளாகாது குறைப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

(ஆ) அபிவிருத்தியடைந்த நாடுகளின் வர்த்தகப் பாதுகாப்புக் கொள்கைகள் மூலம், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் பாதிக்கப்படுவதைத் தடுப்பதற்காக நடவடிக் கைகளை மேற்கொண்டுள்ளது.

(iv) (அ) பிராந்திய அமைப்பு மூலம் மூலதனப் பரிமாற்றங்களை யும் தொழில்நுட்பப் பரிமாற்றங்களையும் மேற் கொள்ள முடியும்.

(ஆ) பிராந்திய அமைப்புகள் மூலம் கள்ளக்கடத்தல், போதைப் பொருள் பாவனை அதிகரித்தல் என்பன வற்றைத் தடைசெய்ய முடியும். பிராந்தியப் பாதுகாப் பையும் பலப்படுத்த முடியும்.

5. (i) இந்தியா, இலங்கை, பாகிஸ்தான்,

(ii) (அ) சனத்தொகை உயர்வாகவிருத்தல்.

(ஆ) ஆள்வீத வருமானம் தாழ்வாகவிருத்தல்.

(இ) உறுதியற்ற சுயதேவை விவசாயமுறை நிலவல்.

(ஈ) தொழில்நுட்பப் பற்றாக்குறை, மூலதனப் பற்றாக் குறை, சந்தை வாய்ப்பின்மை காணப்படல்.

(iii) (அ) சார்க் நாடுகளிடையே பரப்பளவு, பொருள்வளம் என்பனவற்றில் நாட்டிற்கு நாடு வேறுபாடுகள் உள்ளன.

(ஆ) இன, மத, மொழி வேறுபாடுகள் இந்நாடுகளில் காணப் படுகின்றன.

(iv) (அ) சார்க் பிராந்திய மக்களின் பொருளாதார, சமூக அந்தஸ்தை உயர்த்துவதன்மூலம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்.

(ஆ) நாடுகளிடையே பரஸ்பர உதவிகளையும் உறவு களையும் ஏற்படுத்துவதன் மூலம் பிராந்திய மக்களின் சக்தியை வளர்த்தல்.

(v) (1) பாகிஸ்தான்
(2) நேபாளம்
(3) வங்காளதேசம்

(அ) இவை அபிவிருத்தியடைந்த நாடுகளிலும் பார்க்கக் குடித்தொகையில் அதிகமானவை குடிப்பெருக்க வீதம் அதிகம்


(ஆ) அபிவிருத்தியடைந்த நாடுகள் செல்வந்த நாடுகளாக விளங்க, இவை வறிய நாடுகளாக விளங்குகின்றன.

(இ) அபிவிருத்தியடைந்த நாடுகள் கைத்தொழில் நாடு களாக விளங்க இவை விவசாய நாடுகளாக உள்ளன.

(ஈ) உயர்ந்த வாழ்க்கைத்தரம், நகராக்கமக்கள் வீதம் அதிகம், உயர் தொழில்நுட்பத்தோடு கூடிய நவீன வாழ்க்கை வசதிகள் அபிவிருத்தியடைந்த நாடுகளி லுள்ளன. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் இப்பண்புகள் அரிது.

அத்தியாயம்

# 3



# உலகின் சனத்தொகைப் பிரச்சனை

**1. *சனத்தொகைப் பிரச்சினைக்கான உடனடிக் காரணங்கள் எவை?***

(அ) விரைவான குடிப்பெருக்கம் 1750இல் 791 மில்லியன்களாக இருந்த சனத்தொகை இன்று 6 000 மில்லியன்களுக்கும் அதிகமாக அதிகரித்துள்ளது.


(ஆ) சனத்தொகைக்கும் வளங்களுக்குமிடையில் ஒரு சமநிலை காணப்படாமை. குறைந்த சனத்தொகை, குறைந்தளவிலான தேவைகள் நிலவிய முன்னைய காலத்தில் பிரச்சினை இருக்கவில்லை. ஆனால், இன்று வளங்களுடனான சாதக மான சமநிலைத்தன்மை குறைந்துவிட்டது.

**2. *புவியிலுள்ள வளங்கள் எவை?***

(அ) பௌதிக வளங்கள்- நீர், மண், வளி, கனியங்கள், தாவரங் கள், விலங்குகள்

(ஆ) மனித வளங்கள்

3. **பின்வரும் வரைபடத்தை அவதானிக்கவும்.**




(அ) இருகால கட்டங்களைக் கவனிக்கவும்.
A – 1900 – 2000 வரை B – 2000 – 2100 வரை

(ஆ) A காலகட்டத்தில் சனத்தொகை மட்டம் தாழ்வாகவும், வளங்களின் மட்டம் உயர்வாகவும் உள்ளன.

(இ) B கால கட்டத்தில் சனத்தொகை மட்டம் உயர்வாகவும் வளங்களின் மட்டம் தாழ்வாகவும் உள்ளன.
A காலகட்டத்தில் உணவுநிலை சீராகவும்
B காலகட்டத்தில் உணவு நிலை தாழ்ந்தும் உள்ளன.

(ஈ) A காலகட்டத்தில் சூழல் மாசடைதல் மிகத் தாழ்ந்த நிலையிலும், B காலகட்டத்தில் அதிகரித்தும் காணப்படுகின்றன.

4. **அதிகரித்துவரும் சனத்தொகைக்கேற்ப வளங்களின் அளவு ஏன் அதிகரிப்பதில்லை?**

வளங்களில் சில மீளும் வளங்களாகும். வளி, மழை, சூரியஒளி என்பன இவ்வகையின. சில மீளா வளங்களாகும். கனியங்கள், சில வகை விலங்குகள் என்பன இவ்வகையின. சனத்தொகை அதிகரிப்பிற்கிணங்க மேற்சொன்ன வளங்கள் அதிகரிப்பதில்லை. மீளா வளங்களின் அளவு பயன்கொள்ளும்போது குறைந்து வரும்.

5. **நாடொன்றின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மேற்கொள்ளும்போது அந்நாட்டின் சனத்தொகையை ஏன் கவனத்தில் கொள்ள வேண்டும்?**

வளங்களின் உச்ச அளவுப் பயன்பாட்டிற்குச் சனத்தொகையளவும் அவசியம். மனிதன் வளங்களை நுகர்வதோடு ஒரு


வளமாகவும் உள்ளான். உச்ச அளவிலான வளப்பயன்பாட்டிற்கு ஏற்ற அளவிலான சனத்தொகை அவசியமாகும்.

**6. பின்வரும் நாடுகளில் முதன்முதல் குடிசன மதிப்பீடு எந்த ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டன?**

*அமெரிக்கா, பெரிய பிரித்தானியா, இலங்கை.*

*அமெரிக்கா - 1790 பெரிய பிரித்தானியா - 1801 இலங்கை - 1871*

**7. இவ் வரைபடத்தை அவதானித்து விளக்கம் தருக.**




*உலகின் துரித சனத்தொகை வளர்ச்சியை இவ் வரைபடம் சுட்டிக் காட்டுகின்றது. 1850 வரை 1000 மில்லியனுக்குள் காணப்பட்ட சனத்தொகை 1900 ஆம் ஆண்டின் பின் துரிதமாகப் பெருகி 6 000 மில்லியனைத் தாண்டியுள்ளது.*

**8. சனத்தொகையின் துரித அதிகரிப்பினைச் சுருக்கமாக விபரிக்குக.**

*1650 இல் 545மில்லியன் ஆகவிருந்த உலக சனத்தொகை 1750 இல் 728 மில்லியன் ஆகவுயர 100 ஆண்டுகளாகியது. அதே சனத்தொகை 1850 இல் 1171 மில்லியன் ஆகவுயர இன்னுமொரு 100 ஆண்டுகள் எடுத்தது. இச்சனத்தொகை 1950 இல் 2501மில்லியன் ஆகவுயர இன்னுமொரு 100 ஆண்டுகள் எடுத்தது. ஆனால் இச்சனத்தொகை 25 வருடங்களில் (1950–1975) இரட்டிப்பாக உயர்ந்துவிட்டது. (4124 மில்லியன்) மேலும் ஒரு 15 ஆண்டுகளில் (1975–2000) இச் சனத்தொகை 6500 மில்லியனாக இன்று அதிகரித்துள்ளது.*

9. **உலகின் குறிப்பிட்ட சில பகுதிகளில் சனத்தொகை செறிவாக வாழ்வதற்குக் காரணிகள் யாவை?**

(அ) சாதகமான புவியியல் காரணிகள்

(ஆ) சமயம் போன்ற கலாசாரக் காரணிகள்

(இ) போக்குவரத்து போன்ற ஏனைய வசதிகள்

(ஈ) இயற்கை வளங்களின் பரம்பல்

(உ) அரசியற் காரணிகள்

10. **உலகில் சனத்தொகை மிக ஐதான வாழும் பிரதேசங்கள் எவை?**

(அ) அதிக வெப்பமான பாலை நிலங்கள்

(ஆ) அதிக குளிரான முனைவுப் பகுதிகள்

(இ) மிக உயரமான மலைப் பகுதிகள்

(ஈ) அதிக ஈரலிப்பான பகுதிகள்

11. **சனத்தொகை வளர்ச்சிவீதம் உலக நாடுகளில் எவ்வாறு உள்ளது?**

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் சனத்தொகை வளர்ச்சி வீதம் குறைவாகவும் (உதாரணம் : சுவீடன் 0.2, ஐக்கிய இராச்சியம் 0.1, யப்பான் 1.2, அமெரிக்கா 0.1, பெல்ஜியம் 0.1) அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் சனத்தொகை வளர்ச்சி வீதம் அதிகமாயும் (உதாரணம் : இலங்கை 1.4, பங்களாதேசம் 2.7, எதியோப்பியா 2.3, பாகிஸ்தான் 2.9, கேனியா 3.3) உள்ளது. சீனாவில் சனத்தொகை அதிகரிப்பினால் ஏற்படும் பிரச்சினைகள் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளிலேயே ஏற்பட்டுள்ளன.

12. **அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் சனத்தொகை அதிகரிப்பால் எதிர்கொள்ளும் உடனடிப் பிரச்சினைகள் எவை?**

(அ) அபிவிருத்திக்காகச் செலவிடவேண்டி நிதி, அதிகரித்து வரும் சனத்தொகையின் உணவு, உடை, உறையுள் போன்ற சமூக நலன்களின் வசதிகளுக்காக செலவிட நேரிடுகிறது.

(ஆ) அதிகரித்துவரும் சனத்தொகையினருக்கு உணவினை அதிகரிப்பதற்கான நிலமும் வரையறுக்கப்படுகிறது. சனத்தொகை அதிகரிப்பதுபோல நிலப்பரப்பு அதிகரிப்பதில்லை. தனிநபருக்கான நிலத்தினளவு இந் நாடுகளில் குறைந்து வருகிறது. (உதாரணம் : தலைக்குரிய நிலம் இலங்கை 0.16 ஹெக். இந்தியா 0.30 ஹெக் பங்களாதேசம் 0.14 ஹெக்).

**13. பின்வரும் அட்டவணையை அவதானித்து விளக்கந் தருக.**

| உலக நிலப் பயன்பாடு | |
|---|---|
| 1. விவசாயத்துக்குப் பயன்படும் நிலப்பகுதி | 20% |
| 2. பயிர் செய்யக்கூடியது ஆனால் புல் நிலமாகக் காணப்படுகிறது. | 10% |
| 3. வளமற்ற நிலம் | 10% |
| 4. பொருத்தமற்ற காலநிலை | 20% |
| 5. அதிக உயரமான மலைகள் | 20% |
| 6. பாலைவனப்பகுதி | 20% |
| மொத்தம் | 100% |

(அ) புவியின் மேற்பரப்பில் விவசாயத்திற்கு உகந்த நிலப்பகுதி 20 சதவீதமாகும். புல் நிலங்களாகக் காணப்படுகின்ற இன்னொரு 10 சதவீதத்தை பயிர்ச்செய்கைக்குட்படுத்த முடியும்.

(ஆ) ஏனைய 70 சதவீத நிலத்தில் ஒரு 10 சதவீதத்தை நவீன தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்திப் பயன்தரு நிலமாக்க முடியும் எனக் கருதப்படுகிறது.

**14. துரித சனத்தொகை வளர்ச்சியால் உலகு எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் எவை?**

(அ) உணவுப் பிரச்சினை

(ஆ) வதிவிடப் பிரச்சினை

(இ) தொழிற் பிரச்சினை

(ஈ) கல்வி, சுகாதாரம், வைத்தியம் சம்பந்தமான பிரச்சினைகள்

(உ) குடிநீர்ப் பிரச்சினை

(ஊ) சேரிப் பிரச்சினை

(எ) வலு தொடர்பாடல் வசதிப் பிரச்சினை

**15. சனத்தொகை வளர்சியினைத் தீர்மானிக்கும் காரணிகள் எவை? விளக்குக?**

(அ) பிறப்பு வீத அதிகரிப்பு

(ஆ) இறப்பு வீதம் குறைவு

(இ) இடப்பெயர்வுகள்

(அ) இறப்பினைவிட பிறப்பு அதிகமாகவிருந்தால் இயற்கை வளர்ச்சி அதிகமாக இருக்கும்.

(ஆ) பிறப்பினைவிட இறப்பு அதிகமாக இருந்தால் இயற்கை வளர்ச்சியில் வீழ்ச்சி காணப்படும்.

(இ) இடப்பெயர்வுகள் வெளியகலியாகவோ உள்வரவாகவோ இருக்கலாம். ஒரு நாட்டில் சனத்தொகை உள்வரவு அதிக மாயின் சனத்தொகை அதிகரிக்கும். வெளியகல்வு அதிக மாயின் சனத்தொகை குறையும்.

**16. இலங்கையின் சனத்தொகை தொடர்பான விபரங்களைச் சுருக்க மாகத் தருக?**

(அ) இலங்கையின் குடிக்கணிப்புகள் 1871ஆம் ஆண்டு தொடக்கம் 1981 வரை பத்தாண்டுகளுக்கு ஒரு தடவை நடத்தப் பட்டுள்ளது. 1981ஆம் ஆண்டின் பின் முழு அளவிலான குடிக்கணிப்பீடு பல்வேறு காரணங்களால் நடத்தப்பட வில்லை. அதன் பின்னர் குடிமதிப்பீடு புள்ளி விபரத்தினைக் களத்தால் மேற்கொள்ளப்பட்டது.

(ஆ) 1871இல் இலங்கையின் சனத்தொகை 2.9 மில்லியன்

பின்னர்


*1946 – 6.7* மில்லியன்
*1953 – 8.1* மில்லியன்
*1963 – 10.5* மில்லியன்
*1971 – 12.7* மில்லியன்
*1981 – 14.8* மில்லியன்
*1991 – 17.2* மில்லியன்
*1995 – 18.1* மில்லியன்
*1998 – 18.7* மில்லியன்

(இ) இலங்கையின் குடிசன அடர்த்தியை விபரிக்க.
இலங்கையின் முழுப்பரப்பளவு 65610 சதுர கி.மீ

1871 சதுர கி.மீ அடர்த்தி – 37
1981 சதுர கி.மீ அடர்த்தி – 227
2000 சதுர கி.மீ அடர்த்தி – 305

(ஈ) இலங்கையின் சனத்தொகை இரட்டிப்படைவதற்கு எடுத்த காலத்தைப் பின்வரும் அட்டவணைப் படம் காட்டுகிறது.

சனத்தொகை அளவு மில்லியன்களில்




| ஆண்டு | சனத்தொகை |
| --- | --- |
| *1871* | *2.4* |
| *1926* | *4.8* |
| *1959* | *9.6* |
| *1990* | *19.2* |

**(1) 1871இற்கும் 1926இற்கும் இடையில் இலங்கையின் சனத்தொகை இரட்டிப்பாவதற்கு எடுத்துக்கொண்ட காலம் எவ்வளவு?**

*55 ஆண்டுகள்*

**(2) 1959இற்கும் 1990இற்கும் இடையில் சனத்தொகை இரட்டிப்பாக எடுத்துக் கொண்ட காலம் எவ்வளவு?**

*31 ஆண்டுகள்*

**15. இலங்கையில் பெண்களுக்கான சமூக அந்தஸ்து எவ்வாறுள்ளது?**

(அ) ஆண்கள் பெண்களைவிட சமூக அந்தஸ்து உரிமைகள் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர்.

(ஆ) ஆண்களின் சமூக அந்தஸ்துக் கூடுதலாக இல்லாதிருக்கக் காரணங்கள் பல. அவை,

(1) திருமண முறைமை
(2) உடல் வலிமை
(3) உழைப்பாளியாக விளங்கள்
(4) தீர்மானங்கள் எடுத்தலில் ஆண்களுக்குள்ள உரிமை
(5) கல்வியறிவு கூடுதலாக இருத்தல்
(6) மரபுகள் சம்பிரதாயங்கள்

(இ) பெண்கள் அந்தஸ்து குறைந்த நிலையில் காணப்படுவதற்கான காரணங்கள்

- (1) திருமணம்
- (2) கல்விக் குறைவு
- (3) குழந்தைகளைப் பராமரித்தல்
- (4) போசனை மட்டம்
- (5) பாலியலுறவு
- (6) உடல் வலிமைக் குறைவு
- (7) மரபுகள், சம்பிரதாயங்கள்

(ஈ) குடும்பத்தில் அன்றாட நடவடிக்கைகளில் ஆண்களுக்குப் பொருளாதாரரீதியாக உதவுதல். குடும்பப் பிரச்சினைகளைக் கவனித்தல், பிள்ளைகளின் பிரச்சினைகளைக் கவனித்தலெனப் பாரிய பொறுப்புக்களை பெண்களே சுமக்கின்றனர்.

(உ) ஆண்களுடன் சரிசம நிலையில் காணப்படுபவர்கள் பெண்களாவர். அவர்களுக்குச் சகல உரிமைகளும் வழங்குதல் வேண்டும்.

**16. உலகில் பெண்களுக்குள்ள அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளதா?**

இல்லை

(அ) உலகில் வேலைசெய்யும் மக்களில் மூன்றில் ஒரு பங்கினர் பெண்கள்

(ஆ) உலகில் பல நாடுகளில் நீரைப்பெறப் பல மைல்கள் சென்று துன்புறுபவர்கள் பெண்கள்.

(இ) நமது நாடுகளில் சிறுமிகளே சிறுவர்களைவிட அதிகம் மந்த போசனையில் பாதிக்கப்படுகிறார்கள்.

(ஈ) உலகில் ஆண்கள் பெறும் ஊதியத்திலும் பெண்கள் பெறும் ஊதியம் 30–40 சதவீதத்தில் குறைவு.

(உ) உலகில் எழுத்தறிவின்மையில் 2 ஆண்களுக்கு 3 பெண்கள் காணப்படுகின்றனர்.

(ஊ) உலகில் 13 மில்லியன் ஏழைகளில் 70 சதவீதமானோர் பெண்களாவர்.

**17. பெண்களது நிலைகளை மேம்பாடு அடையச் செய்வதற்கு எடுக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் எவை?**

(1) ஐ.நா அமையத்தினால் உலக மகளிர் தினம் பிரகடனப் படுத்தப்பட்டது. 1976 – 1986 சர்வதேச மகளிர் தசாப்தமாக பிரகடனப்படுத்தப்பட்டது.

(2) சீனாவின் பீஜிங் நகரில் உலக மகளிர் ஐந்தாவது மகாநாடு கூட்டப்பட்டது. அதில் 2015 ஆண்டளவிற்குள் உலகில் மகளிர் போசாக்கு, மகளிர் அரசியல் உரிமை, மகளிர் வேலை வாய்ப்புகள், மகளிர் கல்வி என்பன சம அளவில் பேணப் படல் வேண்டுமென முடிவாகியது.

(3) அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் பெண்களது கல்வியினை உயர் நிலைக்குக் கொண்டு வருவதன் மூலம் சிசு மரணம், மந்தபோசனை நிலை போன்றவற்றினைக் குறைத்துக்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

## 3.2. உணவுப் பிரச்சினை

***18. உலகின் உணவுப் பிரச்சினைக்கான காரணிகள் எவை?***

(1) உலகில் உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருட்கள் ஒழுங்கான முறையில் பகிர்ந்தளிக்கப்படுவதில்லை. அபிவிருத்தியடைந்த நாடுகள் தாம் மேலதிகமாக உற்பத்தி செய்யும் உணவுப் பொருட்களைப் பகிர்ந்தளிக்க முன்வருவதில்லை.

(2) தாம் உற்பத்தி செய்யும் உணவுப் பொருட்களின் விலைகளை நிலையாக வைத்திருப்பதற்காக அவை பல வழிகளைக் கையாளுகின்றன.

(அ) மேலதிக உணவுப் பொருட்களை அழித்தல்

(ஆ) விளைவிக்கப்படும் நிலங்களின் பரப்பைக் கட்டுப்படுத்தல்

(இ) அதனால் நட்டமடையும் விவசாயங்களுக்கு மானியமளித்தல்

(3) உணவுப் பழக்கமும், உணவு ஒதுக்கமும் உணவுப் பற்றாக் குறைக்குக் காரணங்களாகும். அபிவிருத்தியடைந்த நாடுகளில் இறைச்சி போன்றன அதிகம் நுகரப்படுகின்றன. இந்தியாவில் மாட்டிறைச்சி, இஸ்லாமிய நாடுகளில் பன்றி இறைச்சி என்பன உணவு ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளன.

***19. உணவுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழிமுறைகள் எவை?***

(1) உலகில் விவசாயம் செய்யும் நிலப்பரப்பினை அதிகரித்தல்.

(2) விவசாயம் செய்யும் நிலப்பரப்பில் உச்சப் பயனைப் பெற்றுக் கொள்ளுதல்.

(3) அவசியமான நீரைப் பெற்றுக்கொள்ள நீர்ப்பாசனத் திட்டங்களை அமைத்தல்.

(4) கடல் நீரின் உவர்த்தன்மையை நீக்கி விவசாயத்திற்குப் பயன்படுத்தல்.

(5) விஞ்ஞான, தொழில்நுட்பத் திறன்களைக் கூடுதலாகப் பயன்படுத்தல்.

(6) அதிகளவில் விளைச்சலைத் தரக்கூடிய விதையினங்களைப் பயன்படுத்தல்.

## 3.3. சக்தி மூலவளங்கள்

**20. சக்தி மூலவளங்கள் குறித்துச் சிறு விளக்கம் தருக?**

(1) சக்தி மூலவளங்கள் இரு வகைகளில் பெறப்படுகின்றன.
(அ) உயிரியற் சக்தி
(ஆ) உயிரியலற்ற சக்தி

(2) உயிரியற் சக்தியானது மனிதன், விலங்கு என்பவற்றின் வலுவாகும். உயிரியலற்ற சக்தி என்பன உயிர்ச் சுவடுகளிலிருந்து பெறப்படுவன. அவை நிலக்கரி, பெற்றோலியம் (மசகு எண்ணெய்), இயற்கை வாயு. உயிரியலற்ற சக்தி உயிர்ச்சுவடாக்கப்படாதவற்றிலிருந்தும் பெறப்படும். அவை: நீர், வளி, சூரியசக்தி, அணுசக்தி.

(3) மசகுஎண்ணெய்க்குப் பதிலாக மாற்றுச் சக்திகளுள்ளன. அணுசக்தி, இயற்கை வாயு, உயிர் வாயு, கடலலை, வளி என்பன மூலம் பெறப்படும் சக்திகளானவையாகும்.

(4) சக்திவளப் பாதுகாப்பு மிக அவசியமாகும். அளவோடு சக்தி மூலவளங்களை நாம் பயன்படுத்த வேண்டும். விறகுப் பயன்பாடு, மிகவும் பயனுள்ள அடுப்பு உபயோகம், விறகுக்குப் பதிலாக மரத்தூள், உமி என்பவற்றின் பயன்பாடு, சூரிய சக்தியை உபயோகித்தல், தேவையற்ற நேரங்களில் மின்சார விளக்குகளை அணைத்து வைத்தல், பொதுப் போக்குவரத்துச் சாதனங்களைப் பயன்படுத்தல் என்பன மூலம் சக்தி வளப் பாதுகாப்புப் பேணப்படலாம்.

## 3.4. சூழல் மாசடைதல்

21. (அ) சூழல் என்பதற்கு விளக்கம் தருக?

மக்களின் சுற்றாடல் சூழலாகும். அது இயற்கைக் சூழல், கலாசாரச் சூழல் என இருவகைப்படும். நிலம், நீர், மண், விலங்கு, தாவரம், வளிமண்டலம் என்பன இயற்கைச் சூழலாகும். கட்டிடங்கள், பயிர்கள், தொழிற்சாலைகள், சமயகலை நிர்மாணங்கள் கலாசாரச் சூழல் ஆகும்.

(ஆ) சூழற்சமநிலை எவ்வாறு பாதிப்படைகிறது?

மனிதனின் செயற்பாடுகளினால் பாதிப்படைகிறது. காடு அழிப்பு, சுண்ணாம்புக்கல் அகழ்தல், நீர்நிலைகளிலிருந்து மணல் அகழ்தல், மாடிக் கட்டிடங்கள் அமைத்து நகர மயமாக்கல், இரத்தினக்கல் அகழ்தல், ஓடு செங்கல் செய் வதற்காக நிலத்தை அகழ்ந்து மண் எடுத்தல், நீரினை தூய்மை கெடவைத்தல், வளியை மாசடையச் செய்தல் என்பவற் றினால் சூழல் சமநிலை பாதிப்படைகிறது.

22. (அ) சூழல் மாசடைதலை எவ்வகைகளில் அவதானிக்கலாம்?

வளி மாசடைதல், நிலம் மாசடைதல், நீர் மாசடைதல்

(ஆ) உலகில் சூழல் எவ் வழிகளில் மாசடைகிறது?

(அ) வாகனங்களும் தொழிற்சாலைகளும் வெளியிடும் நச்சுவாயுக்கள்.

(ஆ) தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் இரசாயனக் கழிவுகள்.

(இ) கிருமிநாசினிகள்.

(ஈ) குப்பைகூழங்கள்.

(உ) இத்துப்போகாத பிளாஸ்ரிக் போன்ற பொருட்கள்.

(ஊ) அழிவை உண்டாக்கும் அணுப்பொருட்கள்.

23. (1) நிலம் எவ்வாறு மாசடைகிறது?

(அ) விவசாய நடவடிக்கைகளுக்காக அதிகமான இரசாய னப் பொருட்களைப் பாவிப்பதனால்

(ஆ) மண்ணரிப்பினால்

(இ) தொழிற்சாலைக் கழிவுகள் சேர்வதனால்

(ஈ) இத்துப் போகாத பொலித்தீன் போன்ற பொருட்கள் சேர்வதனால்

**(2) மண்ணினை எவ்வாறு பாதுகாக்கலாம்?**

(அ) கல் அரன்களைக் கட்டி, மண்ணரிப்பைத் தடுத்தல்

(ஆ) தாவரங்களை நாட்டுதல்.

(இ) சீரான, பாதுகாப்பான வடிகால் முறையைப் பேணுதல்.

(ஈ) இயற்கையான பசளைகளைப் பயன்படுத்தல்

(உ) கிருமிநாசினிகளுக்குப் பதிலாக இயற்கையான நாசினிகளை பயன்படுத்தல். (வேப்பங்கரைசல், சாணம், சாம்பல்)

**(3) வளி எவ்வாறு மாசடைகிறது?**

மனிதர்களின் செயற்பாடுகளினால் வளி மாசடைகின்றது. நிலக்கரி, இயற்கை வாயு, எரிபொருட்கள் ஆகியவற்றை எரிப்பதனாலும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் வாயுக்களினாலும் வளி மாசடைகின்றது. மோட்டார் வண்டிகள், விமானங்கள், குளிரூட்டிகள் (CFC) என்பவற்றில் இருந்து வெளியேறும் நச்சு வாயுக்களினாலும் வளி மாசடைகின்றது.

**(4)** (i) **நீர் மாசடைதலென்றால் யாது?**

நீரை உபயோகிக்க முடியாத நிலை, நீரின் இயற்கைத் தன்மை மாறுபடல், நீரில் வேறு பொருட்கள் சேர்தல்

(ii) **நீர் மாசடைதலிற்குக் காரணங்கள் எவை?**

(அ) கழிவுப் பொருட்கள் நீருடன் சேர்தல் (வீட்டு விலங்கு, தொழிற்சாலைக் கழிவுகள்)

(ஆ) நோய்க்கிருமிகள் நீரில் வாழ்தல்

(இ) நச்சுத்தன்மை வாய்ந்த உலோகங்கள் சேர்தல்

(ஈ) கிருமிநாசினிகள் நீருடன் ஒன்றுசேர்தல்

(உ) செயற்கை அசேதனப் பொருட்கள் சேர்தல்

**24. குடும்ப வாழ்க்கை நலனுக்கான கல்வித் திட்டங்கள் எவை?**

(அ) குடும்ப வாழ்க்கைக் கல்வித் திட்டம்

(ஆ) தாய்சேய் போசாக்குத் திட்டம்

(இ) எயிட்ஸ் நோய்த் தடுப்புத்திட்டம்

(ஈ) சனத்தொகையும் குடும்ப வாழ்க்கைத் திட்டமும்

(உ) மக்கள் சுகாதாரக் கல்வி நிகழ்ச்சித்திட்டம்

(ஊ) சனத்தொகையும் இனப்பெருக்கச் சுகாதாரமும்

**25. (1) தென்ஆசிய வலயத்தில் இன்று பொதுவாகக் காணப்படும் பிரச்சினை யாது?**

பயங்கரவாதம்

**(2) பயங்கரவாதத்தின் காரணமாக யாது ஏற்படுகின்றன?**

அகதிகள், அநாதைகள் அதிகரிக்கின்றனர்.
நாடு சீரழிகின்றது. வறுமை நிலை வாட்டுகின்றது.

**26. (1) அகதிகள் தோன்றுவதற்கான காரணிகள் எவை?**

(அ) அரசியல் நெருக்கடி

(ஆ) நாட்டின் எல்லைப்போர்

(இ) பயங்கரவாத நடவடிக்கைகள்

(ஈ) குலபேதங்கள்

(உ) சமய நெருக்கடி

(ஊ) இனவாதப் பிரச்சினைகள்

**(2) அகதிகள் வருகையால் ஒரு நாடு எதிர்நோக்கும் பிரச்சினைகள் எவை?**

(அ) அகதிமுகாம்கள் தோன்றல்.

(ஆ) தீவிரமாக அதிகரிக்கும் சனத்தொகை தொடர்பான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தல்.

(இ) அதிக சனத்தொகை நெருக்கடி ஏற்படுல்.

(ஈ) இடம் தொடர்பான பிரச்சினைகள்.

(உ) தேசிய கலாசாரம், சமயநிலை என்பவற்றில் தாக்க மேற்படல்.

(ஊ) பொருளாதார ரீதியாக ஏற்படும் தாக்கங்கள்.


(எ) நாட்டின் ஸ்திரத்தன்மை பாதிப்படைதல்.

(ஏ) அடிப்படை வசதிகளை வழங்குவதில் ஏற்படும்......... பிரயோகம்.

# உலகில் ஏற்பட்டுவரும் பிரச்சினைகள் வினாவிடைகள்

## பகுதி - I

*1.* **பின்வரும் வரைபடத்தை அவதானித்து பின்வரும் கூற்றுகளில் எது சரியானது?**





(i) வளங்கள் குறைந்து செல்லும்போது உணவு உற்பத்தியும் குறைந்து செல்லும்.

(ii) சனத்தொகை அதிகரிக்கும்போது வளங்கள் தேய்மானமடைகின்றன.

(iii) சனத்தொகை அதிகரிப்பிற்கு இணங்க உணவு உற்பத்தியும் அதிகரிக்கின்றது.

(iv) வளங்கள் தம்மளவில் குறைவதற்கும் சனத்தொகை அதிகரிப்பதற்குமிடையில் ஒருவித சம்பந்தமுமில்லை.

- ***1981, 2001* சனத்தொகை தரவுகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட இலங்கையின் சனத்தொகைக் கூம்பகங்கள் இரண்டு கீழே காட்டப்பட்டுள்ளன. இதனை அவதானித்து 37 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**




2. *1981இன் சனத்தொகை கூம்பகத்திற்கு ஏற்ப முறையே ஆகக்கூடிய ஆகக் குறைந்த சனத்தொகை சதவீதம் எந்த வயதுத் தொகுதியினருக்கிடையே காணப்படுகிறது?*
   - *(1) வயது 0 – 04 உம் 70 – 74 உம்*
   - *(2) வயது 05 – 09 உம் 75 இற்கு மேலும்*
   - *(3) வயது 10 – 14 உம் 65 – 69 உம்*
   - *(4) வயது 15 – 19 உம் 60 – 64 உம்*

3. A – **ஆண்டு 0 – 14 இடையிலான வயதுக் குழுவின் சனத்தொகை சதவீதம் குறைவடைதலைக் காணக்கூடியதாயுள்ளது.**

   B – **வயது 75 ஆண்டுகளுக்கு மேற்பட்ட சனத்தொகை சதவீதத்தில் வளர்ச்சி காணப்படுகிறது. மாற்றம் காணப்படவில்லை.**

   C – **வயது 35 – 49 ஆண்டு வயதுக் குழுக்களின் சனத்தொகையில் மாற்றம் காணப்படவில்லை.**

   D – **வயது 35–49 ஆண்டு வயதுக் குழுக்களின் சனத்தொகையில் மாற்றம் காணப்படவில்லை.**

   **மேற்குறிப்பிட்ட A, B, C, D என்ற விடயங்களில் 1981 ஆம் ஆண்டுச் சனத்தொகை கூம்பகத்தைவிட 2001ஆம் ஆண்டுச் சனத்தொகைக் கூம்பகத்தில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க இரண்டு வேறுபாடுகள் காணப்படும் விடை எது?**

   *(1)* A, B   *(2)* B, C   *(3)* C, D   *(4)* D, A

4. A – **ஆயுள் எதிர்பார்ப்பு அதிகரித்தல்**

   B – **பிறப்பு வீதம் அதிகரித்தல்**

   C – **ஆண் பெண் விகிதம் மாறுபடுதல்**

   D – **பிறப்பு வீதம் குறைவடைதல்**

   E – **சிசுமரண வீதம் அதிகரித்தல்**

மேற்குறிப்பிட்ட A, B, C, D, E என்ற விடயங்களில் 2001 சனத் தொகை அமைப்பில் வேறுபாடுகள் ஏற்பட அதிக செல்வாக்குச் செலுத்திய காரணிகளாகக் கருதத்தக்கவை,

1) A உம் B உம் 2) C உம் D உம்
3) A உம் D உம் 4) C உம் E உம்

5. **2001 கூம்பகத்தில் காணப்படும் சனத்தொகை மாறுபடும் போக்கு மேலும் விருத்தியடைந்தால் எதிர்காலத்தில்**

1) வயது முதிந்தோரின் நலன் பேணுவதற்கு அரசாங்கம் அதிக பணம் செலவழிக்க வேண்டி நேரிடும்.
2) தங்கியிருப்போரின் தொகையில் பெருமளவு அதிகரிப்பு ஏற்படும்.
3) ஆரம்பப் பாடசாலைக் கல்வியில் நுழையும் மாணவர் தொகை விரைவில் அதிகரிக்கும்.
4) மொத்த சனத்தொகையில் பெண்களின் எண்ணிக்கை ஆண் களின் எண்ணிக்கையைவிடப் பெருமளவில் அதிகரிக்கும்.

6. **உலக உணவுப்பிரச்சினை உக்கிரமடைவதற்கான காரணம் யாது?**

1) தானியங்களை உற்பத்தி செய்யும் நாடுகள் தமது மேலதிகத் தானியங்களைச் சந்தைக்கு அனுப்புவதை வரையறை செய்தல்.
2) தானியங்களை உற்பத்தி செய்யும் நாடுகள் மேலதிக உற்பத்திக்கு இடங்கொடுக்காமல் பயிர்ச்செய்கையை வரையறை செய்தல்
3) உலகில் உற்பத்தி செய்யப்படும் உணவு நாடுகளுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படும்போது ஏற்படும் ஒழுங்கீனங்களும் விரயமும்.
4) அபிவிருத்தியடைந்து நாடுகள் உற்பத்தி செய்யும் தானியங் களில் பெருமளவு விலங்கு உணவாகப் பயன்படுத்தப் படுதல்.

7. **எதிர்காலத்தில் உலகம் எதிர்நோக்க வேண்டிய நீர் தொடர்பான பிரச்சினைகளிடையே மனிதர்களுக்கு மிகவும் தாக்கம் ஏற்படுத்தக் கூடிய பிரச்சினை**

1) கடல் நீர் வளங்கள் அழிந்து போவதற்குக் காரணமாகும் முறையில் சமுத்திர நீர் தூய்மை கெடுதல்.
2) காடுகள் அழிவதனால் மழைவீழ்ச்சி குறைவடைந்து விவசாய நடவடிக்கைகளுக்கான நீர் போதிய அளவில்லா தொழிதல்.

3) கவனயீனமாகப் பயன்படுத்துவதாலும் அவதானமின்மை யாலும் ஏற்படும் குடிநீர்ப் பற்றாக்குறை .
4) தொழிற்சாலைகள் வெளியேற்றும் கழிவுகள் சேர்வதின் காரணமாக ஆற்றுநீர் மாசடைதல்.

**8. உலக சனத்தொகை வளர்ச்சிபற்றி மிகுந்த கவனம் செலுத்த வேண்டியிருப்பது பின்வருவனவற்றில் எக்காரணத்தினாலாகும்?**

1) அதிகரித்துவரும் சனத்தொகைக்குச் சார்பளவில் வளங்கள் அதிகரிக்காமை.
2) அதிகரித்துவரும் சனத்தொகைக்குப் பொருத்தமான வாழிடம் வரையறுக்கப்பட்டிருத்தல்.
3) வளங்களின் பரம்பல் சமனற்றுக் காணப்படுதல்.
4) அதிகரித்துவரும் சனத்தொகை காரணமாகச் சூழல் உக்கிரமாக மாசடைதல்.

**9. ஒரு நாட்டின் சனத்தொகை இரட்டிப்படைவதற்கான காலம் அதிகரித்துச் செல்கின்றது என்பதன் கருத்து?**

1) சனத்தொகையின் இயற்கை அதிகரிப்பு வீதம் குறைந்து காணப் படல்.
2) சனத்தொகையின் இயற்கை அதிகரிப்பு வீதம் நிலையான தாக உள்ளது.
3) இறப்பு வீதம் உயர் மட்டத்தில் காணப்படுகின்றது.
4) பெண்களின் கருவள வயது குறைந்து செல்கின்றது.

**10. கழிவுகள் அகற்றுதல் தொடர்பாக தற்போது எழுந்துள்ள பிரச்சினையை இழிவளவாக்குவதற்குப் பின்பற்றக்கூடிய மிகப் பொருத்தமான செயன்முறை பின்வருவனவற்றுள் எது?**

1) வீட்டு வளவினுள்ளேயே புதைத்தல்.
2) உள்ளூராட்சி நிறுவனங்கள்மூலம் எடுத்துச்சென்று அழித்தல்.
3) மீள் சுழற்சிச் செய்முறையைப் பயன்படுத்தல்.
4) தாழ்நிலங்களை நிரப்பப் பயன்படுத்தல்.

**11. உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்குப் பின்பற்றக்கூடிய பரவலான பயிர்ச்செய்கை முறையை நடைமுறைப்படுத்துவதற்கு முக்கிய தடையாக அமைவது**

1) அதிக செலவைக் கொண்டிருத்தல்.
2) உரிய தொழில்னுட்பவியல் முறை பற்றிய அறிவு போதிய அளவிலில்லை.

3) அறுவடை குறைந்த மட்டத்திலிருத்தல்.
4) பயிர்ச் செய்கைக்கு உகந்த நிலம் வரையறுக்கப்பட்டிருத்தல்.

- **கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையிலுள்ள தரவுகளின் உதவியுடன் 12 தொடக்கம் 16 வரையான வினாக்களுக்கு விடை தருக.**

| நாடு | சனத் தொகை | பிறப்பு வீதம் | இறப்பு வீதம் | சிசு மரணம் | எழுத் தறிவு | குடி அடர்த்தி (1ச.கி.மீ) |
|---|---|---|---|---|---|---|
| A | 18.6 | 19 | 6 | 16 | 92 | 296 |
| B | 46.0 | 16 | 6 | 10 | 98 | 466 |
| C | 73.5 | 29 | 8 | 16 | 95 | 246 |
| D | 57.7 | 26 | 4 | 10 | 84 | 66 |
| E | 3.1 | 15 | 5 | 4 | 91 | 5167 |
| F | 955.1 | 27 | 9 | 75 | 52 | 321 |

**12. காட்டப்பட்டுள்ள நாடுகளில் குறுகியகாலத்திற்குள் சனத்தொகை இரு மடங்காவதற்கான வாய்ப்புள்ள நாடு எது?**

1) D 2) E 3) F 4) C

**13. காட்டப்பட்டுள்ள நாடுகளுள் இலங்கையையும் இந்தியாவையும் ஒழுங்குவரிசைப்படி குறிப்பவை?**

1) A உம் B உம்
2) C உம் D உம்
3) A உம் F உம்
4) E உம் F உம்

**14. சிங்கப்பூர் எந்த நாடாக இருக்கும்?**

1) E 2) B 3) C 4) D

**15. சனத்தொகை அடர்த்தி மிகக் குறைந்த நாடு எது?**

1) A 2) C 3) D 4) E

**16. சுகாதார, மருத்துவ வசதி குன்றிய நாடு எது?**

1) A 2) B 3) D 4) C

17. இலங்கையின் சனத்தொகை இரட்டிப்பதற்கான காலம் அதிகரித்துச் செல்கின்றது என்பதன் கருத்து?


1) சனத்தொகையின் இயற்கை அதிகரிப்பு வீதம் குறைந்து காணப்படல்.
2) பெண்களின் கருவள வயது குறைந்து செல்கின்றது.
3) இறப்பு வீதம் உயர்மட்டத்தில் காணப்படுகிறது.
4) சனத்தொகையின் இயற்கை அதிகரிப்பு வீதம் நிலையானதாக உள்ளது.

18. கரையோரச் சூழல் தொகுதியினைப் பாதுகாப்பதனால் நன்மை பெறும் தொகுதி :

1) கரையோரப் பகுதியில் வாழும் மக்கள்.
2) சூழல் சட்டங்களை அமுல் நடத்தும் உத்தியோகத்தர்.
3) இலங்கை மக்கள் அனைவரும்.
4) கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம்.

19. பின்வருவனவற்றில் சூழலை மாசடையச் செய்யாத சக்திப்பொருட் தொகுதி யாது?

1) சூரிய சக்தியும் நீர்மின்பரம்பலும்
2) நீர்மின்சாரமும் கனிய எண்ணெயும்
3) அணுசக்தியும் இயற்கை வாயுவும்
4) நிலக்கரியும் கனிய எண்ணெயும்



**20.** அதிக செறிவாக மக்கள் வாழும் நான்கு பிரதேசங்களும் அதே போல ஐதாக மக்கள் வாழும் மூன்றிடங்களும் காட்டப் பட்டுள்ளன. அதிக செறிவாக மக்கள் வாழும் சீனாவும், மிக ஐதாக மக்கள் வாழும் சூடானும் எப்பிரதேசங்களில் அமைந்துள்ளன?

*1)* A உம் G உம்     *2)* D உம் C உம்

*3)* B உம் E உம்     *4)* C உம் F உம்

## பகுதி - II

*1.* (i) பொருளாதார நடவடிக்கைக்காக நீரினைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.

(ii) (A) நீண்ட காலத்திற்கு நீர்ப்பற்றாக்குறையை எதிர் நோக்குதல்.

(B) நிலத்தின் அடியில் உள்ள நீரைப் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தல்.

(C) வெள்ளப்பெருக்குக்கு உள்ளாகுதல்.

(D) குளத்து நீர்ப்பாசனத்துக்கு முக்கியத்துவம் அளித்தல்

என்ற விடயங்களில் முக்கியம் பெறும் ஒவ்வொரு மாவட்டத்தைக் கீழே தரப்பட்டுள்ள மாவட்டங் களிலிருந்து தெரிவுசெய்து ஒழுங்கு வரிசைப்படி எழுதுக.

(நுவரெலியா, களுத்துறை, கண்டி, அம்பாந் தோட்டை, யாழ்ப்பாணம், கேகாலை, கம்பஹா, பொலநறுவை.)

(iii) ''இலங்கையில் குடிநீரைப் பெற்றுக்கொள்ளுதலில் எதிர்வருங்காலத்தில் மிகவும் கஷ்டங்கள் ஏற்படக் கூடும்.'' இதில் செல்வாக்குச் செலுத்தும் இரண்டு விடயங்களைச் சுருக்கமாக விவரிக்க.

(iv) இலங்கையில் நீர்ப்பற்றாக்குறை தீவிரமாக இருக் கின்ற பிரதேசங்களில் அந்நிலையை நீக்குவதற்கு எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகள் இரண்டினை விளக்குக.

**2.** சேற்றுநிலமீட்சி / தொழிற்சாலையிலிருந்து கழிவுகளை வெளி யேற்றுதல் / இரசாயனப் பசளைகளை அதிகளவில் பயன் படுத்தல் / அதிவேக விமானங்களின் பயணம் / ஆறுகளில் மண்ணை அகழ்தல் / புகையிரதப் போக்குவரத்து.

(i) மேற்குறிப்பிட்ட விடயங்களில்

(A) நீர் மாசடைதல்

(B) மண் மாசடைதல்

(C) ஒலி மாசடைதல் என்பவை தொடர்பாக மிகவும் செல்வாக்குச் செலுத்தும் ஒவ்வொரு காரணியை ஒழுங்கு வரிசைப்படி குறிப்பிடுக.

(ii) வளி மாசடைதல் நிகழும் முறைகள் இரண்டினையும் இதனால் ஏற்படும் தீமைகள் இரண்டினையும் குறிப்பிடுக.

(iii) ஆறுகளிலிருந்து வரையறையின்றி மண்ணை அகழ்தல், சுற்றாடல் பிரச்சினைகளை ஏற்படுத்தும் முறையினை இரண்டு விடயங்கள் மூலம் விளக்குக.

(iv) கழித்தொதுக்கும் பொலித்தீனினால் ஏற்படும் சுற்றாடல் பாதிப்புக்களை நீக்குவதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் இரண்டினை விளக்குக.

3. (i) உலக சனத்தொகையின் சமனற்ற பரம்பலில் செல்வாக்குச் செலுத்தும் காரணங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

(ii) சனத்தொகைத் தரவுகளின்படி உலகில் உள்ள பெண்களினதும் ஆண்களினதும் எண்ணிக்கை பெருமளவில் சமமாக இருக்கின்றபோதும் பெரும்பாலான சமூகங்களில் பெண்களுக்கு கிடைக்கும் அந்தஸ்தானது ஆண்களின் அந்தஸ்தை விடக் குறைவானதாகும். இரண்டு உதாரணங்கள் மூலம் இதை விளக்குக.

(iii) ''தென்னாசிய நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கைப் பெண்களின் அந்தஸ்து மிகப் பழைய காலத்தில் இருந்ததை விட திருப்திகரமானதாயுள்ளது'' எனக் கூறப்படுகிறது. இதனை மூன்று விடயங்கள் மூலம் நிறுவுக.

4. உலகின் பெரும்பாலான நாடுகளில் ''அகதிகளாக வருபவர்கள்'' தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்லுதல் தீர்வுகாண முடியாதளவு பாரதூரமான பிரச்சினையாக மாறியுள்ளது.

எகிப்து , சோமாலியா, பங்களாதேஷ், ருவெண்டா, சுவீடன், பொஸ்னியா

(i) மேலே தரப்பட்டுள்ள நாடுகளிடையே பெருமளவில் அகதிகள் காரணமாகப் பிரச்சினைகளை எதிர்நோக்கும் நாடுகள் மூன்றின் பெயர் குறிப்பிடுக?

(ii) அகதிகள் உருவாகுவதற்கு ஏதுவான நான்கு விடயங்களைக் குறிப்பிடுக?

(iii) அகதிகள் வருகையினால் ஒரு நாடு எதிர்நோக்க வேண்டிய பிரச்சினைகள் இரண்டினை உதாரணங்களுடன் விபரிக்க?

(iv) உலகில் அகதிகள் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண ஐக்கிய நாடுகள் சபையினால் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் இரண்டினைக் குறிப்பிட்டு இவற்றினால் ஏற்பட்ட சேவையை விளக்குக?

5. (i) உலகில் ஏற்பட்டு வரும் பல்வேறு பிரச்சினைகளுக்கும் அடிப்படையாக அமைவது சனத்தொகைப் பிரச்சினையாகும். சனத்தொகைப்பிரச்சினை காரணமாகத் தோன்றக் கூடிய முக்கிய பிரச்சினைகள் மூன்றைக் குறிப்பிடுக?

(ii) உலக பெற்றோலிய விலை அதிகரிப்பு அண்மைக் காலமாக உலக நாடுகள் எதிர்நோக்கி வருகின்ற முக்கிய பிரச்சினை யாகும். பெற்றோலிய விலை அதிகரிப்பினால் உலக நாடுகள் எதிர்நோக்குகின்ற அடிப்படைப் பிரச்சினைகள் நான்கினைக் குறிப்பிடுக?

(iii) உலக உணவுப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வாக அமைவது உணவுற்பத்தி மட்டத்தை அதிகரிப்பதும் போசாக்கு மட்டத்தை அதிகரிப்பதுமாகும். அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்குத் தடையாக அமையும் இரு காரணிகளைச் சுருக்கமாக விளக்குக?

6. (i) ஒரு நாட்டின் சனத்தொகையில் மாற்றம் ஏற்படுவதைத் தீர்மானிக்கும் காரணிகள் மூன்றினைப் பெயர் குறிப்பிடுக?

(ii) விரைவான சனத்தொகைப் பெருக்கமானது எவ்வாறு சூழல் மாசுறுதலுக்கு வழி ஏற்படுத்துகின்றது என்பதை இரு உதாரணங்களுடன் விளக்குக.

(iii) வருங்கால சந்ததியினர் வீதிகளிலும், வேலைத்தளங்களிலும் இப்போது இருப்பவரைவிட அதிக எண்ணிக்கையாளர்களுடன் வாழவேண்டி நேரிடும் எனக் கூறப்படுகிறது. இத்தகைய சந்தர்ப்பங்களுக்கு வெற்றிகரமாக

(ii) முகம் கொடுப் பதில் நீங்கள் வளர்த்துக்கொள்ள வேண்டிய இரு பண்புகளை விளக்குக?

7. உலக உணவு உற்பத்தி தொடர்பான விடயங்கள் பல கீழே தரப் பட்டுள்ளன.

விவசாயக்காணி துண்டாடப்படல் - இயற்கை அனர்த்தங்கள்
பாதுகாப்பான வர்த்தகக் கொள்கைகள்
உணவு களஞ்சியப்படுத்தலிலுள்ள குறைபாடுகள்.
குறைந்த அறுவடைகள்
பாரியளவு இயந்திரப் பாவனை

(i) மேற்காட்டப்பட்டுள்ள விடயங்களில் வளர்முக நாடுகளுக்கு மட்டும் பொருத்தமான பொதுவான விடயங்கள் மூன்றினைத் தெரிந்து எழுதுக.

(ii) உணவு உற்பத்தியைப் பாதிக்கின்ற இயற்கை அனர்த்தங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

(iii) உணவுற்பத்தியைப் பெருக்குவதற்கு பயன்படுத்தப்படும் நவீன தொழில்நுட்பமானது சுற்றாடல் சீரழிந்திட வழியமைக்கிற முறையை இரண்டு உதாரணங்களைக் காட்டி விளக்குக.

(iv) முழுமையாக நோக்குமிடத்து உலக தானிய உற்பத்தியானது ஆண்டுதோறும் அதிகரிக்கின்றதெனக் கூறப்படுகிறது. அப்படி இருந்தபோதிலும் உலகிலே உணவுப் பிரச்சினை உண்டாகியிருப்பது ஏன் என்பதற்கு இரண்டு உதாரணங்கள் தந்து விளக்குக.

8. (i) கீழே தரப்பட்டுள்ள நாடுகளுள் தானியமிகை காணப்படும் நாடுகளை தெரிவுசெய்து எழுதுக?
ஐக்கிய அமெரிக்கா, யப்பான், கனடா, நைஜீரியா, அவுஸ்திரேலியா, லிபியா, ஆசெந்தீனா

(ii) உணவுப் பயிர் உற்பத்திக்குப் பயன்டுத்தப்படும் நிலத்தின் அளவை, ஒவ்வொரு ஆண்டும் அதிகரிப்பதற்குத் தடையாக இருக்கும் இரண்டு காரணிகளைச் சுருக்கமாக விபரிக்கவும்.

(iii) அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் தொடர்ந்தும் இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்களில் தங்கியிருப்பது விவேகமல்ல என்பதை இரண்டு காரணிகளின் உதவியுடன் விபரிக்கவும்?

# விடைகள்

## பகுதி I

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| *1)* | *2* | *2)* | *1* | *3)* | *1* | *4)* | *3* |
| *5)* | *1* | *6)* | *3* | *7)* | *3* | *8)* | *1* |
| *9)* | *1* | *10)* | *2* | *11)* | *4* | *12)* | *4* |
| *13)* | *3* | *14)* | *1* | *15)* | *3* | *16)* | *4* |
| *17)* | *1* | *18)* | *3* | *19)* | *1* | *20)* | *2* |

## பகுதி II

*1.* (i) *(அ)* நீர்ப்பாசனம்

*(ஆ)* கைத்தொழில்

*(இ)* நீர்மின் உற்பத்தி

(ii) A - அம்பாந்தோட்டை

B - யாழ்பாணம்

C - களுத்துறை

D - பொலநறுவை

(iii) எதிர்காலத்தில் இலங்கையில் குடிநீர்த் தட்டுப்பாடு பின்வரும் காரணங்களால் உருவாகும்.

*(அ)* **நீரினளவு குறைதல்** – பல்வேறு தேவைகளுக்காகக் காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன. இதனால் மழைவீழ்ச்சியின்றி நீரினளவு குறைகிறது.

*(ஆ)* **நீரின் தரம் மாசடைதல்** – இரசாயன உரங்கள், கிருமி நாசினிகள், தொழிற்சாலைக் கழிவுகள், மனித மலக்குழிக் கழிவுகள் என்பன நீருடன் கலந்து நீரினை மாசுற வைக்கின்றன.

(iv) *(அ)* மழை நீரைச் சேகரித்து வைத்தல். இயற்கையான குளங்களிலும், வீடுகளில் தொட்டிகளை நிறுவியும் சேகரிக்கலாம்.

*(ஆ)* ஏனைய பகுதிகளிலிருந்து நீரைத் திசைதிருப்புதல், உவர்நீரை நன்னீராக்கல் முதலான நடவடிக்கைகள் மூலம் தீர்க்கலாம்.

2. (i) A நீர் மாசடைதல் – தொழிற்சாலைகளிலிருந்து கழிவுகளை வெளியேற்றுதல்.

B மண் மாசடைதல் – இரசாயனப் பசளைகளை அதிக அளவில் பயன்படுத்துதல்.

C ஒலி மாசடைதல் – அதிவேக விமானங்களின் பயணம்.

(ii) **வளி மாசடையும் முறைகள்**

(அ) தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் நச்சு வாயுக்கள் வளியில் கலத்தல்.

(ஆ) காட்டுத்தீ, அணுசக்திக் கசிவுகளின் வெளியேற்றம் என்பனவும் வளியை மாசடைய வைக்கின்றது.

**வளி மாசடைவதால் ஏற்படும் தீமைகள்**

(அ) அமில மழை பொழிதல்.

(ஆ) கோளம் வெப்பமடைதல்/ஓசோன் படை பாதிப்படைதல்.

(iii) (அ) ஆறுகளில் மண் அகழ்தல் மூலம் பக்க அரிப்பு ஏற்பட்டு, அயலிலுள்ள வயல் நிலங்கள் அரிதலிற்குள்ளாகின்றன.

(ஆ) ஆறுகள் ஆழமாவதால் நீர் வழிதலில் சமநிலை குலைகிறது. உவர் நீர் உட்புகும் அபாயம் ஏற்படுகிறது.

(iv) (அ) பொலித்தீன் மண்ணில் உக்காத ஒரு பொருள் என்ற விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்தல்,

(ஆ) பொலித்தீன் பாவனையைச் சட்ட ரீதியாகக் கட்டுப்படுத்தல்.

3. (i) உலக சனத்தொகைப் பரம்பலில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்

(அ) பௌதீகக் காரணிகளான தரைத்தோற்றம், காலநிலை.

(ஆ) இயற்கை வளங்கள் – கனியங்கள், நீர்

(இ) பண்பாட்டுக் காரணிகளாக போக்குவரத்தும் ஏனைய வசதிகளும், சமயமும் கலாசாரமும்,

(ஈ) அரச நிர்வாகம்

(ii) (அ) பெண்களுக்கான கல்வி மறுக்கப்பட்டுள்ள சமூகங்கள் இன்னமுமுள்ளன.

(ஆ) தொழில்துறைகளிலும் சமவாய்ப்பு மறுக்கப் பட்டுள்ளதுடன், மிகக்குறைந்த சம்பளத்திலேயே வேலை செய்கின்றனர்.

(இ) பெண்களுக்குச் சில நாடுகளில் திருமணத்தைத் தெரிவு செய்யும் உரிமையும் மறுக்கப்படுகிறது.

(iii) தென்னாசிய நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கையில் பெண்களின் அந்தஸ்து உயர்வானது.

**காரணங்கள் :**

(அ) இலங்கையின் இலவசக்கல்வி காரணமாகப் பெண் களுக்கான கல்வி வாய்ப்பு அதிகம்.

(ஆ) பல்துறைகளிலும் ஆண்களுக்குச் சமமாகப் பெண்கள் புரிகின்றனர். பெண்கள் முகாமைத்துவப்படுத்தும் நிறுவனங்கள் பலவுள்ளன.

(இ) இலங்கைப் பெண்களுக்கு அரசியலுரிமைகள் வழங் கப்பட்டுள்ளன. அரசியலில் பெண்கள் ஈடுபட்டுள் ளனர்.

உதாரணம் : இலங்கை ஜனாதிபதி ஒரு பெண்.

4. (i) ருவெண்டா, சோமாலியா, பொஸ்னியா

(ii) (அ) உள்நாட்டு யுத்தம்

(ஆ) ஆட்சியால் ஏற்பட்டு இன முரண்பாட்டுப் பிரச்சினை கள்

(இ) பயங்கரவாதம்

(ஈ) நில பேதமும், இனபேதமும்

(உ) சமயப்பிரச்சினைகள்

(iii) (அ) அகதிகள் வருகையினால் ஒரு நாடு முகாம்களை அமைக்கும் நிர்ப்பந்தம் உருவாகிறது.

(ஆ) முகாம்களில் பல்வேறு சமூக, பொருளாதார, சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

(இ) அகதிகளைப் போசிப்பதற்குப் பெருமளவு பணம் செலவிடப்படுவதால் பொருளாதாரப் பிரச்சினைகள் உருவாகின்றன.

(iv) ஐ.நா. சபையின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயம் (UNHCR) பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

(அ) அகதிகளைச் சொந்த நாட்டில் அல்லது அவர்களது சொந்தவிடங்களில் மீளக் குடியேற நடவடிக்கை களை மேற்கொள்கிறது.

(ஆ) அகதி முகாம்களைப் பல நாடுகளிலும் பராமரித்து வருகின்றது.

(இ) அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து அகதி களுக்குப் பல்வேறு உதவிகளைப் புரிந்து வருகின்றது.

உதாரணம் : உலக சுகாதாரத்தாபனம், உலக உணவுத் தாபனம், யுனிசெப்

5. (i) (அ) உணவுப்பிரச்சனை ஏற்படுகிறது. உணவுப் பற்றாக் குறையும், அதனால் போசாக்குக் குறைவும் மக்களிடையே தோன்றுகிறது.

(ஆ) விளைநிலங்களின் பரப்பு அதிகரியாத நிலையில் நிலங்கள்துண்டாடப்படுகின்றன.

(இ) சமூகப்பிரச்சினைகளாக குடியடர்த்தி அதிகரிப்பு, சமூகநல வசதிகளான கல்வி, சுகாதாரம், மருத்துவம், போக்குவரத்து ஆகிய துறைகளில் நெருக்கடிகள் தோன்றுகின்றன.

(ஈ) வேலையில்லாப்பிரச்சினை உருவாதல்.

(ii) (அ) எரிபொருட்களுக்கான இறக்குமதிச் செலவுகள் அதிகரித்தல்.

(ஆ) தேசிய வருமானம் குன்றுதல், உள்நாட்டு ஏற்றுமதிப் பொருட்களின் விலை அதிகரிக்காதிருக்க இறக்குமதி யாகும் பெற்றோலியத்தின் விலை அதிகரிப்பதனால் இந்நிலை தோன்றுகிறது.

(இ) மாற்று எரிபொருட்களைப் பயன்படுத்துவதால் உற்பத்திச் செலவும் அதிகரிக்க இடமுண்டு.

(ஈ) பெற்றோலிய விலையேற்றத்தால் உற்பத்திகளின் செலவு அதிகரிக்க, நுகர்வோர் பாதிப்படைதல்.

(iii) (அ) மூலதனப் பற்றாக்குறை - வறிய நாடுகளாதலால் தனிநபர் சேமிப்பும், தேசிய சேமிப்பும் குறைவு. முதலீடுகளை அதிகரிக்க முடியாதுள்ளது. நச்சு வட்டம் இந்நாடுகளில் செயற்படுகிறது.

(ஆ) சனத்தொகை அதிகமாவதால் விளைநிலங்களின் பற்றாக்குறையுள்ளது. ஊட்ட நிலப்பரப்பு அடர்த்தி

அதிகம். சிறிய, துண்டாடப்பட்ட விளை நிலங்களில் தங்கி வாழ்வோர் அதிகம். சிறிய நிலங்களாதலால் நவீன பயிர்ச்செய்கைத் தொழில்நுட்பங்களை கையாள்வதில் சிக்கல்களுமுள்ளன.

6. (i) (அ) பிறப்பு வீதம் அதிகரித்தல்.

(ஆ) இறப்பு வீதம் குறைதல்.

(இ) இடப்பெயர்வுகள்.

(ii) (அ) சமூக நலச் சேவைகளான அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியாமை ஏற்படும், உணவு இருப்பிடம், கல்வி, சுகாதாரம், மருத்துவம், போக்குவரத்து வசதிகளைப் பூர்த்தி செய்வதில் இடர்பாடுகள் தோன்றும்.

(ஆ) காடுகள் அழிவுறக் காலநிலை பாதிப்புறும், மழைவீழ்ச்சி குன்றி வெப்பநிலை அதிகரிக்கும் மணல் அகழ்தல், கடற்கரை அரிப்பினைத் துரிதப்படுத்தும்.

(இ) வேலையில்லாப்பிரச்சினை பாரியதாக மாறும்.

(iii) (அ) **நிலம் மாசடைதல் :**

உணவுற்பத்தியை அதிகரிப்பதற்காக இரசாயன உரங்களைப் பயன்படுத்துவதால் மண்களின் இயற்கைவளம் குன்றல், பயிர்ச்செய்கை அதிகரிப்பிற்காக தாவரப் போர்வை நீக்கப்படுவதால் மண்ணரிப்பு ஏற்படுதல். பொலித்தீன் பாவனையும் நிலத்தை மாசடைய வைக்கிறது.

(ஆ) **நீர் மாசடைதல் :**

உணவுற்பத்திக்காக கிருமிநாசினிகளைப் பயன்படுத்துவதாலும், வேலை வசதிகளை அதிகரிப்பதற்காகத் தொழிற்சாலைகளை உருவாக்குவதால் அவற்றின் கழிவுகள் நீரில் சேர்வதாலும் நீர் மாசடைகிறது. அவ்வாறே வளியும் மாசடைகின்றது.

(iv) (அ) கூட்டாக வாழுந்திறனை வளர்த்துக் கொள்ளல்.

(ஆ) மற்றவர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்கவும் பொறுத்துக் கொள்ளவும் பழகுதல்.

(இ) அனைத்து வளங்களையும் சமமாகப் பகிர்ந்து கொள்ளப் பழகுதல்.

7. (i) (அ) விவசாயக் காணி துண்டாடப்படுதல்.

(ஆ) குறைந்த அறுவடைகள்.

(இ) உணவு களஞ்சியப்படுத்தலிலுள்ள குறைபாடுகள்.

(ii) உணவுற்பத்தியைப் பாதிக்கின்ற இயற்கை அனர்த்தங்கள் வருமாறு

(அ) வரட்சி ஏற்படுதல்.

(ஆ) வெள்ளப் பெருக்கு ஏற்படுதல்.

(இ) புவி நடுக்கம், மண்ணரிப்பு, மண்சரிவு ஏற்படுதல்.

(ஈ) நோய்கள் ஏற்படுதல்.

(iii) (அ) நவீன தொழில்நுட்பத்தில் உணவுற்பத்தியை அதிகரிக்க இரசாயன உரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அவை நிலத்தினை மாசடைய வைக்கின்றன. பாரிய யந்திர உழவு கருவிகள் நிலத்து மண்ணைப் புரட்டி விடுவதால் மண்ணரிப்பு துரிதப்படுகின்றது.

(ஆ) கிருமிநாசினிகள் அளமுறையின்றிப் பாவிக்கப்படுவதால் நீரும், வளியும் மாசடைகின்றன. இவற்றினைப் பயன்படுத்திய உற்பத்திகளை நுகர்வதால், நுகர்வோர் (மனிதர், விலங்கு) பல்வேறு நோய்க்குள்ளாகின்றனர்.

(iv) (அ) வளர்ந்துவிட்ட நாடுகளில் உணவுற்பத்தி மிக அதிகரித்து உள்ளது. அந்நாடுகள் வளர்முக நாடுகளுக்கு வழங்க முன்வருவது குறைவு. அதாவது உணவு சரிவரப் பகிரப்படாமையே உணவுப் பிரச்சினைக்குரிய முதற் காரணம்.

(ஆ) உணவு ஒதுக்கம் இன்னொரு காரணமாகும். தம் நாட்டுச் சூழலில் கிடைக்கின்ற பொருட்கள் மக்களின் புதிய உணவுப் பழக்கத்தால் ஒதுக்கப்பட்டுள்ளன. இலங்கையில் அரிசிப் பாவனை குறைந்து கோதுமைப் பாவனை கூடி வருகின்றது. குரக்கன், கீரை வகைகள். பனம்பொருட்கள் ஒதுக்கப்படுகின்றன. சைவர்கள் மாட்டிறைச்சியையும், இஸ்லாமியர் பன்றி இறைச்சி யையும் ஒதுக்குகிறார்கள.

8. (i) ஐக்கிய அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, ஆசெந்தீனா

(ii) (அ) சனத்தொகை அதிகரிப்பால் நாடுகளின் வளமான நிலங்கள் அனைத்தும் பயிர்ச்செய்கை நடவடிக்கை

களுக்குட்படுத்தப்பட்டுள்ளன. ஓரளவு வளம் இன்றிய நிலங்களில் பயிர் செய்வது எவ்வகையிலும் இலாப கரமானதாகவில்லை.

(ஆ) மிகை உற்பத்தி செய்கின்ற நாடுகளிலிருந்து தானியங்களை இறக்குமதி செய்வது, உண்ணாட்டில் உற்பத்தி செய்வதிலும் மலிவாக உள்ளது.


(இ) அபிவிருத்தியடைந்த நாடுகளில் உணவுற்பத்தியைக் கட்டுப்படுத்த வேண்டியுள்ளது. சர்வதேச வர்த்தகத்தில் தமது உற்பத்தியின் விலையைப் பேணுவதற்காகவும் மிகை உற்பத்தியை அழிக்கவும் நேரிடுகிறது.

(iii) (அ) அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் உணவுப் பொருட்களின் இறக்குமதியில் தங்கியிருப்பது விவேகமல்ல. ஏனெனில், இறக்குமதியாகும் உணவுப் பொருட்கள் தேசிய வருமானத்தில் பெரும்பகுதியை செலவிட வைக்கின்றன.

(ஆ) உள்ளூரில் ஏற்படுத்திக்கொள்ளும் வசதிகளைக் கொண்டு (நீர்ப்பாசனம், புதிய தொழில்நுட்பம்) உற்பத்தியைத் தாமே அதிகரித்துக்கொள்ளல் வேண்டும். புதிய பயிர்கள், பாரம்பரியப் பயிர்கள் என்பன புதிய உணவுப் பழக்கத்தை மாற்றுவனவாக அமைய வேண்டும்.

அத்தியாயம்

# 4



# சனநாயகம்

1. (i) **சனநாயகம் என்ற பதத்தின் கருத்து யாது?**

மக்கள் ஆட்சி

(ii) **பண்டைய இலங்கையில் சனநாயக இயல்புகள் காணப் பட்டன. அவற்றிற்கு உதாரணங்கள் தருக.**

(அ) அனுராதபுர, பொலநறுவைக் காலத்தில் மன்னராட்சி முறையிலும் சனநாயக இயல்புகள் இருந்துள்ளன. அரச சபையில் அமர்ந்து நாட்டின் நிர்வாகத்தை மன்னன் அமைச்சரவையில் கருத்துக்களோடு ஆற்றி யுள்ளான்.

(ஆ) இலங்கையில் வழக்கிலிருந்த கம்சபா (கிராமசபை) முறையில் சனநாயகப் பண்புகள் இருந்துள்ளன. கிராமத் தலைவன் மக்களாலேயே நியமிக்கப் பட்டிருந்தான்.

2. **சனநாயகம் என்ற எண்ணக் கருவை விளக்குக.**

(அ) அது ஓர் ஆட்சிமுறை. மக்களால் தெரிவு செய்யப்படும் ஆட்சியாளர்களைக் கொண்டது.

(ஆ) அது ஒரு சமூக வாழ்க்கை முறை. சிறந்த குணப் பண்பு களுடன் கூடிய மக்களைக் கொண்டதாக சனநாயக சமூகம் அமையும்.

3. **சனநாயக ஆட்சி குறித்து ஒரு வரன்முறை விளக்கந் தருக.**

(அ) நவீன சனநாயத்தின் தாயகம் கிரேக்க நாடாகும். ஏதென்ஸ், ஸ்பாட்டா ஆகிய நகராட்சிகளில் கிரேக்க ஆண் மக்கள் சகலரும் கூடி நிர்வாக முடிவுகளை எடுத்தனர். அடிமைக ளும் பெண்களும் இச்சபைகளில் கலந்துகொள்ளமுடியாது.

(ஆ) கிரேக்க நாட்டிலிருந்த சனநாயகம், நேரடி சனநாயகமா கும். சனத்தொகை அதிகரித்ததும், மக்கள் தத்தமக்கெனத் தேர்ந்தெடுத்த பிரதிநிதிகள் மூலம் ஆட்சி நடவடிக்கை களில் ஈடுபடுகின்றனர். இதனை மறைமுக சனநாயகம் அல்லது பிரதிநிதித்துவ சனநாயகம் அல்லது பாராளு மன்றச் சனநாயகம் என்பர். இன்று உலக நாடுகளில் பலவற்றிலும் இதுவே நடைமுறையில் உள்ளது.

4. **பிரதிநிதித்துவ சனநாயகத்தின் அடிப்படை இயல்புகள் எவை?**

(அ) தேர்தல்கள் மூலம் மக்கள் தம் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வர்.

(ஆ) அவ்வாறு தேர்ந்தெடுப்பதற்கு மக்களுக்கு வாக்குரிமை உள்ளது. அதனை சர்வசன வாக்குரிமை என்பர்.

(இ) சனநாயக நாட்டில் அரசியற்கட்சிகள் இருக்கும் தத்தமது கொள்கைகளை மக்கள் முன்வைத்துப் போட்டியிட்டுப் பிரதிநிதிகளாக வருவர்.

(ஈ) ஒரு சனநாயக நாட்டில் இரண்டு அல்லது அதற்கு மேல் எண்ணிக்கை கொண்ட கட்சிகள் இருக்க முடியும்.

(உ) தனது வாக்குரிமையைப் பாவித்துப் பொருத்தமான ஆட்சியாளரைத் தெரிவு செய்யவும், பொருத்தமற்ற ஆட்சியாளரை நீக்கவும் மக்களுக்கு உரிமை (மக்கள் இறைமை) உண்டு.

(ஊ) இரு வகையான தேர்தல் முறை மூலம் பிரதிநிதிகள் தெரிவாவர். பிரித்தானியாவில் ஒவ்வொரு தேர்தல்

தொகுதியிலும் தனித்தனியாகப் பெரும்பான்மை வாக்கு களைப் பெறும் பிரதிநிதி தெரிவாவார். இலங்கையில் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கு விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையுள்ளது.

(எ) கூடிய பிரதிநிதித்துவத்தைப் பெற்ற கட்சி ஆளுங்கட்சி யாகவும், ஏனையன எதிர்க்கட்சியாகவும் சனநாயக ஆட்சியில் செயற்படுகின்றன.

(ஏ) அரசாங்கங்கள் மாற்றமடையும் போது ஆட்சிக் கொள்கை களும் மாற்றமடையும்.

**5. சனநாயகம் பற்றி முன்வைக்கப்பட்டுள்ள கருத்துக்களை விபரிக்க.**

(அ) ''சனநாயக ஆட்சியில் அரசுகளின் ஆட்சியதிகாரம் மக்களின் விருப்பிலேயே தங்கியுள்ளது'' – ஜோன் லொக்

(ஆ) ''சுதந்திரமாகப் பிறந்த மனிதன் சுதந்திரமாக வாழ வேண்டும்'' – ரூசோ

(இ) ''மக்களால் மக்களுக்காக நடைபெறும் மக்கள் ஆட்சி'' – ஆபிரகாம்லிங்கன்

(ஈ) ''மக்களுக்குக் கிடைத்துள்ளதும் அவர்களால் அல்லது அவர்களின் பிரதிநிதிகளால் சுதந்திரமான தேர்தல் முறை மூலம் நேரடியாக நடைமுறைப்படுத்தப்படும் மக்கள் ஆட்சி'' – கலைக்களஞ்சியம்

(உ) ''பெரும்பான்மையினரின் விருப்பத்தின் பேரில் நடைபெறும் ஆட்சி'' – பலர் கருத்து

(ஊ) ''சுதந்திரமாகப் பிறந்த மனிதன் சமமான உரிமைகளை அனுபவிப்பதற்கு உரித்துடையவன்'' – பிரான்சியப் புரட்சி

**6. பெரும்பான்மையினரின் விருப்பத்தை ஏற்றுக்கொள்ளும் போது சிறுபான்மையினர் உரிமைகள் என்னவாகும்?**

சிறுபான்மையினரை அடக்கி ஆள்வதென்பது சனநாயகத்தில் இல்லை. சிறுபான்மையினரின் உரிமைகள் பாதுகாக்கப்படும். அதற்கான சட்டங்கள் அரசியல் திட்டத்தில் வரையறுக்கப் பட்டிருக்கும். சிறுபான்மையினரின் கருத்துக்களுக்கு மதிப் பிருக்கும்.

**7. சனநாயகம் பற்றி அரச அறிவியலாளர்கள் வெளியிட்டுள்ள கருத்துக்களின் பொதுத்தன்மை யாது?**

(அ) தனிநபரின் தனித்துவத்திற்கு மதிப்பளித்தல்.

(ஆ) தனிமனிதனின் ஆளுமையை விருத்தியாக்கல்.

(இ) அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தல்.

**8. சனநாயகத்தின் வெற்றிகரமான முக்கிய பண்புகள் எவை?**

(அ) அரசியல் அறிவு படைத்த மக்கள்

(ஆ) அர்ப்பணிப்புள்ள செயலாற்றும் ஆட்சித் தலைவர்

(இ) சுதந்திரமான ஊடகத்துறை

(ஈ) இரு அரசியல் கட்சிகள்

(உ) சிறுபான்மையினரை அடக்கியாளாத பெரும்பான்மை

(ஊ) நாட்டின் பொருளாதார ஸ்திரம்

**9. ஒரு சனநாயக நாட்டிலுள்ள மக்களின் மனித உரிமைகளும் கடமைகளும் வரலாற்றுக் காலத்தில் வென்றெடுக்கப்பட்டவையாகும். அத்தகைய வரலாற்றுச் சந்தர்ப்பங்கள் எவை?**

(அ) ஆங்கிலப் புரட்சி

(ஆ) பிரான்சியப் புரட்சி

(இ) அமெரிக்கப் புரட்சி

(ஈ) ருஷியப் புரட்சி

**10. ஐக்கிய நாடுகள் அமையம் பிரகடனப்படுத்தியுள்ள மனித உரிமைகள் எவை?**

**(அ) குடியியல் உரிமைகள்**

வாழும் உரிமை, தனியார் சுதந்திரம் பற்றிய உரிமை, கருத்து வெளியிடும் உரிமை, சொத்துக்கள் வைத்திருக்கும் உரிமை, விரும்பிய சமயத்தைப் பின்பற்றும் உரிமை, சமத்துவம் பற்றிய உரிமை, சடத்தின் முன் சமமாக மதிக்கும் உரிமை, சட்டம் கூடும் உரிமை, வேலை செய்வதற்கான உரிமை, தமது நாட்டில் விரும்பிய இடத்தில் வாழும் உரிமை, குடும்ப வாழ்க்கை நடாத்தும் உரிமை.

(ஆ) அரசியல் உரிமைகள்

ஆட்சியாளரைத் தெரிவு செய்யும் உரிமை, அரசியல் கட்சியில் சேரும் உரிமை, தேர்தலில் சுபேட்சகராகும் உரிமை, தேர்தலில் பிரசாரம் செய்யும் உரிமை, தனது தேவைகளை அரசிடம் முன்வைக்கும் உரிமை, அரசாங்கத்தில் பதவி வகிக்கும் உரிமை, அரசாங்கத்தை விமர்ச்சிக்கும் உரிமை.

11. மக்களது கடமைகள் எவை?

(அ) விழுமியங்கள்

பெற்றாரைக் கவனித்தல், சமூகச் சடங்குகளைப் பேணல், சம்பிரதாயங்களைப் பேணல் ஆசிரிய ஆலோசனை பேணல், வாழு வாழவிடு.

(ஆ) சட்ட ரீதியான கடமைகள்

அரசுக்கு விசுவாசமாக இருத்தல், அரசாங்கச் சட்டங்களைப் பின்பற்றுதல், சட்டத்தை நிலைநாட்ட உதவுதல், வரி செலுத்துதல்.

(இ) சமூகம் சார்ந்த கடமைகள்

சுயேட்சையாகச் செயற்படும்போது அது ஏனையவர்களைப் பாதிக்காமை, ஆற்றல்களையும் சவால்களையும் எதிர்கொள்ளுதல், ஏனையோரது கருத்துகளுக்கு மதிப்பளித்தல், சரியாயின் ஏற்றுக்கொள்ளுதல், சமய, இன ரீதியான சகிப்புத்தன்மை, முரண்பாடுகளைக் கலந்துரையாடித் தீர்த்தல், ஒத்துழைப்புடன் கருமமாற்றுதல், உரிமைகளை அனுபவித்து கடமைகளைச் செய்தல்.

# சனநாயகம் வினாவிடைகள்

## பகுதி I

1. **''சனநாயகம்'' என்ற ஆட்சி முறைக்குச் சரியான கூற்று.**

   1) ஒரு ஆட்சித் தலைவன் தனக்குச் சாதகமான ஒரு சிலரை உதவியாகக் கொண்டு நடைபெறும் ஆட்சிமுறை.
   2) மக்களால் தேர்ந்தெடுத்த பிரதிநிதிகள் தமது ஆயுட்காலம் வரை ஆட்சி செய்யும் ஆட்சிமுறை
   3) மக்களால் மக்களுக்காக நடைபெறும் மக்களாட்சி முறை
   4) ஆண் மக்கள் எல்லோரும் ஓரிடத்தில் கூடிய முடிவுகளை எடுத்து நடாத்தும் ஆட்சி முறை.

2. **''சுதந்திரமாகப் பிறந்த மனிதன் சமனான உரிமைகளை அனுபவிப் பதற்கு உரித்துடையவன்.'' எனும் கூற்று முதன்முறையாக பின்வருவனவற்றுள் எந்த நிகழ்ச்சியோடு தொடர்புபடுத்திக் கூறப்பட்டது.**

   1) 1688 ஆங்கிலப் புரட்சி
   2) 1783 அமெரிக்க சுதந்திரப் போர்
   3) 1789 பிரான்சியப் புரட்சி
   4) 1917 ருஷியப் புரட்சி

3. **பின்வருவனவற்றுள் சனநாயக ரீதியான தொழிற்பாடாக எதனைக் குறிப்பிடலாம்?**

   1) ஒருவர் தனது எதிரிகளைக் கடுமையாகக் கண்டனஞ் செய்வது.
   2) ஆக்கபூர்வமான கண்டனங்களையும், எதிர்மாறான கருத்துக் களையும் சகிக்கும் தன்மை.
   3) ஒருவர் தனது அபிப்பிராயங்களை பொதுமக்களிடையே பகிரங்கப்படுத்துவது.
   4) தமது எதிரிகள் கருத்துக்களை வெளிப்படுத்தும் மார்க்கங் களைத் தடைசெய்வது.

**4. ஒரு சனநாயக நாட்டில் கட்டாயமாக இருக்கவேண்டிய சிறப்பியல்புகளை மட்டுமே கொண்டுள்ள விடையைத் தேர்ந்தெடுக்க.**

1) வாக்குரிமை, பெரும்பான்மை ஆட்சி, தேர்தல் நடாத்தல், கருத்துக்கு மதிப்பளித்தல்.
2) வாக்குரிமை, குடியரசுஆட்சி, தேர்தல் நடாத்துதல், கட்டுப்பாடில்லாத கலந்துரையாடல்.
3) தேர்தல் நடாத்துதல், பெரும்பான்மை ஆட்சி, முடியாட்சி, அரசியல் கட்சிகள்
4) நிறைவேற்று சனாதிபதி, மற்றவர்களுக்கு மதிப்பளித்தல், வாக்குரிமை, குடியரசு ஆட்சி

**5. மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவது முக்கியத்துவம் பெறுவதற்கான காரணம்.**

1) அவை புரட்சிகள் மூலம் பெறப்பட்டவை என்பதினால்.
2) அவற்றை மீறினால் தண்டனை அனுபவிக்க நேரிடும் என்பதனால்.
3) அவை தனி ஆளினதும் சமுதாயத்தினதும் நல்வாழ்வுக்கு வழிவகுக்கின்றன என்பதனால்.
4) அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் அவற்றிற்கு விசேட கவனம் செலுத்துவதனால்.

**6. உலகத்திலுள்ள ஆட்சிமுறை தொடர்பான கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன. அதில் பொருத்தமற்றது யாது?**

1) சர்வதிகார ஆட்சியில் அதிகாரம் ஒருவரிடம் அல்லது ஒரு சிறிய குழுவிடம் காணப்படும்.
2) முடியாட்சி இடம்பெறும் நாடுகளில் அரசர்களின் அதிகாரம் எல்லையற்றதாகும்.
3) சனநாயக நாட்டிலுள்ள குடிமக்கள் தாம் பின்பற்றும் சமயத்தை மற்றவர்கள் ஏற்கச் செய்யும் உரிமையுடையது.
4) சனநாயக நாட்டில் சமூக அங்கத்தவர்களுக்கான அதிகாரம் சமத்துவமானது.

**7. சனநாயக நாடொன்றின் கீழ் பொதுசன அபிப்பிராயத்தை நேரடியாக அறிந்துகொள்வதற்கு பின்வருவனவற்றில் எவ்வழி உதவுகின்றது.**

1) சுதந்திரமான ஊடகங்கள் (பத்திரைகள்)
2) பொதுக் கூட்டங்கள்
3) பாராளுமன்ற விவாதங்கள்
4) ஒப்பக் கோடல் (அபிப்பிராய வாக்கெடுப்பு).

8. **சனநாயக ஆட்சிமுறையொன்றின் சிறப்பியல்பைக் கொண்டிருப்பவை பின்வருவனவற்றுள் எவை?**

A – கருத்துக்களை வெளிப்படுத்துவதன் மூலம் நல்லாட்சியை நிறுவல்

B – தேர்தலில் வாக்குரிமையைப் பிரயோகித்து நல்லாட்சி அமைத்தல்.

C – எழுத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் என்பவற்றிற்கான உரிமைகளைக் கொண்டிருத்தல்.

D – நிரந்தரமான ஆட்சியாளன் தேர்தல்மூலம் பாராளுமன்றத்தை நிறுவியாளல்.

1) A, D 2) A, B 3) C, D 4) B, C

9. **நாடு ஒன்றின் சனநாயக ஆட்சிமுறை வெற்றிகரமாக நடைபெறுவதற்கு தேவையற்ற அம்சம் பின்வருவனவற்றில் எது?**

1) கருத்துக்களையும் அபிப்பிராயங்களையும் சுதந்திரமான வெளியிடலும் கலந்துரையாடலும்.
2) அரசாங்கமும் எதிர்க்கட்சிகளும் அபிப்பிராயங்களைப் பரஸ்பரம் சகித்துக்கொள்ளல்.
3) ஓரின மக்களை மட்டும் கொண்டதாக இருத்தல்.
4) தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும் போது பெரும்பான்மை வாக்குகளால் முடிவு செய்தல்.

10. **ஆபிரஹாம்லிங்கன் சனநாயகக் கோட்பாட்டை நடைமுறைப்படுத்திய மாமனிதன் எனப்படுவதன் காரணம் யாது?**

1) ஐக்கிய அமெரிக்க அரசுகளின் முதல் ஜனாதிபதியானதால்.
2) அமெரிக்க சுதந்திரப் போரில் வெற்றியடையப் பணி புரிந்ததால்.
3) அடிமைகளாக ஊழியம் செய்த கறுப்பர்கள் சுதந்திரம் பெறுவதற்கான இயக்கத்தின் முன்னோடியாக விளங்கியதால்.
4) ஐக்கிய அமெரிக்க அரசின் சட்டசபையில் கறுப்பினத்தவரின் பிரதிநிதியாக விளங்கியதால்.

11. **சனநாயக நாடொன்றில் அரசியல் கட்சிகள் பலவிருப்பதால் ஏற்படக்கூடிய முக்கிய பிரதிகூலமானது.**

1) நிலையான அரசாங்கத்தை உருவாக்க முடியாதிருத்தல்.
2) சிறுபான்மை இனத்தவருக்கு குறைந்தளவு கவனம் செலுத்தப்படுதல்.
3) கட்சிகளுக்கிடையே குறிப்பிடத்தக்க அளவு வேறுபாடுகள் காணப்படாதிருத்தல்.
4) சிறுபான்மை இனத்தவர் எப்போதும் எதிர்க்கட்சியாக இருத்தல்.

12. சனநாயக நிர்வாக முறைமை வெற்றியடைவதற்கு உன்னதமான காரணி

1) அரசியலறிவு படைத்த மக்கள் இருத்தல்.
2) பொருளாதாரம் கீழ் மட்டத்தில் இருத்தல்.
3) இரண்டு அரசியல் கட்சிகள் மட்டும் இருத்தல்.
4) சுதந்திரமான வெகுசனத்தொடர்பு முறைமை இருத்தல்.

13. நேரடி சனநாயகம் என்ற எண்ணக்கருவை வழக்கமாகக் காட்டு கின்ற செயன்முறை பின்வருவனவற்றில் எது?

1) பாராளுமன்ற அங்கத்தவர்களைத் தெரிவு செய்து நியமித்தல்
2) மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பு நடாத்துதல்.
3) மாகாண சபைகளும் உறுப்பினர்களைத் தெரிவு செய்தல்.
4) பிரதேசசபைத் தேர்தல்கள்.

14. சனநாயகம் நிலவும் நாட்டில் அரசாங்கக் கட்சியைத் தேர்ந்தெடுப் பதற்குள்ள உரிமை போன்று

1) வாக்குரிமையையளிக்க முடியும்.
2) பல கட்சிகளை ஏற்படுத்த முடியும்.
3) எதிர்க்கட்சியொன்றைத் தேர்ந்தெடுக்க முடியும்.
4) தொழிற்சங்கங்களை நிறுவ முடியும்.

15. சனநாயக முறையில் மக்களது உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமாயின் ஒவ்வொரு பிரஜையும்

1) கட்சியொன்றின் அங்கத்தவனாக இருத்தல் வேண்டும்.
2) பொதுத் தேர்தலின் போது தவறாது வாக்களிக்க வேண்டும்.
3) அரசாங்க உத்தியோகத்தனாக இருத்தல் வேண்டும்.
4) சிறந்த அரசாங்கத்தை அமைத்ததுடன் நின்றுவிடாது அரசியல் கருமங்களில் அக்கறை கொண்டு ஈடுபட்டுத் தனது உரிமைகளைப் பயன்படுத்தல் வேண்டும்.

16. சனநாயகத்திற்குச் சவாலாக அமையும் சக்திகளுள் ஒன்று

1) அரசாங்கக் கட்சி
2) எதிர்க்கட்சி
3) தேர்தலில் தோல்வியடைந்த கட்சி
4) பொதுமக்களால் பெரும்பான்மை ஆதரவளிக்கப்பட்ட கட்சி

**17. சனநாயக ஆட்சியில் எதிர்க்கட்சிக்கு பணிமுறைப் பதவிநிலை (உத்தியோக அந்தஸ்து) அளிக்கப்படுவது ஏனெனில்.**

1) அது நிர்வாகச் செயன்முறையின் இன்றியமையாத ஓர் உறுப்பாக இருக்கின்றமையால்.
2) அது தேர்ந்தெடுத்த பிரதிநிதிகளைக் கொண்டிருப்பதால்.
3) எதிராளிகளின் ஒத்துழைப்பைப் பெறுவதற்கு அது உதவுகின்றமையால்.
4) தீர்மானஞ் செய்வதில் தாமதம் உண்டாவதை அது தவிர்க்கக் கூடுமாகையால்.

**18. சனநாயக உரிமைகளைப் பாதுகாத்தற் பொருட்டு கட்டாயமாக நிறைவேற்றப்பட வேண்டிய நிபந்தை எதுவெனில்,**

1) நீதித் துறையானது தகவில்லா ஆதிக்கத்திற்கு உட்படாது சுதந்திரமாக இருத்தல் வேண்டும் என்பதாகும்.
2) பாதுகாப்புச் சேவைகள் வல்லமையுள்ளவையாக இருத்தல் வேண்டும்.
3) நிர்வாகம் திறமையுள்ளதாக இருத்தல் வேண்டும் என்பதாகும்.
4) வாக்களித்தல் கட்டாயமாக்கப்படுதல் வேண்டும் என்பதாகும்.

**19. பின்வருவனவற்றுள் அரசியற்கட்சி முறைமை பற்றி சரியான கூற்று எது?**

1) உலகிலுள்ள ஒவ்வொரு நாட்டிலும் கட்சி முறைமை உண்டு.
2) இரு கட்சி முறைமை இருப்பது ஒரு சுதந்திர சமூகத்தின் அறிகுறியாகும்.
3) கட்சி முறைமை சமூகத்தில் தேவையற்ற பிரிவினைகளை உண்டாக்குகிறது.
4) அபிவிருத்தியடையும் நாடுகளுக்கு கட்சிமுறைமை அவசியம் ஆகும்.

**20. ஒரு பொதுத் தேர்தலின் போது மதியூகம் உள்ள ஒரு வாக்காளன்**

1) எந்த ஆபேட்சகருக்காயினும் வாக்களித்தல் தனது கடமை என்ற நம்பிக்கையில் செயலாற்றுவான்.
2) அபேட்சகரின் தனிப்பட்ட குணாதிசயங்களை அடிப்படையாகக் கொண்டு வாக்களிப்பான்.
3) கட்சிக் கொள்கைகளை நன்கு விளங்கிக் கொண்டு வாக்களிப்பான்.
4) தனது சொந்த நன்மையை மனத்திற் கொண்டு வாக்களிப்பான்.

**21. ஒரு சனநாயக சமூகத்தில் எதிர்க்கட்சியின் கடமை யாது?**

1) அரசாங்கக்கட்சியை கண்டிக்கும் அதே வேளையில் அவசியமான போது அதனுடன் ஒத்துழைத்தலாகும்.
2) அரசாங்கக் கட்சியின் முன்மொழிவு ஒவ்வொன்றையும் வன்மையாகக் கண்டிப்பதாகும்.
3) அரசாங்கத்திற்கெதிராக கிளந்தெழுமாறு மக்களைத் தூண்டுதல் ஆகும்.
4) அரசாங்கக் கட்சி நெறி விலகிப் போகும் போதெல்லாம் அதனைச் சரியான வழியில் நெறிப்படுத்துவதாகும்.

**22. பாராளுமன்றப் பிரதிநிதிகள் பொதுமக்களுக்கு திருப்தியளிக்க கருமங்களை செய்ய முற்படும்போது பொதுமக்கள் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளில் ஒன்று.**

1) புதினப் பத்திரிகை மூலம் கண்டனம் செய்தல்.
2) அடுத்த தேர்தலின் போது அவர்களுக்கு வாக்களிக்காது விடுதல்.
3) கட்சித் தலைவர்களிடம் முறையிட்டு தக்க நடவடிக்கை எடுத்தல்.
4) அப்பிரதிநிதியின் நடவடிக்கையை பொதுமக்களிடையே அம்பலப்படுத்தி அவர்களது ஆதரவைக் குறைத்தல்.

**23. பின்வருவனவற்றில் சனநாயக ஆட்சி ஒன்றில் மாத்திரம் அனுபவிக்கக்கூடிய உரிமை எது?**

1) வாக்குரிமை
2) அரசியல், பேச்சு, எழுத்துரிமை
3) மத உரிமை
4) கல்வி கற்கும் உரிமை

**24. சனநாயகமொன்றில் அரசியல், பேச்சு, எழுத்துச் சுதந்திரம் கட்டுப்படுத்தப்படுவது**

1) நடைமுறையிலுள்ள அரசாங்கத்திற்கெதிராக மக்கள் கிளர்ச்சி செய்யும்போது
2) இராணுவச் சட்டம் அமுலில் இருக்கும் போது
3) பொதுத்தேர்தல் காலங்களில்
4) பொதுத்தேர்தல் நடந்து முடிந்த பின்

**25. சனநாயக முறையில் அடிப்படை அம்சம் என்னவெனில்**

1) மத்திய அரசாங்கத்தினால் உள்ளூர் அதிகாரசபைகள் கட்டுப் படுத்தப்படுவதாகும்.

2) மக்கள் பங்குபற்றுதலாகும்.
3) சிறுபான்மையினரின் சிறப்புரிமைகளாகும்.
4) பெரும்பான்மையினருக்கு கொடுக்கப்படும் சிறப்பிடம்.

**26. சனநாயக சமூகத்தில் தீர்மானங்கள் செய்வதினாலும் அவற்றைச் செயற்படுத்துவதனாலும் மேற்கொள்ளப்பட வேண்டிய முறை**

1) தனியாள் ஒவ்வொருவரினதும் உடன்பாட்டைப் பெறக் கூடிய தீர்மானங்களை மாத்திரம் செயற்படுத்துவதாகும்.
2) உடன்படாதோரைப் புறக்கணித்துவிட்டு பெரும்பான்மை யினரின் விருப்பத்தை செயற்படுத்துவதாகும்.
3) பெரும்பான்மையோரின் விருப்பத்தை செயற்படுத்தும் அதேவேளையில் உடன்படாதோரின் விருப்பங்களைப் பொறுத்துக்கொள்வதாகும்.
4) அரசாங்கம் மக்களால் நியமிக்கப்படுவதற்கேற்ற தீர்மானங் களை செயற்படுத்துவதாகும்.

## பகுதி II

1. (i) ஒரு சனநாயக ஆட்சியின் பிரதான அம்சங்கள் யாவை?
   (ii) அதற்காக ஒரு ஆட்சியின் வெற்றிக்கு அவசியமான நிபந்தனைகள் யாவை?

2. (i) பெரும்பான்மை மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசாங் கத்தையுடைய சனநாயக ஆட்சியொன்றில் எதிர்க்கட்சி இருப்பது அவசியமா, விளக்கம் தருக.
   (ii) இதனை ஏன் மாற்று அரசு என்றழைப்பர்?
   (iii) எதிர்க்கட்சியின் கடமைகள் யாவை?

3. (i) சனநாயக நாடு ஒன்றில் வாழும் பிரசையின் தனியாள் உரிமைகளுள் நான்கினை எழுதுக.
   (ii) ஏனையோரது சுதந்திரத்திற்கு இடையூறு விளைவிக்காது, ஒருவர் தனது தனியாள் உரிமைகளை எவ்வாறு அறிவிக்க வேண்டும் என்பதை இரண்டு காரணிகளின் உதவியுடன் விளக்குக.
   (iii) நாம் அனுபவிக்கும் ஒவ்வோர் உரிமையும் ஒரு கடமையுடன் எவ்வாறு சம்பந்தப்பட்டுள்ளது என்பதை இரண்டு உதாரணங்கள் தந்து விபரிக்க.

4. சனநாயக நாடொன்றில் வாக்குரிமையைப் பிரயோகிப்பது தொடர்பாக உருவாக்கக்கூடிய நிலைமைகள் சில கீழே தரப் பட்டுள்ளன. அவையாவன.

(அ) தேர்தலின் போது வாக்களித்தல்.

(ஆ) அயலவர்களைத் தமது சொந்த விருப்பப்படி வாக்களிக்க விடாமல் தடுத்தல்.

(இ) அரசலில் கட்சிகளின் பூட்கைகளை வாசித்து விளங்கிக் கொள்ளல்.

(ஈ) மற்றொருவருக்குப் பதிலாக வாக்களித்தல்.

(உ) வாக்களித்தற்கான தகுதியைப் பெற்றவுடன் வாக்காள ராகப் பதிவு செய்துகொள்ளல்.

ஊ) தேர்தலின் போது வாக்களிக்காமல் இருத்தல்.

(1) மேலே தரப்பட்டுள்ள நிலைமைகளுள் சனநாயக நாடொன்றில் பொதுமக்கள் தவிர்க்க வேண்டியவை யாவை?

(2) நாட்டின் ஆட்சி சம்பந்தப்பட்ட வரையில் இவ் வகைப் பிரஜை ஒருவர் வாக்களிக்கக் கூடிய இரண்டு சந்தர்ப்பங்களைத் தருக.

(3) சனநாயக நாடொன்றில் பிரஜை ஒருவர் வாக்குரிமையைப் பிரயோகிப்பதற்கு மேலதிகமாக அனுபவிக்கும் அரசலில் உரிமைகள் இரண்டினை விளக்குக.

(4) பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்குவதில் பொதுசனத் தொடர்புச் சாதனங்கள் மூலம் பெறக் கூடிய பயன்கள் யாவை என்பதனை, அச்சாதனங்கள் இரண்டின் துணையுடன் விளக்குக.

(5) கீழே சனநாயக நாடுகளில் குடிமக்கள் அனுபவிக்கும் உரிமைகள் தரப்பட்டுள்ளன.

A – தமக்கு விருப்பமான தொழிலை மேற்கொள்ள லாம்.

B – தேர்தல்மூலம் தமக்கு விருப்பமான அரசாங் கத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

C – தொழிலுக்கு ஏற்ற சம்பளம் பெறலாம்.

D – சொந்தமாகச் சொத்துக்களை சேர்த்துக்கொள்ளல்.

E – அரசியல் கூட்டங்கள் நடத்தலாம்.

F – தான் விரும்பிய சமயத்தைப் பின்பற்றலாம் .

மேலே தரப்பட்ட உரிமைகளில் பொருளாதார சுதந்திரம் தொடர்பானவை மூன்றை எழுதுக.

(i) A – ஜீன் ஜக் ரூசோ
B – ஜோன் லொக்
C – ஆபிரகாம்லிங்கன்
D – சீலர்

(ii) சனநாயகம் குறித்து, எல்லோருக்கும் உரிமைகள் கிடைக்கும் ஓர் ஆட்சிமுறை எனக் கருத்துக் கூறியவர் யார்?

(iii) மக்களால் மக்களுக்காக நடைபெறும் மக்கள் ஆட்சி என்று சனநாயகம் குறித்துக் கருத்துக் கூறிய அறிஞர் யார்?

6. மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச பிரகடனத்தில் இடம் பெற்ற கூற்று இதுவாகும். நேரடியாகவோ சுதந்திரமாகத் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதி மூலமாகவோ தனது நாட்டை ஆட்சி செய்வதில் பங்குபற்றல் எல்லோரினதும் உரிமையாகும்.

(i) எந்த விசேட உரிமையை அடிப்படையாகக் கொண்டு இங்கு குறிப்பிட்டுள்ளபடி தனது நாட்டின் ஆட்சியில் பங்குபற்றுவதற்குக் குடிமக்களுக்கு வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்றன?

(ii) இலங்கை மக்கள் சுதந்திரமாகத் தமது பிரதிநிதிகளைத் தெரிவுசெய்து நியமிப்பதற்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

(iii) பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யும்போது வாக்காளர் எவ்வாறு செயற்பட வேண்டுமென்பதை இரு காரணங்கள் தந்து விபரிக்குக.

(iv) ஜனநாயக நாட்டில் பொதுசன அபிப்பிராயத்தைக் கட்டி யெழுப்ப தொடர் ஊடகங்கள் செயற்பட வேண்டிய முறையை இரு விடயங்கள் கொண்டு விபரிக்குக.

7. (i) மனித உரிமைகளை வென்றெடுப்பதற்குப் பல்வேறு நாடு களில் புரட்சிகள் ஏற்பட்டுள்ளன. அத்தகைய சந்தர்ப்பங் கள் மூன்றினைக் குறிப்பிடுக.

(ii) ஒரு நாட்டில் ஜனநாயக ஆட்சிமுறை வெற்றி பெறுவதற்கு அரசியலில்கட்சி முறை இருந்ததன் முக்கியத்துவத்தை இரண்டு விடயங்கள் மூலம் விளக்குக.

(iii) பாராளுமன்ற சனநாயகம் வெற்றி பெறுவதற்கு

(அ) வாக்குரிமை உடையோரும்

(ஆ) வாக்குரிமைகளினால் தெரிவுசெய்து நியமிக்கப்படும் பிரதிநிதிகளும் பொறுப்புமிக்கவர்களாக ஏன் செயற்பட வேண்டும் என்பதை இரண்டு விடயங்கள் மூலம் விளக்குக.

# விடைகள்

## பகுதி - I

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1) | 3 | 2) | 3 | 3) | 2 | 4) | 1 |
| 5) | 3 | 6) | 3 | 7) | 4 | 8) | 4 |
| 9) | 3 | 10) | 3 | 11) | 1 | 12) | 1 |
| 13) | 2 | 14) | 3 | 15) | 4 | 16) | 3 |
| 17) | 1 | 18) | 1 | 19) | 2 | 20) | 2 |
| 21) | 1 | 22) | 1 | 23) | 2 | 24 | 2 |
| 25) | 4 | 26) | 4 | | | | |

## பகுதி - II

1. (i) குடியாட்சியின் பிரதான அம்சங்கள்

(அ) **சர்வசன வாக்குரிமை :**

மக்கள் தம் வாக்குகளைப் பயன்படுத்துவதன் மூலம் விரும்பிய கட்சியை அரசாங்கம் அமைக்கத் தெரிவு செய்யமுடியும்.

(ஆ) **கட்சி முறை :**

சனநாயக ஆட்சியில் பல கட்சிகள் பங்குகொள்ள வாய்ப்புண்டு. மக்களைத் தம் கொள்கைகளால் கவருகின்ற பெரும்பான்மை ஆதரவைப் பெற்ற கட்சி ஆட்சியை அமைக்கும்.

(இ) **எதிர்கட்சி முறை :**

பெரும்பான்மை ஆதரவைப் பெற்ற கட்சி ஆட்சியை அமைக்க. அடுத்தகட்சி எதிர்க்கட்சியாக அமையும். ஆட்சிபுரியும் கட்சி விடும் தவறுகளைச் சுட்டிக் காட்டக்கூடிய எதிர்கட்சி முறை சனநாயக ஆட்சி யிலே உண்டு.

(ஈ) சனநாயக ஆட்சியில் மக்களுக்கு பேச்சுரிமை, எழுத்து உரிமை, பத்திரிகைச் சுதந்திரம், பொதுசன அபிப் பிராயம் தெரிவிக்கும் உரிமை, விரும்பிய இடத்தில் வாழும் உரிமை, சங்கங்கள் அமைக்கும் உரிமை, விரும்பிய சமயத்தைக் கடைப்பிடிக்கும் உரிமை, சட்டத்தின் முன் சகலரும் சமன் எனக் கருதப்படும் உரிமை, வழங்கப்படும் உரிமை, பொருளாதார உரிமை என்பன உள்ளன.

(ii) ஆட்சியின் வெற்றிக்கு அவசியமான நிபந்தனைகள்

(அ) குடியாட்சியை அமைக்கும் கட்சி அறுதிப் பெரும்பான்மை உடையதாக இருக்கவேண்டும்.

(ஆ) அதேபோல எதிர்கட்சியும் பலம் வாய்ந்ததாக அமைதல் வேண்டும். அரசாங்க கட்சி கொண்டு வரும் மசோதாக்கள் யாவற்றையும் எதிர்ப்பது என எதிர்கட்சி இருக்கக்கூடாது. நாட்டின் விருத்திக்கு அவசியமானவற்றை எதிர்க்கட்சி ஆதரிக்க வேண்டும்.

(இ) பொதுசன அபிப்பிராயத்தை ஆட்சியாளர் எப்போதும் மதித்து நடக்கவேண்டும்.

(ஈ) எழுத்துச்சுதந்திரம், பேச்சுச்சுதந்திரம், சமயச்சுதந்திரம் என்பவற்றில் ஆட்சியாளர்கள் தலையிடக்கூடாது. அதேபோல் சனநாயக நாட்டில் வாழும் மக்களும் பிறரின் சுதந்திர உரிமைகளில் தலையிடக்கூடாது.

(உ) நீதிபரிபாலனம் சுதந்திரமுடையதாக இருக்க வேண்டும். சட்டத்தின் முன் எவரும் சமன் என்ற நிலை இருக்க வேண்டும்.

(ஊ) மக்களது அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றி நாட்டை அபிவிருத்தியடைய வைக்கும் வலுவான பொருளாதாரக் கொள்கை இருக்கவேண்டும்.

2. (i) எதிர்கட்சியிருத்தல் அவசியம். பெரும்பான்மையினரின் ஆதரவு பெற்ற கட்சி தனது விருப்பத்திற்கேற்ப குடியாட்சிக்கொவ்வாத கருமங்களைச் செய்ய முற்படும் போது எதிர்க்கட்சி அவற்றை எதிர்க்கும், மக்களுக்குப் பாதகமான மசோதாக்களை அரசாங்கம் நிறைவேற்றும் போது மசோதாவிற்கெதிராக வாக்களித்து மசோதாவை நிறைவேறாது காலதாமதம் செய்யும்.

(ii) ஆட்சியிலுள்ள நடைமுறை அரசாங்கத்தின் மீது மக்கள் நம்பிக்கை இல்லாப் பிரேரணையொன்றை ஜனாதிபதியுடன் சமர்ப்பிக்கும்போது அன்றி அக்கட்சியிலிருப்போர் எதிர்க்கட்சியுடன் சேர நேர்ந்து பலம் குன்றும்போது எதிர்கட்சி தானே ஆட்சியைப் பொறுப்பேற்றுக் கருமமாற்றலாம். அன்றியும் இன்று எதிர்க்கட்சி நாளை அரசாங்கக் கட்சியாக மக்களால் தெரிவுசெய்யவும்படலாம்.

(iii) அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டையாக இருத்தலாகாது. அரசாங்கம் தனது அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்யும்போது அவற்றைத்தடுத்து நிறுத்துதல்,

அரசின் கருமங்களை மக்களுக்கு அவ்வப்போது எடுத்துக் கூறல், அரசாங்கம் மக்களுக்கு நல்லதைச் செய்யும்போது ஆதரவு அளிப்பதும், தீங்கு விளைவிக்கும் செயல்களுக்குக் கண்டனம் தெரிவிப்பதும் இதன் முக்கிய கடமையாகும்.

3. (i) (அ) தான் விரும்பியவிடத்தில் வாழ்வது.

(ஆ) தான் விரும்பிய கருத்துக்களை வெளியிடுவது.

(இ) தான் விரும்பிய தொழிலை மேற்கொள்வது.

(ஈ) தான் விரும்பிய சமயத்தைக் கைக்கொள்வது.

(ii) (அ) குடியியல், அரசியல் உரிமைகளை ஒருவர் அனுபவிக்கும்போது, ஏனையோருக்கு இடையூறு ஏற்படாதவாறு அனுபவித்தல் வேண்டும்.

(ஆ) ஒருவர் தான் விரும்பிய கருத்தை வெளியிடுவதற்குள்ள சுதந்திரம் மற்றவருக்குமுள்ளது என்பதைப் புரிய வேண்டும்.

(இ) சட்டத்திற்கும் நீதிக்கும் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். பிறர் உடைமைகளைத் தனதாக்க முயலக் கூடாது.

(iii) (அ) எழுத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் எமக்குள்ள உரிமை, அவை மக்களிடையே இன, மத குரோதங்களை ஏற்படுத்தாது பார்த்துக்கொள்வது எமது கடமை பொறுப்புணர்ச்சியுடன் அவை வெளிவர வேண்டும்.

(ஆ) விரும்பிய வேலை செய்வதற்கு எமக்கு உரிமையுண்டு. ஆனால் குறிப்பிட்ட நேரம் வேலை செய்தல், ஒழுங்கு விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடத்தல் என்பன எமது கடமையாகும்.

4. (i) (அ) அயலவர்களைத் தமது சொந்த விருப்பப்படி வாக்களிக்க விடாமல் தடுத்தல்.

(ஆ) மற்றொருவருக்குப் பதிலாக வாக்களித்தல்.

(இ) தேர்தலின் போது வாக்களிக்காமலிருத்தல்.

(ii) (அ) பாராளுமன்றத் தேர்தல்

(ஆ) மாகாண சபைத் தேர்தல்

(இ) ஜனாதிபதித் தேர்தல்

(ஈ) பிரதேச சபைத் தேர்தல்

(உ) ஒப்பங்கோடல்

(iii) (அ) ஒருவர் தான் விரும்பினால் தேர்தலில் வேட்பாளராக நிற்கலாம்.

(ஆ) கட்சியொன்றினை உருவாக்கிக் கொள்கைகளை வகுக்கலாம்.

(iv) பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்கத் தனக்குரிய பேச்சு, எழுத்துச் சுதந்திரங்களைப் பயன்படுத்தலாம்.

(அ) பத்திரிகைகள், வானொலி

(ஆ) இலத்திரனியல் ஊடகங்களை அதற்காகப் பயன்படுத்தலாம். இவற்றில் தனது கருத்துக்களை எழுதி மக்கள் முன் வைப்பதோடு, மேடைகளில் ஏறி சொற்பொழி வாற்றி மக்களிடம் அபிப்பிராயத்தை ஏற்படுத்தலாம்.

5. (i) A – தமக்கு விருப்பமான தொழிலை மேற்கொள்ளல்.
C – தொழிலிற்கு ஏற்ற சம்பளம் பெறுதல்.
D – சொந்தமாகச் சொத்துக்களைச் சேர்த்துக்கொள்ளல்.

(ii) அறிஞர் சீலர்

(iii) ஆபிரகாம்லிங்கன்

6. (i) **சர்வசன வாக்குரிமை**

இதன்மூலம் ஒருவர் தான் விரும்பிய பிரதிநிதியைத் தெரிவுசெய்து நாட்டின் ஆட்சி அவர் சார்ந்த கட்சியிடம் ஒப்படைக்கமுடியும். அதே வாக்குரிமையைப் பயன் படுத்தி தான் விரும்பாத ஆட்சியை அடுத்துவரும் தேர்தலில் நீக்கவும் முடியும்.

(ii) (அ) பாராளுமன்றத் தேர்தல்
(ஆ) ஜனாதிபதி தேர்தல்
(இ) மாகாண சபைத் தேர்தல்
(ஈ) உள்ளூராட்சித் தேர்தல்

(iii) (அ) கட்சிக் கொள்கைகளையும், தான் தெரிவுசெய்யும் பிரதிநிதியின் தகுதியையும் அவதானித்துப் புத்திசாலித்தனத்துடன் வாக்களிக்க வேண்டும்.

(ஆ) வேட்பாளர்களின் செல்வாக்கிற்கு உட்படாது சுதந்திரமாக வாக்களிக்கவேண்டும். வாக்குச் சீட்டைத் தகுதியீனமாக்காது வாக்களிக்கவேண்டும்.

(iv) (அ) பக்கச் சார்பற்ற முறையில், உண்மையான செய்திகளை மக்களுக்கு வழங்கவேண்டும்.

(ஆ) மனிதநேயத்தைப் பேணும் வகையில், இனமத முரண்பாடுகளைத் தோற்றுவிக்காது செயற்பட வேண்டும். அவை ஆக்கபூர்வமான விமர்சனங்களாகவும் இருக்க வேண்டும்.

7. (i) (அ) அமெரிக்கச் சுதந்திரப் போர்

(ஆ) பிரான்சியப் புரட்சி

(இ) ருஷியப் புரட்சி

(ஈ) ஆங்கிலப் புரட்சி

(உ) சீனப்புரட்சி

(ii) (அ) சனநாயக ஆட்சியில் கட்சிமுறை மிக முக்கியமானது. இரு கட்சிகள் அல்லது பல கட்சிகள் இருக்கும் போது மக்களது முன்னேற்றத்திற்கான கொள்கைகள் முன் வைக்கப்படும். அக்கொள்கைகள் மூலம் உருவாகும் பொதுசன அப்பிப்பிராயம், ஆட்சிக்குரிய கட்சியைத் தேர்ந்தெடுக்கும். ஒரு கட்சி ஆளுங்கட்சியாகவும், மற்றக் கட்சி எதிர்க்கட்சியாகவும் அமையும்.


(ஆ) கட்சி முறை நிலவும் போது ஆட்சியிலமர்வதற்காக மக்கள் நலம் பேணுந்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும். ஓர் அரசு தவறும் செய்யும்போது அதனைச் சுட்டிக்காட்டுவதற்குக் கட்சிமுறை அவசியம். ஆளும் கட்சியோடு மாற்று அரசியல் கட்சிகள் இருத்தல் சனநாயக ஆட்சிக்கு இன்றியமையாததாகும்.

(iii) (அ) பாராளுமன்ற சனநாயகத்தில் வாக்குரிமை என்பதே மூலாதாரமாகும். ஒருவர் தனது வாக்குரிமையைப் பொறுப்போடும், சுதந்திரமாகவும், சரியான முறையிலும் பயன்படுத்தவேண்டும். வேட்பாளரால் கட்டாயப்படுத்தலிற்கு உள்ளாகாது, தனது சுய விருப்பப்படி தனது வாக்குரிமையை வாக்களித்தல் மூலம் நிலைநாட்ட வேண்டும்.

(ஆ) வாக்குரிமை மூலம் மக்களால் தெரிவாகும் பிரதிநிதிகள், தேர்தலின்போது மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை மறக்காது நிறைவேற்றுவதன் அவசியம் மக்கள் நலனிற்கும் தேசிய நலனிற்கும் முக்கியத்துவமளித்து பாராளுமன்றத்தில் செயற்படுதல் வேண்டும்.

அத்தியாயம்

# 5



# இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள அரசியல் யாப்பு

**1. ஒரு நாட்டின் அரசியல் யாப்பானது, அந்நாட்டின் அடிப்படைச் சட்டமாக விளங்குவதுடன், மீயுயர் சட்டமுமாகும். ஓர் அரசியல் யாப்பில் அடங்குவன யாவை?**

(அ) நாட்டின் சட்டவாக்கம், நிர்வாகம், நீதித்துறை என்பன வற்றின் அமைப்பும் செயற்படும் முறையும்

(ஆ) நிருவாக நிறுவனங்கள், அவற்றின் பணிகளும் அதிகாரங் களும்

(இ) சட்டத்தையும் ஒழுங்கையும் காப்பதற்கான ஒழுங்குகள்

(ஈ) அடிப்படை உரிமைகளும் கடமைகளும்

**2. இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்த பின்பு அறிமுகப்படுத்தப்பட்ட அரசியல் யாப்புகள் எவை?**

(அ) 1972ஆம் ஆண்டு முதலாம் குடியரசு அரசியல் யாப்பு

(ஆ) 1978 ஆம் ஆண்டு இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அரசியல் யாப்பு. இதுவே தற்போது நடைமுறையில் உள்ளது.

3. (i) **சனநாயக நாடுகளின் அரசியல் யாப்புகளிலுள்ள மனித அடிப்படை உரிமைகள் யாவை?**

மக்களின் சுதந்திரம், பாதுகாப்பு, தனியாள் உரிமைகள், பொருளாதார அரசியல் உரிமைகள்

(ii) **மனித உரிமைகள் தொடர்பான ஐ.நா.சாசனம் எப்பொழுது பிரகடனப்படுத்தப்பட்டது?**

1948ஆம் ஆண்டு அச்சாசனத்தில் ஒப்பமிட்ட அங்கத்துவ நாடுகள் அனைத்தும் அவ்வடிப்படை உரிமைகளைத் தமது நாட்டு யாப்புகளில் சேர்த்துக்கொண்டுள்ளன.

(iii) **இலங்கை மக்களுக்கான அடிப்படை உரிமைகள் என அரசியல் யாப்பில் குறிக்கப்பட்டுள்ள சுதந்திர உரிமைகள் எவை?**

சிந்தித்தல், மனச்சான்றைப் பேணல், விரும்பிய சமயம், உடல்சார்ந்த இம்சைகளிலிருந்து தன்னைக் காத்துக் கொள்ளல், எல்லா வழிகளிலும் நியாயத்தைப் பெற்றுக் கொள்ளல், காரணமின்றிக் கைது செய்யப்படுவதில் இருந்து தன்னைத் தவிர்த்துக்கொள்ளல், காரணமின்றி தடுத்து வைக்கப்படுவதில் நின்று தன்னைத் தவிர்த்துக் கொள்ளல், காரணமின்றித் தண்டனைக்குள்ளாவதிலிருந்து தன்னைத் தவிர்த்துக் கொள்ளல், பேச்சு உரிமை அமைதியாக ஒன்றுகூடுதல், தொழிற் சங்கங்கள் நிறுவல், அங்கத்துவம் பெறல், சங்கங்களை நிறுவல், தன் கலாசாரத்தையும் மொழியையும் பின்பற்றல், சட்டபூர்வமான தொழிலிலீடுபடுதல், எவ்விடத்தும் பயணம் செய்தலும், விரும்பிய விடத்தில் வாழ்தலும், நாட்டைவிட்டு வெளியேறல், மீளவும் வருதல், இன, மத, மொழி, சாதி, பால் வேறுபாடுகளிலிருந்து தன்னைத் தவிர்த்துக்கொள்ளல். ஆகிய அடிப்படைச் சுதந்திரங்கள் இலங்கை மக்களுக்குள்ளன.

4. (i) **இலங்கைப் பிரசை ஒருவரின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்படில் அவர் யாது செய்யலாம்?**

அரசியல் யாப்பின் 126 வது பிரிவின்படி உயர் நீதி மன்றத்தில் முறையீடு செய்யலாம்.

(ii) **நிர்வாகக் கருமங்களை நடைமுறைப்படுத்தும் உத்தியோகத்தர்களின் மனித உரிமைகள் மீறப்படில் ஏவரிடம் முறையீடு செய்ய வேண்டும்?**

நிருவாக விவகார ஆணையாளரிடம் (ஓம்புட்ஸ்மன்)

**5. அடிப்படை மனித உரிமைகளல்லாதவை எவை?**

(அ) பொய்யாகத் தவல்களை வெளியிடுதல், ஒருவரது கௌரவத்தைப் பாதிக்கும் விதத்தில் பேசுதல், அறிக்கைகளை வெளியிடுதல்.

(ஆ) குழப்பங்களை விளைவித்தல், சொத்துக்களை அழித்தல்.

(இ) விரும்பிய இடத்தில் குடியேறுவதற்காக அவ்விடத்தில் உள்ளவர்களையோ கூட்டத்தாரையோ விரட்டியடித்தல்.

(ஈ) இன, மத, மொழி, சாதி, பால் வேறுபாடுகளை முரண்பாடுகளைத் தோற்றுவித்தல்.

**6. இலங்கை மக்களின் வாக்குரிமை வரலாற்றினைச் சுருக்கமாக விபரிக்க.**

(அ) 1910 இல் மக்கலம் சீர்திருத்தப்படி கணிசமான கல்வித் தகைமை உள்ளவர்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.

(ஆ) 1931, டொனமூர் அரசியல் யாப்புச் சீர்திருத்தப்படி 21 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் அனைவருக்கும் சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டது.

(இ) இன்று 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் வாக்குரிமை உள்ளது.

**7. விகிதாசாரப் பிரதிநிதித்துவம் என்றால் என்ன?**

1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின்படி இலங்கைக்கான தேர்தல்களில் விகிதாசாரப் பிரதிநிதித்துவமுறை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அதன்படி

(அ) தேர்தல் மாவட்டங்களின் எல்லைகளை நிர்ணயித்தல்.

(ஆ) தெரிவு செய்யப்பட வேண்டிய அங்கத்தவர்களின் தொகையை தேர்தல் மாவட்டங்களுக்குப் பகிர்ந்தளித்தல்.

(இ) பாராளுமன்றத் தேர்தலை விகிதாசார முறைப்படி நடாத்துதல்.

(ஈ) ஒவ்வொரு அரசியல் கட்சியும் சுயேச்சைக் குழுக்களும் தேர்தல் மாவட்டங்களில் கிடைக்கும் மொத்த

வாக்குகளுக்கேற்ப விகிதாசார அடிப்படையில் அங்கத் தவர் தொகையைப் பெற்றுக்கொள்வர். இதுவே விகிதா சாரப் பிரதிநிதித்துவமாகும். முன்னர் தேர்தல் மாவட்டத் தின் தொகுதி ஒவ்வொன்றிலும் கூடுதலான வாக்குகளைப் பெறுவர். தெரிவானவர் இதன் மூலம் தேர்தல் மாவட்டத் தில் கூடுதலான வாக்குகளைப் பெறும் அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக்குழு தான் பெற்ற வாக்குகளுக்கு இணங்க விகிதாசார அடிப்படையில் பிரதிநிதிகளைப் பெறுவர்.

**8.** (i) ***தேர்தல் மாவட்டம் எவ்வாறு நிர்ணயிக்கப்படுகின்றது?***

சனாதிபதியால் நியமிக்கப்படும் ஆணைக்குழு இருபதுக்குக் குறையாத இருபத்திநான்கிற்கு மேற்படாத எண்ணிக்கையினைக் கொண்ட தேர்தல் மாவட்டங்களாக இலங்கையைப் பிரிக்கும். ஒரு நிருவாக மாவட்டத்தை அல்லது சில நிருவாக மாவட்டங்களை இணைத்துத் தேர்தல் மாவட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

உதாரணம் : யாழ்ப்பாண மாவட்டமும் கிளிநொச்சி மாவட்டமும் இணைந்து யாழ்ப்பாண தேர்தல் மாவட்டமாகக் கருதப்படுகின்றது.

(ii) ***பாராளுமன்ற அங்கத்தவர் தொகை யாது?***

பொதுத்தேர்தல் மூலம் 196 பிரதிநிதிகளும் தேசிய பட்டியல் மூலம் 29 பிரதிநிதிகளும் தெரிவாவர்.

***9.*** (i) ***இலங்கையில் சனாதிபதியாகப் போட்டியிடுபவரின் தகுதிகள் யாவை?***

(அ) 30 வயது பூர்த்தி.

(ஆ) பாராளுமன்ற அங்கத்தவராகத் தெரிவாகும் தகைமை.

(இ) 2 தடவைகளுக்கு மேல் சனாதிபதியாக இருக்காமை.

(ஈ) அரசியல் யாப்பின் 38 (2) (E) படி, சனாதிபதி பதவி யிலிருந்து நீக்கப்படாதவராக இருத்தல்.

(ii) ***சனாதிபதி எவ்வாறு தெரிவாவார்?***

(அ) அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியால் அல்லது அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சியால் பாராளு மன்றப் பிரதிநிதி ஒருவர் விதந்துரைக்கப்படுவார்.

(ஆ) நாடு முழுவதும் ஒரே தேர்தல் மாவட்டமாகக் கருதி சனாதிபதி தேர்தல் நடைபெறும்.

(இ) வேட்பாளர் மூவர் போட்டியிடும் போது வாக்காளர் 1, 2 எனத் தன் விருப்பினைத் தெரிவிக்கலாம். மூவருக்கு மேல் போட்டியிட்டால் 1, 2, 3 எனத் தன் விருப்பு வாக்குகளைத் தெரிவிக்கலாம்.

(ஈ) அளிக்கப்பட்ட வாக்குகளில் 50% மேல் பெறுபவர் சனாதிபதியாகத் தெரிவாவார்.

(உ) அவர் ஆறு வருடங்கள் சனாதிபதியாகப் பதவி வகிப்பார்.

(iii) ***சனாதிபதியின் அதிகாரங்களும் பணிகளும் யாவை?***

(அ) அனைத்து நிறைவேற்று அதிகாரங்களையும் கொண்டவர்.

(ஆ) எச்சந்தர்ப்பத்திலும் பாராளுமன்றத்தில் பங்கேற்கவோ செய்திகளை அனுப்பவோ உரித்துடையவர்.

(இ) பாராளுமன்றம் கூட்டப்படும் முதலாவது கூட்டத்திற்குத் தலைமை தாங்குவார். அரசாங்கக் கொள்கைப் பிரகடனத்தை வாசிப்பார்.

(ஈ) பிரதம மந்திரியை நியமிப்பார், அமைச்சர்களை நியமிப்பார்.

(உ) யுத்தத்தை அல்லது சமாதானத்தை பிரகடனப்படுத்துவார்.

(ஊ) அரசியல் யாப்பின்படி அமைச்சரவை கலைக்கப்படினும் தொடர்ந்து பதவி வகிப்பார்.

(எ) வெளிநாட்டுத் தூதுவர், ஆணைக்குழுத் தலைவர், முப்படைத் தளபதிகள், பொலிஸ்மா அதிபர், கணக்காய்வாளர் நாயகம், தேர்தல் ஆணையாளர், அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதம நீதியரசர், மீயுயர் நீதிமன்ற நீதிபதிகள், சட்டமா அதிபர், சொலிசிற்றர் ஜெனரல், மாகாண ஆளுநர்கள், நீதிச் சேவை ஆணைக்குழுத் தலைவர், பல்கலைக்கழக வேந்தர்கள், துணை வேந்தர்கள் ஆகியோரை நியமிக்கும் அதிகாரம் சனாதிபதிக்கே உள்ளது.

**10. சனாதிபதி வசமுள்ள நீதிமன்ற அதிகாரங்கள் எவை?**

(அ) இலங்கையில் எந்த ஒரு நீதிமன்றத்திலாயினும் குற்றவாளி ஆக்கப்பட்ட ஒரு நபரை முழுமையாக விடுதலை செய்ய, மன்னிப்பு வழங்க, தண்டனையைக் குறைக்க அவரால் முடியும்.

(ஆ) உயர்மன்ற நீதிபதிகளை நியமிக்கும் அதிகாரம் அவருக்கு உரியதே.

**11. இலங்கைப் பாராளுமன்றம் குறித்து விளக்குக.**

(அ) நமது நாட்டின் மிகவுயர்ந்த நிறுவனம்.

(ஆ) நாட்டை நிருவகிப்பதற்கான சட்டங்களைப் பாராளு மன்றமே இயற்றுகிறது.

(இ) மக்களால் தெரிவு செய்யப்பட்ட 196 அங்கத்தவர்களையும், தேசியப்பட்டியல் மூலம் நியமிக்கப்பட்ட 29 அங்கத்தவர் களையும் சேர்த்துமொத்தமாக 225 அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது.

(ஈ) அரசியல் யாப்பு சார்ந்த கருமங்கள் தொடர்பான முழுமை யான அதிகாரம் பாராளுமன்றத்திடமே உள்ளது.

(உ) சபாநாயகர், பாராளுமன்றச் செயலாளர் நாயகம் பிரதிநிதிகள் அடங்குவர்.

(ஊ) பாராளுமன்றத்தில் ஆளுங்கட்சியினர், எதிர்க்கட்சியினர் என இரு பகுதியினர் இருப்பார்கள்.

(எ) சட்ட மூலங்கள் முதலாம் வாசிப்பு, இரண்டாம் வாசிப்பு, மூன்றாம் வாசிப்பு என்ற படிநிலைகளுக்குள்ளாகி, விவாதிக்கப்பட்டு பெரும்பான்மை வாக்குகளுடன் சட்ட மாகும்.

**12.** (i) **அமைச்சரவை எனப்படுவது யாது?**

பிரதமரும் ஏனைய அமைச்சர்களும் இணைந்த சபை யாகும்.

(ii) **அமைச்சரவையின் தலைவர் யார்?**

சனாதிபதி ஆவார்.

**13.** (i) **இலங்கையின் பண்டைய பிரதேச நிருவாகம் எவ்வா றிருந்தது?**

(அ) மன்னர்கள் காலத்தில் இலங்கை உத்தரதேசம், புரஸ்திம தேசம், தக்கின தேசம், பச்சிம தேசம் என நான்காக வகுக்கப்பட்டு நிருவகிக்கப்பட்டது.

(ஆ) போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்தில் திசாவ, திசாவனி என்ற பெயர்களில் பிரதேச நிருவாகம் நில வியது. கேரளை, பற்று எனவும் அழைக்கப்பட்டன.

(இ) பிரித்தானியர் காலத்தில் ஐந்து மாகாணங்களாகவும் 19 மாவட்டங்களாகவும் பிரித்து நிருவகிக்கப்பட்டது.

(ii) **இலங்கையின் புதிய நிர்வாகம் எவ்வாறு உள்ளது?**

(அ) இன்று 25 மாவட்டங்களுள்ளன. ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு அரசாங்க அதிபர் உள்ளார். அவரை மாவட்டச் செயலாளர் என்பர்.

(ஆ) மாவட்டங்கள் பிரதேசச் செயலாளர் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, பிரதேசச் செயலாளர்களால் நிருவகிக் கப்படுகின்றன.

(இ) பிரதேச செயலாளர் பிரிவுகள் கிராமசேவையாளர் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு கிராம சேவையாளரால் நிருவகிக்கப்படுகின்றன.

(ஈ) 1987இல் அரசியல் யாப்பின் 13ஆவது திருத்தப்படி மாகாணசபைகள் எட்டு அமைக்கப்பட்டுள்ளன. வடக்கு, கிழக்கும் இணைந்து ஒரு மாகாணமாகக் கருதப்படுகின்றன. ஒவ்வொரு மாகாணசபைக்கும் ஒவ்வொரு ஆளுநர் சனாதிபதியால் நியமிக்கப் பட்டுள்ளார்.

(உ) ஒவ்வொரு மாகாணசபையிலும் தேர்தல் மூலம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருப் பர். முதலமைச்சர், மேலும் நான்கு அமைச்சர்கள் அப் பிரதிநிதிகளிலிருந்து தெரிவாவர் மாகாண சபையின் நிருவாகக்காலம் 5 வருடங்களாகும்.

(ஊ) இவற்றை உள்ளூராட்சி சபைகள் (மாநகர சபை, பிரதேச சபை) என்பனவும் உள்ளன.

**14.** (i) **இலங்கையிலுள்ள மாநகர சபைகள் எவை?**

கொழும்பு, கண்டி, காலி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வதுளை, இரத்தினபுரி, நீர்கொழும்பு, தெகிவளை- கல்கிசை, மொரட்டுவை, கோட்டை

(ii) **மாநகரசபைக்கு அடுத்த உள்ளூராட்சி சபை யாது?**

நகரசபை

(iii) **மாநகர சபையினதும் நகர சபையினதும் பணிகள் யாவை?**

(அ) வீதிகள் அமைத்தல், பராமரித்தல்.

(ஆ) நீர்விநியோகம் செய்தல்.

(இ) சுகாதார சேவைகள் வழங்கல்.

(ஈ) சுகநலன்களைப் பேணும் நடவடிக்கைகள்.

(உ) சந்தைகளை நிறுவல், பேணல்.

(ஊ) நூல்நிலையங்களை தாபித்து நடாத்துதல்.

(எ) கழிவுகளை அகற்றல்.

(iv) **பிரதேச சபைகளின் பணிகள் எவை?**

மேலே கூறியவற்றோடு சமய அடிப்படையான வைபவங்களை ஒழுங்குபடுத்துதல், சமயக்கல்வி புகட்டல், இலக்கியம், கலாசாரம் சம்பந்தமான விழாக்களை நடாத்தல், வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தல், விளையாட்டுத் துறையை மேம்படுத்துதல் ஆகியனவும் அடங்கும்.

**15. இலங்கையின் நீதித்துறை குறித்து விளக்குக.**

(அ) நீதித்துறையானது ஒரு சுதந்திர அமைப்பாகும்.

(ஆ) கூட்டத்தை மீறியோருக்குத் தண்டனை வழங்கல் அமைதியானதும் நீதியானதுமான ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்பல் என்பன நீதித்துறையிலுள்ள பணிகள்

**16. நீதித்துறையின் ஒழுங்கமைப்பு யாது?**

(அ) இலங்கைக் குடியரசின் அதி மீயுயர் நீதிமன்றம்

(ஆ) இலங்கைக் குடியரசின் மேன்முறையீட்டு நீதிமன்றம்.

(இ) முதற்கட்ட நீதிமன்றங்கள்

(1) உயர் நீதிமன்றம் (2) மஜிஸ்ரேட் நீதிமன்றம்

(3) மாவட்ட நீதிமன்றம் (4) குடும்ப நீதி மன்றம்

(5) முதனிலை நீதிமன்றம்

**17. இலங்கைக் குடியரசின் அதி மீயுயர் நீதிமன்றத்தின் அதிகாரங்கள் எவை?**

(அ) அரசியல் யாப்பிற்கு இணங்க சட்ட மூலங்கள் உள்ளவை என நோக்கல்.

(ஆ) அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தல்.

(இ) இறுதி மேன்முறையீடு.

(ஈ) தேர்தல் முறையீட்டு மனுக்களை விசாரித்தல்.

(உ) பராளுமன்றச் சிறப்புரிமைகள் மீறப்படுவது தொடர்பான அதிகாரங்கள்.

(ஊ) பாராளுமன்றத்தால் சட்டபூர்வமாக ஒப்படைக்கப்பட்ட விடயங்கள்.

**18.** (i) **மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அதிகாரங்கள் எவை?**

(அ) முதற் கட்ட நீதிமன்றங்களில் வழங்கப்பட்ட தீர்ப்பு தனது உரிமைகளுக்குத் தீங்கு விளைவிக்கின்றதெனக் கருதி மேன்முறையீட்டு நீதிமன்றம் விசாரணை செய்யும்.

(ஆ) சட்டத்திற்கு மாறான விதத்தில் கருத்து வைக்கப் பட்டுள்ள நபரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்து மாறு ஆட்கொணர்வு ஆணையை (ஹேபியஸ் கோபஸ்) பிறக்கும் அதிகாரம் மேன்முறையீட்டு நீதிமன்றிற்கு உண்டு.

(இ) தடை உத்தரவு விதித்தல், தேர்தல் முறையீட்டு மனுக் களை விசாரித்தல், முதற்கட்ட நீதிமன்றம் விசாரித்த வழக்கு அறிக்கைகளைச் சமர்ப்பிக்குமாறு கட்டளை யிடல் ஆகிய அதிகாரங்களுமுள்ளன.

(ii) **சாதாரண வழக்குகளை எந்த நீதிமன்றங்கள் விசாரிக் கின்றன?**

முதற்கட்ட நீதிமன்றங்களான குடும்ப நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், மஜிஸ்ரேட் நீதிமன்றம், முதற்கட்ட நீதிமன்றங் களில் அதிகாரம் கூடியது உயர் நீதிமன்றமாகும்.

# அரசியல் யாப்பு / நீதிமன்றங்கள் வினாவிடைகள்

**1. டொனமூர் யாப்புமுறைச் சீர்திருத்தங்களினால் புகுத்தப்பட்ட மாற்றம்பின்வருவனவற்றுள் யாது?**

1) சர்வசன வாக்குரிமை
2) பாராளுமன்ற அரசாங்க முறை அறிமுகப்படுத்தப்பட்டமை.
3) நிருவாகக்குழு முறைமை புகுத்தப்பட்டமை.
4) பிரதேசவாரிப் பிரதிநிதித்துவ முறை புகுத்தப்படாமை.

**2. தற்போதைய இலங்கை அரசியல் யாப்புக்கு இணங்க, அமைச்சரவை சம்பந்தமான பின்வரும் கூற்றுகளுள் சரியானது எது?**

1) சனாதிபதியே அமைச்சரவையின் தலைவராவார்.
2) எல்லா அமைச்சர்களும் அமைச்சரவையில் இடம்பெறுவார்.
3) மாகாண முதல் அமைச்சர்கள் யாவரும் அமைச்சரவையில் இடம்பெறுவர்.
4) அமைச்சரவைக்கு அமைச்சர்களை நியமிப்பது பிரதம அமைச்சரேயாவர்.

**3. 1931 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்த டொனமூர் அரசியல் யாப்பு அரைகுறைப் பொறுப்பை வழங்கிய யாப்பு என்று கருதப்படுவது ஏன்?**

1) முக்கியமான அமைச்சுக்கள் பிரித்தானியர்களின் கீழ் செயற்பட்டமையினால்ஆகும்.
2) அது சர்வசன வாக்குரிமையை வழங்கியமையினாலாகும்.
3) நிர்வாகக் குழுக்களினூடாக நிருவாகம் செயற்பட்டமையினாலாகும்.
4) தேசியத் தலைவர்கள் நிறைவேற்று அதிகாரத்தைப் பெறவில்லை என்பதனால் ஆகும்.

**4. சனநாயக ஆட்சி முறை சிறப்பாகச் செயற்படுவதற்கு பின்வருவனவற்றுள் எது தடையாக அமையக் கூடியதாகும்?**

1) எதிரான கருத்துக்களைச் செவிமடுத்தல்.
2) அமைச்சரவையைச் சேர்ந்த அமைச்சர்கள் கூட்டுப் பொறுப்பற்றவர்களாக இருத்தல்.

3) பொறுப்பற்ற முறையில் கண்டனம் செய்வதைத் தவிர்த்தல்.
4) பெரும்பான்மையினரின் கருத்துக்களுக்கமைய ஆட்சி செய்தல்.

**5. கீழ்வரும் விடயங்களில் சனநாயக ஆட்சிமுறையொன்றுக்கு அத்தியாவசியமான இலட்சணம் எது?**

1) நிறைவேற்று அதிகாரத்துடனான ஜனாதிபதி ஒருவர் இருத்தல்.
2) மந்திரி சபையின் (கபினற்) கூட்டுப் பொறுப்புடைமை.
3) அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை ஒன்றுக்கு மட்டுப்படுத்தப்படல்.
4) அபிப்பிராயத்தை வெளிப்படுத்தக் கூடிய தேர்தல் முறை இருத்தல்.

**6. பின்வரும் எச்சந்தர்ப்பங்களில் இலங்கை மக்கள் எல்லோரும் ஒரு தேர்தல் தொகுதியின் வாக்காளராகச் செயற்படுவர் என்பதைக் குறிக்கும் விடையைத் தெரிவுசெய்க.**

(A) பாராளுமன்றத் தேர்தலின் போது
(B) மாகாண சபைத் தேர்தலின் போது
(C) ஜனாதிபதித் தேர்தலின் பொது
(D) குடியொப்பத்தை மேற்கொள்ளும் போது

1) A யும் B யும் 2) B யும் C யும்
3) C யும் D யும் 4) D யும் A யும்

**7. பின்வருவோருள் எவரிடம் அரசாங்கச் சேவையாளருக்கு ஏற்படும் அநீதிகள் தொடர்பாக மேன்முறையீடு செய்யமுடியும்.**

1) நீதி அமைச்சர் 2) தேர்தல் ஆணையாளர்
3) ஓம்புட்சுமன் 4) பிரதம நீதியரசர்

**8. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசால் இறுதி இறைமை பின்வருவோரில் யாரிடம் காணப்படுகின்றது?**

1) சனாதிபதி 2) அமைச்சரவை
3) பிரதமமந்திரி 4) சட்டமா அதிபர்

**9. ஒரு சனநாயக சமூகம் சிறப்புடன் செயற்பட குடிமக்கள் என்ற வகையில் நீங்கள் பங்களிப்புச் செய்யக்கூடிய மிகச் சிறந்த முறை**

1) உரிமைகளுக்காகப் போராடுதல்.
2) உரிமைகளை அனுபவிப்பதுடன் கடமைகளையும் நிறைவேற்றல்.

3) நடைமுறையிலுள்ள அரசாங்கத்தின் எல்லா நடவடிக்கைகளுக்கும் உதவுதல்.
4) எதிர்க்கட்சிகளுடன் இணைந்து அரசாங்கத்தை விமர்சித்தல்.

**10. பாராளுமன்றக் கருமங்களின் ஒழுங்கமைப்பு அவற்றை நடைமுறைப்படுத்தல் ஆகிய பணிகளுக்குப் பொறுப்பானவர்.**

1) சபாநாயகர் 2) சபை முதல்வர்
3) செயலாளர் நாயகம் 4) பிரதமமந்திரி

**11. பின்வருவனவற்றுள் மசோதா ஒன்று பாராளுமன்றத்தில் சட்டமாக்கப்படுவது தொடர்பான திருத்தமான கூற்று எது?**

1) செயற்குழு நிலையின் பின்னர் சபாநாயகரிடம் கையொப்பத்தைப் பெறுதல்.
2) மூன்றாம் வாசிப்பின் பின்னர் சட்டமா அதிபரிடம் முன்வைத்தல்.
3) முதலாம், இரண்டாம், மூன்றாம் வாசிப்பு நிறைவேறிய பின்னர் சபாநாயகரிடம் கையொப்பத்தைப் பெறுதல்.
4) மூன்றாம் வாசிப்பின் பின்னர் அரசியல் யாப்புக்கு ஏற்றது என மீயுயர் நீதிமன்றத்தின் தீர்ப்பைப் பெறுதல்.

**12. இலங்கை அரசியல் யாப்புத் திருத்தத்தை ஏற்றுக்கொள்வதற்குப் பெறவேண்டிய பாராளுமன்ற மொத்த உறுப்பினர்களின் ஆகக் குறைந்தளவு வாக்குகளின் எண்ணிக்கை எது?**

1) மூன்றிலொன்று 2) இரண்டிலொன்று
3) மூன்றிலிரண்டு 4) ஆறில் ஐந்து

**13. கிராமிய மட்டத்தில் இரு பகுதியினருக்குமிடையில் ஏற்படும் சிறு தகராறுகளைத் தீர்த்துக்கொள்ளுவதற்கு அவர்கள் முதலில் அதனை முன்வைக்க வேண்டியது.**

1) பொலிசாரிடம் 2) பிரதேச சபையிடம்
3) இணக்க சபையிடம் 4) பிரதேசச் செயலாளரிடம்

**14. நாட்டுப் பிரசை ஒருவரின் அடிப்படை உரிமை மீறப்பட்டிருப்பின் அது தொடர்பாக அவர் முறையீடு செய்யவேண்டிய நீதிமன்றம்.**

1) மீயுயர் நீதிமன்றம் 2) மேன்முறையீட்டுநீதிமன்றம்
3) மேல் நீதிமன்றம் 4) மாவட்ட நீதிமன்றம்

**15. 1978ம் ஆண்டு அரசியல் யாப்பின்படி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கு உரித்தற்ற பணி பின்வருவனவற்றுள் எது?**

1) பிரதம மந்திரியை நியமித்தல்.
2) பிரதம நீதியரசை நியமித்தல்.
3) அமைச்சர்களை நியமித்தல்.
4) சபாநாயகரை நியமித்தல்.

**16. யாதாயினும் ஒரு நாட்டில் ஜனநாயக ஆட்சி வெற்றியடைவதற்கான மிகச்சிறந்த காரணமாக அமைவது பின்வருவனவற்றுள் எது?**

1) பலமுள்ள இருகட்சிகள் முறை இருத்தல்.
2) உரிய காலத்தில் தேர்தல் நடாத்துதல்.
3) நடுநிலையான வெளிநாட்டுக் கொள்கையைப் பின்பற்றுதல்.
4) மக்களின் பொருளாதார சமூக கலாசார வேற்றுமைகள் மிகக் குறைந்த அளவில் இருத்தல்.

**17. பின்வரும் கூற்றுகளில் ''மக்களின் இறைமை'' என்ற கருத்தை திருத்தமாகக் காட்டுவது.**

1) வாக்குரிமை பலத்தினால் விரும்பிய ஆட்சியாளரை நியமிக்கவும் நீக்கவும் உள்ள உரிமை.
2) தாம் விரும்பும் அரசியல் கட்சியுடன் இணைந்து செயற்படும் உரிமை.
3) ஆட்சியிலுள்ள கட்சியின் நடவடிக்கைகளை பகிரங்கமாக விமர்சிப்பதற்குரிய உரிமை.
4) அரசியல் யாப்பில் வழங்கப்பட்டுள்ள அடிப்படை மனித உரிமைகளை அனுபவிப்பதற்கான உரிமை.

**18.** A – **உயர் நீதிமன்றம்**
B – **மீயுயர் நீதிமன்றம்**
C – **மாவட்ட நீதிமன்றம்**
D – **மேன் முறையீட்டு நீதிமன்றம்**

**மேற்குறித்த நீதிமன்றங்களை அதிகாரங்களின் அடியாக கீழிருந்து ஒழுங்குபடுத்துக.**

1) ABCD 2) CADB 3) DCBA 4) CABD

**19. பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சட்ட மூலம் ஒன்று அரசியல் யாப்புக்கு இயைபுடையதாவென முடிவு செய்வது.**

1) மஜிஸ்ரேட் நீதிமன்றம் 2) உயர் நீதிமன்றம்
3) மீயுயர் நீதிமன்றம் 4) மேன்முறையீட்டு நீதிமன்றம்

20. ஹேபியஸ் கோபஸ் பிறப்பிக்கும் அதிகாரம் எந்த நீதிமன்றத்திற்கு உள்ளது?

1) மீயுயர் நீதிமன்றம்
2) மேன் முறையீட்டு நீதிமன்றம்
3) உயர் நீதிமன்றம்
4) மஜிஸ்ரேட் நீதிமன்றம்

21. நீதிச்சேவை ஆணைக்குவின் அதிகாரம்.

1) பிரதம நீதியரசரை நியமித்தல்.
2) மீயுயர் நீதியரசர்களை நியமித்தல்.
3) யூரி சபையில்லாது நீதிமன்றமாகச் செயற்படுதல்.
4) நீதிபதிகளை பதவி நீக்கம் செய்தல்.

22. சாதாரண பிரசையொருவனுக்குள்ள உரிமையல்லாதது.

1) நீதிமன்ற ஆணையின்றி எவரேனும் ஒருவரது இல்லத்தைச் சோதனையிடும்அதிகாரம் பொலிசாருக்குக் கிடையாது.
2) எழுத்து மூலமான ஒரு குற்றச்சாட்டின்றி எவரையேனும் கைதுசெய்யமுடியாது.
3) சட்டபூர்வமான அனுமதியின்றி எவரேனும் தடுத்து வைக்கப்பட்டிருப்பின் ஆட்கொணர்வு சட்டத்தின் மூலம் அவரை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறுகோரிக்கை விடுதல்.
4) சந்தேகநபர் பொலிசாரால் துன்புறுத்தப்படலாம்.

## பகுதி II

1. (i) விகிதாசரப் பிரதிநிதித்துவம் என்றால் என்ன?

(ii) விகிதாசாரப் பிரதிநிதித்துவம் மூலம் நாட்டின் சனாதிபதி எவ்வாறு தெரிவாவர்?

(iii) பாராளுமன்றம் சார்ந்த சனாதிப்பதியின் உரிமைகள் இரண்டினைக் கூறுக.

(iv) சனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்கள் மூன்றினைக் கூறுக.

(v) சனாதிபதியால் வழங்கப்படும் நியமனங்கள் நான்கினைக் கூறுக.

2. (i) பாராளுமன்ற அங்கத்தவர்கள் எத்தனை பேர்? அவர்கள் எவ்வாறு தெரிவாவர்?

(ii) பாராளுமன்றத்தில் சட்டங்கள் எவ்வாறு நிறைவேற்றப் படுகின்றன.

(iii) பாராளுமன்றத்தில் இருக்கைகள் எவ்வாறு ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளன?

3. (i) மாகாணசபை நிர்வாக ஒழுங்கு யாது?

(ii) மாவட்டங்களின் நிர்வாக ஒழுங்கு முறை யாது?

(iii) உள்ளூராட்சி நிர்வாக ஒழுங்கு முறை யாது?

4. (i) மீயுயர் நீதிமன்றத்தின் அதிகாரங்கள் ஐந்தினைக் கூறுக.

(ii) மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அதிகாரங்கள் மூன்றினைக் கூறுக.

(iii) முதற்கட்ட நீதிமன்றங்கள் எவை?

5. (i) மக்கள் ஏன் சட்டத்திற்குக் கீழ்படிகின்றார்கள் என்பதை இரு உதாரணங்கள்மூலம் விளக்குக.

(ii) பின்வரும் ''அ'' பகுதியில் இடம்பெறும் நிர்வாகப் பிரிவுகளோடு ''ஆ'' பகுதியில் இடம்பெறும் நிர்வாகம் சார்ந்த பதவிகளை இணைக்க.

| "அ" பகுதி | "ஆ" பகுதி |
|---|---|
| 1. கிராம உத்தியோகத்தர் பிரிவு | மாவட்டச் செயலாளர் |
| 2. பிரதேசச் செயலாளர் பிரிவு | ஆளுநர் |
| 3. நிருவாக மாவட்டம் | கிராம உத்தியோகத்தர் |
| | பிரதேச செயலாளர் |
| | பிரதேச வருமான உத்தியோகத்தர் |

# விடைகள்

## பகுதி - I

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1) | 1 | 2) | 1 | 3) | 1 | 4) | 2 |
| 5) | 2 | 6) | 3 | 7) | 1 | 8) | 1 |
| 9) | 2 | 10) | 3 | 11) | 3 | 12) | 3 |
| 13) | 3 | 14) | 1 | 15) | 4 | 16) | 1 |
| 17) | 1 | 18) | 3 | 19) | 3 | 20) | 2 |
| 21) | 3 | 22) | 4 | | | | |

## பகுதி - II

1. (i) ஒவ்வொரு அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் தேர்தல் மாவட்டங்களில் கிடைக்கும் மொத்த வாக்கு களுக்கேற்ப விகிதாசார அடிப்படையில் அங்கத்துவத் தொகையைப் பெற்றுக்கொள்வர். இதுவே விகிதாசாரப் பிரதிநிதித்துவமாகும். முன்பு ஒவ்வொரு தேர்தல் தொகுதி யிலும் பெரும்பான்மை வாக்கினைப் பெறுவோர் பிரதிநிதி களாவர். இவ்விகிதாசார முறையில் தேர்தல் மாவட்டம் முழுவதிலும் அக்கட்சி அல்லது சுயேச்சைக் குழு பெறுகின்ற மொத்த வாக்குகளின் விகிதாசாரப்படி பிரதிநிதிகள் தெரிவாவர்.

(ii) தகுதியான அபேட்சகர் சனாதிபதி பதவிக்குப் போட்டி யிடுவார். நாடு முழுவதும் ஒரே தேர்தல் மாவட்டமாகக் கருதி இத்தேர்தல் நிகழும். வேட்பாளர் மூவர் போட்டியிடும்போது வாக்காளர் ஒருவர் தனது விருப்பினை முறையே 1, 2 என வெளிப்படுத்துவார். மூன்றுக்கு மேற்பட்ட வேட்பாளர் போட்டியிடும்போது வாக்காளர் 1, 2, 3 என்ற அடிப்படையில் தனது விருப்பினை வெளிப்படுத்துவார். அளிக்கப்பட்ட செல்லுபடியான வாக்குகளின் எண்ணிக்கையில் அரை வாசிக்கு மேற்பட்ட எண்ணிக்கையுடைய வாக்குகளைப் பெறும் வேட்பாளர் சனாதிபதியாகத் தெரிவு செய்யப் படுவார். எந்த வேட்பாளரும் அரைவாசிக்கு மேற்பட்ட வாக்குகளைப் பெறாதவிடத்து மூன்றாவது இடத்தைப் பெற்ற வேட்பாளர் போட்டியில் இருந்து நீக்கப்பட்டு அவருக்கு அளிக்கப்பட்ட வாக்குச் சீட்டுகளில் இரண்டாம்

விருப்பு வாக்குகள் யாருக்கு வழங்கப்பட்டது எனக் கணக்கிட்டு அவை 1ஆம் 2ஆம் இடத்தைப் பெற்றவர் களின் வாக்குகளோடு கூட்டப்படும் சனாதிபதி தேர்வு நிகழும் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றவரே சனாதிபதி ஆவார். அவர் பிரதம நீதியரசர் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து பதவி ஏற்பார்.

(iii) (அ) பாராளுமன்றக் கூட்டத்தொடர் ஆரம்பிக்கையில் அரசாங்கக் கொள்கைகளை வெளியிடுதல்.

(ஆ) பாராளுமன்றம் கூட்டப்படும் முதலாவது கூட்டத்திற்கு தலைமை தாங்குதல்.

(iv) (அ) பிரதம மந்திரி, அமைச்சர்கள் ஆகியோரை நியமித்து, அமைச்சரவையின் தலைவராகக் கடமையாற்றல்.

(ஆ) நாட்டில் யுத்தத்தைப் பிரகடனப்படுத்தவும், சமாதானத்தைப் பிரகடனப்படுத்தவும் அதிகாரம் அவருக்குள்ளது.

(v) (அ) வெளிநாட்டுத் தூதுவர்கள்

(ஆ) முப்படைத் தளபதிகள், பொலீஸ்மா அதிபர்

(இ) கணக்காய்வாளர் நாயகம், தேர்தல் ஆணையாளர்

(ஈ) பிரதம நீதியரசர், சட்டமா அதிபர்

2. (i) பாராளுமன்ற அங்கத்தவர் மொத்தம் 225 தேர்தல் மூலம் 196 அங்கத்தவர்களும், தேசிய பட்டியலின் மூலம் 29 அங்கத்தவர் களும் தெரிவாவார்.

(ii) (அ) ஒரு அமைச்சரால் அல்லது பிரதி அமைச்சரால் அல்லது ஒரு பாராளுமன்ற அங்கத்தவரால் சட்டம் மூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். அதனை முதலாம் வாசிப்பு என்பர்.

(ஆ) சட்டமூலத்தின் பொதுப் பண்புகள், கோட்பாடுகள் தொடர்பான விவாதம் இடம்பெறும் மாற்றங்கள் விதந்துரைக்கப்படும். அதன்படி மேற்கொள்ளும் இதனை மசோதாவின் இரண்டாம் வாசிப்பு என்பர்.

(இ) திருத்தங்களுடனான சட்ட மூலம் பெரும்பான்மை வாக்குப் பலத்துடன் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டு, சபாநாயகரின் ஒப்பந்தத்திற்கு அனுப்பப்படும். இதனையே மசோதாவின் மூன்றாம் வாசிப்பு என்பர்.

(iii) ஆளுங்கட்சிப் பிரதிநிதிகள் ஒரு புறத்திலும் எதிர்க்கட்சியினர் எதிர்ப்புறத்திலும் அமர இருக்கைகள் ஒதுக்கப்பட்டிருக்கும். சபாநாயகர் இரு சாராருக்கும் மத்தியில் பிரத்தியேகமாக இடப்பட்டிருக்கும் ஓர் இருக்கையில் அமர்ந்திருப்பார்.

3. (i) அரசியல் யாப்பின் 13ஆவது திருத்தப்படி இலங்கையில் 8 மாகாணசபைகள் அமைக்கப்பட்டன. வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இரண்டும் இணைந்து ஒரே மாகாணசபை நிறுவப்பட்டுள்ளது. மாகாணசபைக்கு சனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஒரு ஆளுநர் இருப்பார். தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் இருப்பர். அதிக பிரதிநிதிகளைக் கொண்ட கட்சியின் தலைவர் முதலமைச்சராகவும், அவரைத் தவிர மேலும் நான்கு அமைச்சர்களும் நியமிக்கப்படுவர். மாகாணசபையின் நிர்வாகக்காலம் 5 வருடங்களாகும்.

(ii) மாவட்டங்கள் 25 உள்ளன. ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் அரசாங்க அதிபர் உயர் நிருவாகியாகவுள்ளார். அவரின் கீழ் பிரதேசச் செயலாளர் பிரிவுகளும், அவர்களின் கீழ் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் உள்ளன. அவர்கள் கிராமிய மட்டத்திலிருந்து மாவட்ட மட்டம் வரை நிர்வகிப்பர்.

(iii) உள்ளூராட்சி நிர்வாக ஒழுங்கில் மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள் என நிர்வாக அலகுகள் உள்ளன. இலங்கையில் 14 மாநகரசபைகளும், 37 நகர சபைகளும், நூற்றுக்கணக்கான பிரதேச சபைகளும் உள்ளன. அவை தத்தமது ஆள்புலங்களின் போக்குவரத்து, நீர் விநியோகம், சுகாதாரம், சந்தைகள் முதலானவற்றினைப் பேணிப் பராமரித்து வருகின்றன.

4. (i) (அ) சட்டமூலங்கள், அரசியல் யாப்புடன் ஒத்திசைவானவையா என ஆராய்தல்

(ஆ) மனித அடிப்படை உரிமைகளைப் பேணல்.

(இ) இறுதி மேன்முறையீட்டு நீதிமன்றாக இயங்கல்.

(ஈ) தேர்தல் முறையீட்டு மனுக்களை விசாரித்தல்.

(உ) பாராளுமன்றச் சிறப்புரிமைகள் மீறப்படுவது தொடர்பான அதிகாரங்கள்.

(ii) (அ) முதற்கட்ட நீதிமன்றத் தீர்ப்புகளில் திருப்தி காணாது முறையிடும் வழக்குகளை மறு பரிசீலனை செய்தல்.

(ஆ) ஆட்கொணர்வு ஆணையை (ஹேபியஸ் கோபஸ்) பிறப்பிக்கும் அதிகாரம்

(இ) தடையுத்தரவு விதித்தல், தேர்தல் முறையீட்டு மனுக் களை விசாரித்தல்.

(iii) உயர் நீதிமன்றம், மஜிஸ்ரேட் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், குடும்ப நீதிமன்றம்

5\. (i) (அ) சட்டத்திற்குக் கீழ்படியும் போது அவர்களுக்குப் பூரண பாதுகாப்புக் கிடைக்கிறது.

(ஆ) அவர்களது அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படாது பேணப்படுகின்றது.

(ii) (அ) கிராம உத்தியோகத்தர் பிரிவு – கிராம உத்தியோகத்தர்

(ஆ) பிரதேசச் செயலாளர் பிரிவு – பிரதேசச் செயலாளர்

(இ) நிர்வாக மாவட்டம் – மாவட்டச் செயலாளர்


(ஈ) மாகாணம் – ஆளுநர்

# சமூகக்கல்வியும் வரலாறும் 1
# கடந்தகால வினாக்கள்

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1 தொடக்கம் 40 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் (1), (2), (3), (4) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியானது அல்லது மிகப் பொருத்தமானது என நீர் கருதும் ஒரு விடையைத் தெரிவுசெய்க.

தரப்பட்டுள்ள இலங்கைத் தேசப்படத்தைப் பயன்படுத்தி 1 தொடக்கம் 5 வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.




***1.** 'x' எழுத்தினால் காட்டப்பட்டுள்ள இலங்கையின் அழகுமிக்க கடற்கரையோரம் அமைந்துள்ள இடம்*

1) பாசிக்குடா　　2) நிலாவெளி

3) பொத்துவில்　　4) புல்மோட்டை

2. தேசப்படத்தில் கொழும்பிலிருந்த திருகோணமலை வரையான புகையிரதப் பாதை காட்டப்பட்டுள்ளது. இதில் அ, ஆ, இ, ஈ என்பவற்றின் மூலம் ஒழுங்குவரிசைப்படி குறிப்பிடப்பட்டுள்ள புகையிரதச் சந்திகள்

1) ராகம, மாகோ, பொல்காவலை, கல்ஓயா
2) பொல்காவலை, ராகம, மாகோ, கல்ஓயா
3) ராகம, பொல்காவலை, மாகோ, கல்ஓயா
4) பொல்காவலை, ராகம, கல்ஓயா, மாகோ

3. முறிகோடுகளினால் வட்டமிடப்பட்ட பிரதேசம் துரித மகாவலி அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் அபிவிருத்தியடைந்த வலயமாகும். இதில் Y எழுத்தினால் குறிப்பிடப்பட்டுள்ள நகரம்

1) தெஹிஅத்தகண்டிய 2) எலஹர
3) பக்கமுண 4) கல்னேவ


4. 'Z' எழுத்தினால் காட்டப்படுவது

1) மகியங்கனை 2) கிராந்துருகோட்டை
3) திம்பலாகலை 4) அரலகன்வில

5. அனல் மின்நிலையத்தை அமைப்பதற்கு ஆலோசனை முன்வைக்கப்பட்டபோதும் இப்போது சச்சரவுக்குக் காரணமாயுள்ள இடமான நுரைச்சோலையின் அமைவிடத்தைக் காட்டும் எழுத்து

1) P 2) Q 3) R 4) S

தரப்பட்டுள்ள உலகப் படத்தைப் பயன்படுத்தி 6–10 வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.



**6. அண்மையில் அழிவுக்குள்ளாக்கப்பட்ட உலகப் பாரம்பரியம் எனக் கருதப்படும் பாமியன் புத்தர் சிலைகள் இருந்த நாட்டைக் குறிப்பிடும் எழுத்து எது?**

1) P  2) Q  3) R  4) S

**7. பயங்கரவாதிகளின் கடுந்தாக்குதலுக்கு உட்பட்ட உலக வர்த்தக நிலையம் அமைந்த நகரத்தை திருத்தமாகக் காட்டும் எழுத்து எது?**

1) K  2) L  3) M  4) N

**8. அண்மையில் கைத்தொழில் மயமான (N.I.C<sup>s</sup>) இரு நாடுகளைக் குறிப்பிடும் விடை எது?**

1) Aயும் Bயும்  2) B உம் C உம்
3) Cயும் Dயும்  4) Aயும் Dயும்

**9. 'E' எழுத்தினாற் குறிப்பிடப்படுவது?**

1) கஸ்பியன் கடல்  2) கருங்கடல்
3) ஏரல் கடல்  4) சாக்கடல்

**10. மேற்கிந்தியதீவுக் கூட்டங்களுக்குரிய தீவுத் தொகுதியைக் குறித்துக் காட்டும் எழுத்து எது?**

1) F  2) G  3) H  4) J

**11. புராதன இலங்கையின் வைத்தியத் தொழினுட்பவியல் முன்னேற்றத்தினை எடுத்துக் காட்டும் காரணி**

1) தொல்பொருள் அகழ்வுகளில் புராதன வைத்தியசாலைகளின் சிதைவுகளைக் கண்டுபிடித்தமை.
2) தொல்பொருள் அகழ்வுகளில் புராதன அறுவைச் சிகிச்சைக்கான உபகரணங்களைக் கண்டுபிடித்தமை.
3) புத்ததாச மன்னன் பத்துக் கிராமங்களுக்கு ஒரு வைத்தியர் வீதம் நியமித்தான் என்று மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டிருந்தமை.
4) வைத்தியக்கலை பற்றி எழுதப்பட்ட நூல்கள் வைத்தியர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டன என மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டிருந்தமை.

**12. உலர் வலயத்தில் குடியேறிய ஆரம்ப ஆரியக் குடியேற்ற வாசிகள் எதிர்நோக்க வேண்டியிருந்த மிகப் பெரிய சவால்**

1) தங்களின் சொந்த இடத்துடன் தொடர்பினை ஏற்படுத்த இடர்பட்டமை.

2) புதிதாகக் குடியேறிய இடங்களில் இருந்த காடுகளை அழிப்பதற்கு இடர்ப்பட்டமை.
3) குடியிருப்புக்கள் பரவிய இடங்களில் நிலவிய மழைவீழ்ச்சியின் நிச்சயமற்ற தன்மை.
4) சுதேச மக்கள் குலத்தவரால் எப்போதும் காட்டப்பட்ட எதிர்ப்பு.

**13. இலங்கையின் நாகரிகத்தையும் கலாசாரத்தையும் உருவாக்குவதில் அதிக செல்வாக்கைச் செலுத்திய வரலாற்று நிகழ்வு பின்வருவனவற்றுள் எது?**

1) கோல்புறூக் ஆணைக்குழுவின் ஆலோசனைகள் நடைமுறைப்படுத்தப்பட்டமை.
2) இலங்கை பிரித்தானியரின் கீழ்க் கொண்டு வரப்பட்டமை.
3) இலங்கையின் இராசரட்டைப் பிரதேசம் சோழரின் கீழ்ப்பட்டமை.
4) மகிந்ததேரர் மூலம் பௌத்தசமயம் இந்நாட்டிற்கு அறிமுகப்படுத்தப்பட்டமை.

**14. நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் இடம்பெறும் தொல்பொருள் அகழ்வுகள் மூலம் உலோகச்சிலைகள், நாணயங்கள், ஆபரணப் பகுதிகள், அணிகள் போன்ற பொருள்கள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றை அவதானிக்கும்போது பின்வரும் முடிபுகளில் எதனைத் தீர்மானிக்கக்கூடியதாக உள்ளது?**

1) உலோக தொழிநுட்பம் பல்வேறு துறைகளிலும் பரவி இருந்தமை.
2) சிலைகளைச் செதுக்கும் நுட்பமுறை வளர்ச்சியடைந்து காணப்பட்டமை.
3) உலோக பாத்திரங்கள் உற்பத்தி செய்வதற்குத் தேவையான பல்வேறு வகைக் கனிப்பொருள்கள் இங்கு இருந்தமை.
4) ஆபரணங்களை அணியும் பழக்கம் ஆதிகாலத்தில் இருந்தமை.

**15. சனநாயக நிர்வாக முறைமை வெற்றியடைவதற்கு மிகவும் உன்னதமான காரணி**

1) அரசியல் அறிவு படைத்த மக்கள் இருத்தல்.
2) பொருளாதாரம் கீழ்மட்டத்தில் இருத்தல்.
3) இரண்டு அரசியல் கட்சிகள் மட்டும் இருத்தல்.
4) சுதந்திரமான வெகுசனத் தொடர்பு முறைமை இருத்தல்.

16. பின்வருவனவற்றுள் மசோதா ஒன்று பாராளுமன்றத்தில் சட்ட மாக்கப்படுவது தொடர்பான திருத்தமான கூற்று எது?

1) செயற்குழு நிலையின் பின்னர் சபாநாயகரிடம் கையொப்பத் தைப் பெறுதல்.
2) மூன்றாம் வாசிப்பின் பின்னர் சட்டமா அதிபரிடம் முன் வைத்தல்.
3) முதலாம், இரண்டாம், மூன்றாம் வாசிப்பு நிறைவேறிய பின்னர் சபாநாயகரிடம் கையொப்பத்தைப் பெறுதல்.
4) மூன்றாம் வாசிப்பின் பின்னர் அரசியல் யாப்புக்கு ஏற்றது என மீயுயர்நீதிமன்றத்தின் தீர்ப்பைப் பெறுதல்.

17. A – மகிந்ததேரர் தலைமையிலான தர்மதூதுக்குழு
B – பிக்குணி சங்கமித்தையும் கைப்பணித்திறனுடைய 18 பேரடங்கிய குழுவும்
C – பத்தகச்சானா இளவரசியும் அவளது சகோதரர்களும்
D – பண்டுவாசதேவ இளவரசனும் குழுவினரும்

மேற்குறித்த A , B, C, D ஆகியவற்றினால் காட்டப்படும் குழுக்கள் இலங்கைக்கு வருகை தந்த வரலாற்று ஒழுங்கு வரிசையைத் திருத்தமாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

1) D, C, A, B  2) C, B, A, D  3) C, D, A, B  4) D, A, B, C

18. கழிவுகளை அகற்றுதல் தொடர்பாகத் தற்போது எழுந்துள்ள பிரச்சினையை இழிவளவாக்குவதற்குப் பின்பற்றக்கூடிய மிகப் பொருத்தமான செயன்முறை பின்வருவனவற்றுள் எது?

1) வீட்டு வளவினுள்ளேயே புதைத்தல்.
2) உள்ளூராட்சி நிறுவனங்கள் மூலம் எடுத்துச் சென்று அழித்தல்.
3) மீள்சுழற்சிச் செய்முறையைப் பயன்படுத்தல்.
4) தாழ் நிலங்களை நிரப்பப் பயன்படுத்தல்.

19. மக்களின் சமூக வாழ்க்கையில் அதிக செல்வாக்கை ஏற்படுத்தி அண்மைக் காலங்களில் உயர்ந்த அளவு முன்னேற்றத்தை விரைவாக அடைந்துள்ள துறை எது?

1) ஏற்றுமதி விவசாயம்
2) தகவல் தொழினுட்பவியல்
3) கல்வி
4) சுகாதாரம்

**20. இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் சர்வதேச வர்த்தகத்தில் வர்த்தக நிலுவையைச் சாதகமாக்கிக் கொள்வதற்கு முக்கியமான நடவடிக்கை பின்வருவனவற்றில் எதுவாக அமையும்?**

1) நுகர்வுக்கான செலவைக் குறைப்பதும் ஏற்றுமதிக்கான பொருட்களை உற்பத்தி செய்வதற்கு முதலீட்டாளர்களை ஊக்குவித்தலும்.
2) ரூபாயின் பெறுமானத்தைக் குறைத்தலும் ஏற்றுமதி வரிகளைக் குறைத்தலும்
3) அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கிடையில் வர்த்தகக் கூட்டுகளை ஏற்படுத்தல்
4) அபிவிருத்தியடைந்த நாடுகளுடன் இருபக்க வர்த்தக ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொள்ளல்.

**21. பிரித்தானியர் ஆட்சியில் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைப் பரம் பலின் விளைவாக மலைநாட்டு மக்கள் எதிர்நோக்கிய பிரச்சினை களில் முக்கியமானதைப் பின்வருவனவற்றிலிருந்து தெரிவு செய்க.**

1) தன்னிறைவுடைய பொருளாதாரம் அழிந்தமை.
2) காணிப் பற்றாக்குறை உக்கிரமடைந்தமை.
3) பெருந்தோட்டப் பயிர்களுக்காகக் காடுகள் அழிக்கப்பட்ட மையால் மண்ணரிப்பு அபாயம் ஏற்பட்டமை.
4) வெளிநாட்டவரின் பெருந்தோட்டங்களில் தொழிலாளர் குறைந்த கூலியில் வேலைசெய்யும் நிலைமை ஏற்பட்டமை.

**22. இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் விவசாய முயற்சிகளில் அபிவிருத்தியை ஏற்படுத்துவதில் மிகவும் பொருத்தமான செயற்பாட்டுமுறை எதுவெனப் பின்வருவன வற்றில் இருந்து தெரிவுசெய்க.**

1) அபிவிருத்தியடைந்த நாடுகள் பாரிய நிலப்பரப்பில் பயன் படுத்துகின்றதொழினுட்பத்தைப் பயன்படுத்தல்.
2) இயந்திர சாதனங்களுக்குப் பதிலாக மனித உழைப்பையும் தேசிய வளங்களையும் பயன்படுத்தல்.
3) நாட்டின் பொருளாதார, கலாசார நிலைமைக்குப் பொருத்த மான தொழினுட்ப முறைகளைப் பயன்படுத்தல்.
4) சிறு விவசாய நிலங்களைக் கூட்டுறவுப் பண்ணைகளாக மாற்றி நவீன தொழினுட்பத்தைப் பயன்படுத்தல்.

**23. 'நேரடி சனநாயகம்' என்ற எண்ணக்கருவை விளக்கமாகக் காட்டு கின்ற செயன்முறை பின்வருவனவற்றுள் எது?**

1) பாராளுமன்ற அங்கத்தவர்களைத் தெரிவுசெய்து நியமித்தல்
2) மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பு நடாத்துதல்
3) மாகாணசபைகளுக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்தல்
4) பிரதேச சபைத் தேர்தல்கள்

**24. ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பினர்களான ஐந்து நாடுகளுக்கும் உள்ள விசேட சிறப்புரிமை எது?**

1) எந்தவொரு உறுப்பு நாட்டின் மீதும் ஆயுதப்படையைப் பயன்படுத்துதல்.
2) செயலாளர் நாயகத்தை நியமித்தல்.
3) உறுப்பு நாடுகளுக்கு உதவிப் பணத்தைப் பகிர்ந்தளித்தல்.
4) இரத்துச் செய்யும் அதிகாரத்தைப் பயன்படுத்தல்.

**25.** A - **சர்வதேச சமாதானத்தையும் பாதுகாப்பையும் பேணுதல்.**
B - **உறுப்பு நாடொன்றிலே உள்நாட்டு பிணக்குகள் ஏற்படும் போது தலையிடுதல்.**
C - **நாடுகளுக்கிடையில் நட்புறவை வளர்த்தல்.**
D - **பிராந்திய மக்களின் நலன்புரி நடவடிக்கைகளை வளர்த்தல்.**
E - **அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுடனான ஒத்துழைப்பை வலுப்படுத்தல்.**

**மேற்கூறிய கூற்றுக்களுக்கிடையே ஐக்கிய நாடுகள் அமைப்பின் நோக்கங்களை மட்டும் உள்ளடக்கிய விடையைத் தெரிவு செய்க.**

1) B, D
2) B, E
3) A, C
4) A, E

**26. கீழே நிரல் I இல் தரப்பட்டுள்ள நீர்ப்பாசன நிர்மாணம் ஒவ்வொன் றையும் நிரல் II இலுள்ள விவரணங்களுடன் பொருத்தமாக இணைக்கும்போது அவற்றின் ஒழுங்கு வரிசையை திருத்தமாகக் குறிப்பிடும் விடை எது?**

| நிரல் I | நிரல் II |
|---|---|
| A கலிங்கல் தொட்டி | E இயற்கையான பாறைத் தொடர்களைப் பயன்படுத்திக் கலிங்கல்லை நிர்மாணித்தல் |
| B ஜயகங்கை | F குளத்து நீரின் அமுக்கத்தைக் கட்டுப்படுத்தல் |
| C ஈரக்கலிங்கல் | G சரிவின் படித்திறன் இழிவளவாக இருக்குமாறு கால்வாய் படுக்கையை நிர்மாணிக்கும் தேர்ச்சித்திறன் |
| D மினிப்பே (அமுண) அணைக் கட்டு. | H குளத்தில் சேறு நிறைவதைத் தவிர்த்தல் |
| | I குளக்கட்டின் உட்புறத்தைப் பாதுகாத்தல் |
| | J இயற்கையான பாறைத் தொடர்களைப் பயன்படுத்தி நீரைத் திருப்புதல் |

*1)* E, F, G, I  *2)* F, J, H, E  *3)* F, G, H, J  *4)* J, G, F, E

**27.** A - **சர்வசன வாக்குரிமை**
B - **சாதிமுறை**
C - **தேசவளமைச் சட்டம்**
D - **உரோமன் கத்தோலிக்க சமயம்**
E - **பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை**
F - **இராஜகாரிய முறைமை**

**மேலே தரப்பட்டுள்ளவற்றில் ஐரோப்பிய இனத்தவரின் செல்வாக்கின் விளைவாக இலங்கைச் சமூகத்தவரிடம் ஒன்றிணைந்த அம்சங்களை உள்ளடக்கிய விடை எது?**

*1)* A, B, C  *2)* C, D, E  *3)* A, D, E  *4)* B, C, F

**28. உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்குப் பின்பற்றக்கூடிய பரவலான பயிர்ச்செய்கை முறையை நடைமுறைப்படுத்துவதற்கு முக்கிய தடையாக அமைவது**

*1)* அதிக செலவைக் கொண்டிருத்தல்.
*2)* உரிய தொழினுட்பவியல் முறை பற்றிய அறிவு போதிய அளவில் இன்மை.

3) அறுவடை குறைந்த மட்டத்தில் இருத்தல்.
4) பயிர்ச்செய்கைக்கு உகந்த நிலம் வரையறைக்குட்பட்டிருத்தல்.

**29. உலக சனத்தொகைக்குப் போதுமான உணவு உற்பத்தியான போதும் பூமியில் வாழும் எல்லா மனிதர்களுக்கும் போதுமான அளவு உணவு கிடைப்பதில்லையெனக் கூறப்படுகிறது. இதற்குக் காரணமானது.**

1) உற்பத்தியாகும் உணவில் பல்வகைமை இன்மை.
2) களஞ்சியப்படுத்துவதிலுள்ள குறைபாடுகளினால் உணவு பெருமளவில் வீணாகுதல்.
3) உற்பத்தியாகும் உணவு ஒழுங்கு முறையில் பகிர்வு செய்யப்படாமை.
4) சில அபிவிருத்தி அடைந்த நாடுகள் உணவைப் பெருமளவில் நுகர்வு செய்தல்.

● A, B, C, D **என்னும் எழுத்துக்களின் கீழே கருத்துச்சோடிகள் தரப்பட்டுள்ளன. இதில் இரண்டாவதில் முதலாவது ஏற்படுத்தும் செல்வாக்கினை அவதானித்து 33 தொடக்கம் 36 வரையுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

A - மூன்றாம் நிலைக்கல்விக்கு அனுமதி பெறுவோரின் சதவீதம் எழுத்தறிவு
B - இயல்பான மக்கள் தொகை விருத்தி வீதம் சனத்தொகை இரட்டிப்பாவதற்கு எடுக்கும் காலம்
C - போசணை மட்டம் ஆயுள் எதிர்பார்ப்பு
D - எரிபொருள் செலவு பொருத்தமான தொழினுட்பவியல்
E - நகரமயமாதல் சுற்றாடல் மாசுறல்

**30. முதலாவது குறைவடைதல் இரண்டாவதின் அதிகரிப்புக்கு காரணமான கருத்துச் சோடி**

1) A 2) B 3) C 4) D

**31. முதலாவது அதிகரிப்பு இரண்டாவதில் எவ்வகைச் செல்வாக்கும் செலுத்தாத கருத்துச் சோடி**

1) A 2) C 3) D 4) E

**32. முதலாவதன் அதிகரிப்பு இரண்டாவதன் அதிகரிப்பிலும் செல்வாக்குச் செலுத்தக்கூடிய இரண்டு கருத்துச் சோடிகள் எவை?**

1) AB 2) BC 3) ED 4) CE

33. முதலாவதின் அதிகரிப்பை இழிவளவாக்குவதற்கு இரண்டாவது உதவக்கூடிய கருத்துச் சோடி

*1)* B *2)* C *3)* D *4)* E

34. உலக சனத்தொகை வளர்ச்சி பற்றி மிகுந்த கவனம் செலுத்த வேண்டி இருப்பது பின்வருவனவற்றில் எக்காரணத்தினாலாகும்?

*1)* அதிகரித்து வரும் சனத்தொகைக்கு சார்பளவில் வளங்கள் அதிகரிக்காமை.

*2)* அதிகரித்துவரும் சனத்தொகைக்கு பொருத்தமான வாழ்விடம் வரையறைக்குட்பட்டிருத்தல்.

*3)* வளங்களின் பரம்பல் சமனற்றுக் காணப்படுதல்.

*4)* அதிகரித்து வரும் சனத்தொகை காரணமாக சூழல் உக்கிரமாக மாசடைதல்.

| நாடு | எழுத்தறிவு வீதம் | சிசுமரணம் (1000இற்கு) | ஆயுள் எதிர்பார்ப்பு (ஆண்டுகள்) | சனத்தொகை வளர்ச்சி வேகம் | சனத்தொகை (மில்லியன்) | ஒரு தொலை பேசிக்கு மக்கள் | ஒரு தொலைக் காட்சிப் பெட்டிக்கு மக்கள் | ஆள்வீத கலோரி நுகர்வு |
|---|---|---|---|---|---|---|---|---|
| A | 100.0 | 05 | 80 | 0.2 | 125.4 | 1.0 | 1.6 | 2596 |
| B | 100.0 | 06 | 78 | 0.6 | 7.1 | 1.1 | 2.5 | 3562 |
| C | 31.6 | 164 | 44 | 1.9 | 21.2 | 390.0 | 114.4 | 1710 |
| D | 27.0 | 88 | 54 | 2.3 | 21.5 | 174.0 | 354.8 | 2340 |
| E | 37.8 | 110 | 52 | 2.5 | 9.8 | 12.0 | 119.5 | 2021 |
| F | 89.1 | 16 | 72 | 1.2 | 18.1 | 88.0 | 10.2 | 2226 |

35. பௌதீக வாழ்க்கைத் தரச்சுட்டி உயர்வாகவும் தாழ்வாகவும் உள்ள இரு நாடுகளை முறையே வரிசைப்படி குறிக்கும் விடை

*1)* A உம் C ஊம்

*2)* B உம் C உம்

*3)* A யும் E உம்

*4)* B உம் D உம்

**36.** சனத்தொகை இரு மடங்காவதற்கு மிக நீண்ட காலம் எடுக்கும் நாடு எது?

*1)* A *2)* B *3)* C *4)* F

**37.** வருங்காலத்தில் முதியோர்களினால் பிரச்சினை ஏற்படக்கூடிய நாடு எது?

*1)* A *2)* B *3)* C *4)* F

**38.** போசாக்கின்மையை ஒழிக்கும் பொருட்டு நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு மிகவும் பொருத்தமான நாடு

*1)* C *2)* D *3)* E *4)* F

**39.** தொடர்பாடல் ஊடகங்களின் வளர்ச்சி மிகக் குறைந்த நாடு எது?

*1)* A *2)* C *3)* D *4)* E

**40.** நிரல் Aலில் ஆரியர் குழுக்களின் வருகையும் நிரல் B யில் அவர்களினால் நிர்மாணிக்கப்பட்ட குடியேற்றங்களும் தரப்பட்டுள்ளன. நிரல் A யிற்குப் பொருந்தும் வகையில் நிரல் B யை ஒழுங்கு படுத்தும்போது சரியான ஒழுங்கைக் குறிக்கும் விடைத்தொகுதி யாது?

| நிரல் A | நிரல் B |
|---|---|
| 1) விஜயன் குழுவினர் | G – ஊராதொட்டை, ஜம்புகோளபட்டுன |
| 2) பத்தகச்சானா சகோதரக் குழுவினர் | H – மாதோட்டம், உபதிஸ்ஸ கமம் |
| 3) பண்டுவாஸ தேவன் குழுவினர் | I – ரோஹனகமம், தீகவாபி |
| 4) பிக்குனி சங்கமித்தை | J – விஜிதபுரம், உருவெல காமம் |
| | K – தம்மன்னாவ, கோகண்ண |


*1)* H, I, J, K *2)* K, I, H, G *3)* J, I, H, G *4)* J, I, G, H

## பகுதி II


1. (அ) படவேலை (தனிநூலக இணைப்பு)

(ஆ) (i) இங்கு A, B, C, D என்பதால் காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு படத்தினோடும் தொடர்புடைய இடங்களைத் தரப் பட்டுள்ள பட்டியலிலிருந்து தெரிவு செய்து எழுதுக.

(இசுருமுனிய, சிகிரியா, வெஸ்ஸகிரி, மெதிரிகிரி, பொலநறுவைச் சிவன் கோவில், தந்திரமலை, எம்பக்க தேவாலயம், கடலாதெனிய)









A ..............................................................................................

B ..............................................................................................

C ..............................................................................................

D ..............................................................................................

(ii) இங்குள்ள தேசப்படத்தில் வரலாற்று முக்கியத்துவம் பெறும் இடங்கள் பிரதேசங்கள் ஆறுகள் என்பவை 1 – 8 வரையுள்ள இலக்கங்களினால் காட்டப்பட்டு உள்ளன. இந்த இலக்கங்களுள் கீழே தரப்பட்டுள்ள விடயங்களுக்குப் பொருந்தும் இலக்கத்தைத் தெரிவுசெய்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.




(a) வனவாஹினி நதி ..............................

(b) காஜரகாமம் படம் ..............................

(c) கசாதொட்ட ..............................

(d) திகாமடுல்ல ..............................

(iii) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வரலாற்று விடயம் தொடர்பாகவும் முக்கியம் பெறும் இடங்களில் பெயர் தனிநபர் பெயர் என்பவற்றைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

(a) கோகண்ண என்ற பெயரால் பண்டைக் காலத்தில் வழங்கப்பட்ட இன்றைய துறைமுகம்

..............................

(b) யாழ்ப்பாணத்தில் நல்லூர் கோவிலைக் கட்டுவதில் முன்னோடியாக விளங்கியவர்

..............................


(c) கி.பி.1344இல் இலங்கைக்கு வந்ததாகக் கருதப் படும் முஸ்லிம் பயணி

..............................

(d) அரசியல் வலுச்சமநிலையைத் தாபிப்பதற்குத் திலோகசுந்தரி என்ற பெயருடைய கலிங்க இளவரசியை மணம் செய்த மன்னன்

..............................

2. (i) அருகேயுள்ள வரைபில் பௌத்ததூபி ஒன்றின் பகுதிகள் இலக்கங்களினால் குறித்துக் காட்டப்படுகின்றன. இலக்கம் 2, 4, 5 என்பவற்றினால் குறித்துக் காட்டப்படும் பகுதிகளை அதே ஒழுங்கில் பெயரிடுக.




(ii) புராதன மன்னர்கள் பலர் தேசிய வைத்தியத்துறைக்கு பல் வேறு சேவைகள் செய்துள்ளனர். ''புத்ததாச'' மன்னன் வைத்தியத்துறைக்கு ஆற்றிய சேவைகள் நான்கினைத் தருக.

(iii) இலங்கையின் பண்டைய வெளிநாட்டுத் தொடர்பு களினால் இலங்கைக்கு கிடைத்த அனுகூலம் ஒன்றையும் பிரதிகூலம் ஒன்றையும் சுருக்கமாக விளக்குக.

3. (i) இலங்கையின் தாழ்நிலப்பிரதேசங்களில் ஐரோப்பிய இனத்தவர் தமது அதிகாரத்தைப் பரப்புவதற்கு முயற்சி எடுத்த காலங்களில் கண்டி இராச்சியத்தினை ஆட்சி செய்த ஆட்சியாளர்கள் மூவரின் பெயர் குறிப்பிடுக.

(ii) இலங்கையின் கரையோரப் பிரதேசங்கள் ஐரோப்பிய இனத்தவருக்குக் கீழ்ப்பட்டிருந்த போதும் ஏறத்தாழ மூன்று நூற்றாண்டு காலமாக அவர்களின் பிடிக்குள் அகப்படாது தமது சுதந்திரத்தை பாதுகாப்பதில் கண்டி இராச்சியத்திற்கு இயலத்தக்கதாக இருந்தது. இதற்கான இரண்டு காரணங்களை எடுத்துக்காட்டுக.

(iii) கண்டி யுகத்தில் மலையகக் கிராமங்களில் வாழ்ந்த மக்கள் தமது நாளாந்த வாழ்க்கைத் தேவையினை பூர்த்தி செய்த முறையினைச் சுருக்கமாக விவரிக்க.

(iv) கீர்த்தி ஸ்ரீ இராசசிங்க மன்னன் கண்டி இராச்சியத்தின் முக்கியமான ஆட்சியாளனாக ஏன் மதிக்கப்படுகிறான் என்பதை இரண்டு விடயங்கள்மூலம் விளக்குக.

4. ஒரு நாட்டின் பொருளாதார விருத்தியில் போக்குவரத்தும் வெகுசனதொடர்பு ஊடகங்களும் பெருமளவு செல்வாக்குச் செலுத்துகின்றன.

(i) ஒரு நாட்டின் வினைத்திறன்மிக்க போக்குவரத்துச் சேவை இருப்பதனால் உண்டாகும் நன்மைகள் மூன்றினைக் குறிப்பிடுக.

(ii) இலங்கையின் பெருந்தெருக்கள் போக்குவரத்துத் தொகுதியில் அண்மையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

(iii) தற்போது கொழும்புத்துறைமுகம் கப்பற்சேவை நடவடிக்கைகளில் முக்கிய கேந்திர நிலையமாக விளங்குவது ஏன் என்பதை இரண்டுவிடயங்கள் மூலம் விளக்குக.


(iv) அபிவிருத்தி நடவடிக்கைகளில் வெகுசனத்தொடர்பு ஊடகங்கள் முக்கியத்துவம் பெறும் முறையை விரும்பிய இரண்டு வெகுசனத்தொடர்பு ஊடகத்துறை மூலம் விளக்குக.

5. (i) வரைபில் C, D, E ஆகிய ஆங்கில எழுத்துக்களினால் குறித்துக் காட்டப்படும் நாடுகளையும் அவற்றின் தலைநகரங்களையும் அதே ஒழுங்கில் எழுதுக.

A ..............................................

B ..............................................

C ..............................................



(ii) இப்பிராந்திய நாடுகள் தமக்கிடையே உருவாக்கியுள்ள அமைப்பைக் குறிப்பிட்டு, இவ்வமைப்பின் மூலம் அடைந்துகொள்ள எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

(iii) இப்பிராந்திய நாடுகளின் ஆள்வீத வருமானமாவது மிகவும் தாழ்ந்த மட்டத்தில் காணப்படுவதற்கான பிரதான காரணி கள் இரண்டினைச் சுருக்கமாக விளக்குக.

(iv) தெற்காசிய நாடுகளில் இருந்து இலங்கையை வேறுபடுத் திக் காட்டக்கூடிய இரு பிரதான காரணிகளைச் சுருக்கமாக விளக்குக.

6. (i) அநுராதபுர காலத்தில் கீழே தரப்பட்டுள்ள பணிகளை நிறை வேற்றிய தனியாள்கள் எப்பெயரால் அழைக்கப்பட்டனர்?

A – தக்கிண தேசத்தின் நிர்வாகத்துக்குப் பொறுப்பாக இருந்தவர்.

B – படைகளுக்குப் பொறுப்பான அதிகாரி

C – உருகுணைப் பகுதி நிர்வாகத்துக்குப் பொறுப்பாக இருந்தவர்.

(ii) புராதன இலங்கையின் அரசர்களுக்கான பொறுப்புகள் இரண்டினைக் குறிப்பிடுக.

(iii) அனுராதபுர, பொலன்னறுவை காலப்பகுதியில் வளர்ச்சி பெற்ற வைத்தியசேவை இருந்தது என்பதை உதாரணங்கள் இரண்டின்மூலம் விவரிக்குக.

7. (i) ஒரு நாட்டின் சனத்தொகையில் மாற்றம் ஏற்படுவதைத் தீர்மானிக்கும் காரணிகள் மூன்றின் பெயர் குறிப்பிடுக.

(ii) விரைவாக சனத்தொகைப் பெருக்கத்தினால் ஒரு நாட்டில் எழக்கூடிய நான்கு பிரச்சினைகளைக் குறிப்பிடுக.

(iii) விரைவான சனத்தொகைப் பெருக்கமானது எவ்வாறு சூழல் மாசுறுதலுக்கு வழி ஏற்படுத்துகின்றது என்பதை இரு உதாரணங்கள் கொண்டு விளக்குக.

(iv) வருங்கால சந்ததியினர் வீதிகளிலும், வேலைத் தலங் களிலும் இப்போது இருப்பவரை விட அதிக எண்ணிக்கை யானவர்களுடன் வாழ வேண்டி நேரிடும் எனக் கூறப்படு கின்றது. இத்தகைய சந்தர்ப்பங்களுக்கு வெற்றிகரமாக முகம் கொடுப்பதில் நீங்கள் வளர்த்துக்கொள்ள வேண்டிய இரண்டு பண்புகளை விளக்குக.

8. (i) ஐக்கிய நாடுகள் சபையில் 6 பிரதான அமைப்புக்கள் உண்டு. அவற்றில் மூன்றின் பெயர்களைத் தருக.

(ii) ஐக்கிய நாடுகள் சபையின் இலக்குகள் இரண்டினைத் தருக.

(iii) இலங்கைக்கு உதவி வழங்குகின்ற ஐக்கிய நாடுகளுடன் இணைக்கப்பட்டு தாபனம் ஒன்றின் பெயரைக் குறிப்பிட்டு, அதன் மூலம் இலங்கைக்கு கிடைக்கும் இரண்டு நன்மைகளை விபரிக்குக.

(iv) ஐக்கிய நாடுகள் சபையில் பல குறைபாடுகள் காணப்பட்ட போதும் இதுவே உலக சமூகத்தின் நன்மையைக் கருதும் ஒரே ஒரு அமையமாக விளங்குகின்றது. இக்கூற்றினை இரண்டு காரணங்கள் தந்து நிரூபிக்க.

9. (i) இலங்கையில் அமைக்கப்பட்டுள்ள முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்கள் மூன்றினையும் அவை அமைந்துள்ள மாவட்டங்களையும் ஒழுங்கு முறையில் குறிப்பிடுக.

(ii) முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்கள் அமைக்கப்பட்டதன் நோக்கங்கள் நான்கினைத் தருக.

(iii) இலங்கையில் பெருமளவு கைத்தொழில் பேட்டைகள் ஈரவலயத்தில் அமைந்துள்ளமைக்கு நீர் கருதும் இரு காரணங்களைச் சுருக்கமாக விளக்குக.

(iv) *1978* திறந்த பொருளாதார கொள்கை காரணமாக இலங்கை யின் குடிசைக் கைத்தொழில்கள் வீழ்ச்சியடைந்து சென்றமைக்கான இரு காரணிகளைச் சுருக்கமாக விளக்குக.

10. (i) பின்வரும் மூன்று நீர்மின் உற்பத்தி நிலையங்களும் அமைந் துள்ள நதிகளை அதே ஒழுங்கில் குறிப்பிடுக.
அ. விக்டோரியா ஆ. சமனெலவெவ இ. கன்யொன்

(ii) இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட பல்நோக்கு அபிவிருத்தித்திட்டம் ஒன்றின் பொதுவான நோக்கங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

(iii) துரித மகாவலி அபிவிருத்தித்திட்டம் மூலம் அடைந்து கொள்ளப்பட்ட அபிவிருத்தி மட்டங்கள் நன்மைகள் இரண்டை சுருக்கமாக விளக்குக.

(iv) இலங்கை எதிர்நோக்கியுள்ள சக்தி நெருக்கடிக்கு ஒரு தீர்வாக அனல்மின்சக்தியைப் பயன்படுத்துவதன் மூலம் ஏற்படக்கூடிய சாதக விளைவு ஒன்றையும் பாதக விளைவு ஒன்றையும் சுருக்கமாக விளக்குக.

# விடைகள்

## பகுதி - I

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1) | 1 | 2) | 4 | 3) | 2 | 4) | 2 |
| 5) | 2 | 6). | 3 | 7) | 1 | 8) | 3 |
| 9) | 3 | 10) | 4 | 11) | 2 | 12) | 3 |
| 13) | 4 | 14) | 1 | 15) | 1 | 16) | 3 |
| 17) | 1 | 18) | 3 | 19) | 2 | 20) | 1 |
| 21) | 2 | 22) | 3 | 23) | 2 | 24) | 4 |
| 25) | 3 | 26) | 1 | 27) | 3 | 28) | 4 |
| 29) | 3 | 30) | 2 | 31) | 3 | 32) | 4 |
| 33) | 3 | 34) | 4 | 35) | 1 | 36) | 1 |
| 37) | 3 | 38) | 1 | 39) | 4 | 40) | 3 |

## பகுதி - II

1. (ஆ) (i) A – மெதிரிகிரி
   B – பொலநறுவைச் சிவன்கோவில்
   C – எம்பக்க தேவாலயம்
   D – இசுருமுனியா

   (ii) a) 2 b) 3 c) 5 d) 4

   (iii) (a) – திருகோணமலை
   (b) – சப்புமல்குமரயா/புவனேகபாகு
   (c) – இபன்பத்தூத்தா
   (d) – முதலாம் விஜயபாகு

2. (i) 2 – கோலாகாரகர்ப்பம்
   4 – கலசபீடம்
   5 – கோபுர கலசம்

   (ii) (அ) 10 கிராமங்களுக்கு ஒரு வைத்தியர் வீதம் நியமிக்கப் பட்டமை.

   (ஆ) வைத்தியர்களுக்குப்பயிற்சி அளித்து கண்வைத்தியம், பிரசவ வைத்தியம், பாம்புக்கடி வைத்தியம் போன்ற வற்றை விருத்திசெய்தமை.

   (இ) வலது குறைந்தோருக்கு வைத்திய சேவைகள் வழங்கி யமை.

   (ஈ) மூலிகைத் தோட்டங்கள் உருவாக்கியமை.

(iii) *(1)* **அனுகூலம்**

இந்தியாவோடு சிறப்பாக அசோக மன்னனோடு கொண்டிருந்த உறவால், இலங்கைக்குப் பௌத்த மதமும் அது சார்ந்த கலாசாரமும் வந்து சேர்ந்தன.

*(2)* **பிரதிகூலம்**

வெளிநாட்டு ஆக்கிரமிப்புகள் நிகழ்ந்தன. இந்திய, போர்த்துக்கேய, ஒல்லாந்த, ஆங்கிலேய ஆக்கிரமிப்புகள் ஏற்பட்டன.

3. (i) *(அ)* கரலியத்த பண்டார

*(ஆ)* முதலாம் விமலதர்ம சூரியன்

*(இ)* 2ஆம் இராஜசிங்கன்

(ii) *(அ)* கண்டி இராச்சியத்தின் இயற்கை அமைப்பு ஐரோப்பியரின் ஆதிக்கத்திற்குட்பட வாய்ப்பாகவில்லை. மலைகள், காடுகள் என்பன இயற்கை அரண்களாக இருந்து அந்நியப் படைகளின் நுழைவைக் கட்டுப்படுத்தின. காலநிலை அந்நியப்படைகளுக்குப் பெருந் தடையாகவிருந்தது.

*(ஆ)* கண்டி இராச்சிய மக்கள் அரசனுக்கு மிகவும் விசுவாசமாக விளங்கினர். ஒற்றுமையாக எதிரிகளை எதிர்த்தனர். கெரில்லா முறை யுத்தத்திற்குக் கண்டியின் சூழல் மிகவும் சாதகமாக விளங்கியது.

(iii) கண்டிப் பிரதேசத்தின் பிரதான தானியம் நெல், படிமுறை மூலம் செய்கை பண்ணப்பட்டது. அத்துடன் இயற்கையாகவே கிடைத்த ஈரப்பலாக்காய், செய்கை பண்ணப்பட்ட கிழங்குவகைகள் அவர்களின் உணவாகின. துணி, கருவாடு, உப்பு போன்றவை பண்டமாற்று மூலம் அவர்களால் பெற்றுக்கொள்ளப்பட்டன. ஓரளவு சுயதேவை பொருளாதாரம் அங்கு நிலவியது.

(iv) *(அ)* கீர்த்தி ஸ்ரீராஜசிங்க மன்னன் தனது ஆட்சிக் காலத்தில் பௌத்தமதத்திற்கு ஆற்றிய பணி அவனை முக்கிய ஆட்சியாளனாகக் கருத வைத்துள்ளது. பல பௌத்த கோயில்களை நிறுவினான். உபசம்பதாவ, சங்கராஜ முதலான பதவிகளைப் பிக்குகளுக்கு வழங்கி அவர்களைக் கௌரவித்துள்ளான். தலதா பெரகராவை ஆரம்பித்த பெருமையும் உடையவன்.

(ஆ) அந்நியரின் ஆதிக்கம் கண்டி இராச்சியத்தில் நிலை பெறாது தடுத்த பெருமை இவனுக்குண்டு. அக்காலத்தில் ஆட்சிசெய்த ஒல்லாந்தருடன் சமாதானமாகச் செயற்பட்டு தனது இராச்சியத்தின் சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொண்டான்.

4. (i) (அ) அதிக சிரமமின்றி மக்கள் விரைவாகப் பயணம் செய்ய முடிவதால் நேரம் விரயமாவதில்லை.

(ஆ) பொருட்களைத் தேவையானபோது தேவையான விடத்திற்கு எடுத்துச் செல்ல முடிகின்றது. பழுதடையாமல் விரைந்து சந்தைப்படுத்தவும் முடிகின்றது.

(இ) மானிட உறவுகள், வர்த்தகம், தொழில் என்பன விருத்தியுற வாய்ப்புண்டாகின்றது.

(ii) (அ) புதிய வீதிகள் பல அமைக்கப்பட்டுள்ளன. கிராமிய வீதிகள் பலவும் உரிய பாலங்கள், மதகுகளுடன் அமைக்கப்பட்டுள்ளன.

(ஆ) நெடுந்தெருக்கள் நவீன வசதிகளுடன் காபெற் வீதிகள் ஆக்கப்பட்டுள்ளன. அவை அகன்ற வீதிகளாகவுள்ளன.

(iii) (அ) கொழும்புத் துறைமுகத்தின் ஏற்றியிறக்கல் பணிக்கு நவீன பாரந்தூக்கிகள், கணினிமயமான இயக்கம் என்பன அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

(ஆ) புதிய இறங்குதுறைகள், களஞ்சியங்கள், அலைதாங்கிகள் என்பன அமைக்கப்பட்டு கூடுதலான கப்பல்கள் தரித்து நின்று ஒரே நேரத்தில் ஏற்றியிறக்கற் பணியில் ஈடுபடமுடிகின்றது. இவை கொழும்புத் துறைமுகத்தின் கேந்திர முக்கியத்துவத்திற்குக் காரணமாகும்.

(iv) (அ) அபிவிருத்தி நடவடிக்கைகளில் இன்று ஊடகத்துறை வகிக்கின்ற முக்கியத்துவம் அதிகம். செய்திப் பரிமாற்றத்தில் ஏற்பட்டிருக்கும்விருத்தி, தொலைபேசி, ரெலக்ஸ், பக்ஸ், செலூலர், இன்ரநெற், ஈமெயில் என ஏற்பட்டிருக்கும் விருத்தி உலகத்தினைச் சுருக்கி அபிவிருத்தி நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தியுள்ளது.

(ஆ) இலத்திரனியல் சாதனங்கள் பணப்பரிமாற்றம், வர்த்தகப்பரிமாற்றம், கருத்துப்பரிமாற்றம் ஆகியன வற்றிற்குப் பெரியளவில் உதவும் நேரவிரயமற்ற சாதனைகளாக உள்ளன.

5. (i) C பாகிஸ்தான் – இஸ்லாமாபாத்
D நேபாளம் – காட்மண்டு
E பூட்டான் – திம்பு

(ii) **சார்க் அமைப்பு**

(அ) தெற்காசிய நாடுகளிடையே நெருங்கிய சமூக, பொருளாதார, அரசியல் உறவுகளைப் பேணுதல்.

(ஆ) தெற்காசிய நாடுகளின் மக்கள் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்கு முயற்சித்தல்.

(இ) தெற்காசியப் பிராந்திய மக்களின் பொருளாதார சமூக அந்தஸ்தை உயர்த்தி, மக்களின் சுயசக்தியை அதிகரித்தல்.

(ஈ) தெற்காசியப் பிராந்தியத்தில் இருக்கும் ஏனைய அமைப்புக்களுடன் ஒத்துப்போதலும், ஏனைய நாடுகளின் பரஸ்பர உத்திகளைப் பெற்று அபிவிருத்தி அடைதலும்

(iii) (அ) இந்நாடுகளின் மொத்தத் தேசிய உற்பத்தி மிகக் குறைவாகவிருத்தல்.

(ஆ) குடித்தொகை உயர்வாகவும், குடித்தொகை வளர்ச்சி வீதம் உயர்வாகவும் இருத்தல்.

(iv) (அ) இலங்கையின் ஆள்வீத வருமானம் ஏனைய தெற்காசிய நாடுகளைவிட அதிகமாகும் (÷ 858)

(ஆ) இலங்கையின் பௌதிக வாழ்க்கைப்பண்புச் சுட்டெண் 86 ஆகவும் மனித வள அபிவிருத்திச் சுட்டெண் 0.714 ஆகவும் காணப்படுகின்றன. ஏனைய தென்னாபிரிக்க நாடுகளில் இவை இழிவு நிலை யிலுள்ளன.

6. (i) A – மாபா / மகா ஆதிபாத
B – சேனாதிபதி / செனவிரத்
C – ரோகண / போஜகா

(ii) (அ) மக்களை உள்நாட்டு வெளிநாட்டு எதிரிகளிடமிருந்து பாதுகாத்து, சட்டத்தையும் நீதியையும் நிலைநாட்டல்

(ஆ) குளங்கள், கால்வாய்கள் என்பனவற்றினை அமைத்துப் பொருளாதாரத்திற்கு உதவுதல்.

(iii) (அ) புதைபொருள் அகழ்வுகளினூடாக மதிரகிரிய, பொலநறுவை ஆலாகன, மிகிந்தலை ஆகிய இடங்களில் கிடைத்த வைத்தியசாலைகளின் சிதைவுகள்

(ஆ) அவ்விடங்களில் கண்டெடுக்கப்பட்ட அறுவைச் சிகிச்சை உபகரணங்கள்

7. (i) (அ) பிறப்பு வீதம்

(ஆ) இறப்பு வீதம்

(இ) இடப்பெயர்வு

(ii) (அ) அடிப்படைத் தேவைகளான வதிவிடம், உணவு என்பனவற்றை வழங்கமுடியாமை.

(ஆ) சுகாதார வசதிகள், மருத்துவ வசதிகள், கல்வி வசதிகள், போக்குவரத்து வசதிகள் என்பனவற்றினை வழங்க முடியாமை.

(இ) இயற்கை வளங்கள் கூடுதலாகப் பயன்படுத்த நேர்வதால் சூழல் மாசடைதல்.

(ஈ) சனத்தொகை வளர்ச்சியால் நிலப்பற்றாக்குறை, சேரிப்புறங்கள் உருவாகல் என்பன ஏற்படல்.

(iii) (அ) விரைவான சனத்தொகையால் உணவு உற்பத்தியை அதிகரிக்க நேரிடுகின்றது. இரசாயன வளமாக்கிகளைப் பாவிக்க நேர்வதால் நிலம் மாசடைகின்றது. புதிய விளைநிலங்களைப் பெறுவதற்காகக் காடுகளை அழிப்பதால் மண்ணரிப்பு, காலநிலை மாற்றம் (மழை குறைதல்) என்பன ஏற்படுகின்றன.

(ஆ) கிருமிநாசினிகள் அதிக உணவுற்பத்திக்காகப் பயன்படுத்த நேரிடுகிறது. வேலை வாய்ப்புகளுக்காகத் தொழிற்சாலைகள் ஆரம்பிக்க நேரிடுகிறது. இவை நீரினை மாசடைய வைக்கின்றன.

(iv) (அ) கூட்டாக வாழுந்திறனை வளர்த்து, மற்றவர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்தல்.

(ஆ) வளங்களைச் சமமாகப் பகிர்வு செய்துகொள்ளல்.

8. (i) (அ) ஐ.நா.பொதுச்சபை

(ஆ) ஐ.நா.பாதுகாப்புச்சபை

(இ) ஐ.நா.நம்பிக்கைப் பொறுப்புச்சபை

(ii) (அ) நாடுகளிடையே பரஸ்பரம் நட்புறவினை வளர்த்து, உலகம் முழுவதும் அமைதியையும், சமாதானத்தையும், பாதுகாப்பையும் ஏற்படுத்தல்.

(ஆ) மனித உரிமைகள், அடிப்படைச் சுதந்திரம் என்பனவற்றை நிலைநாட்டுவதற்குச் சர்வதேச மட்டத்தில் உதவிபுரிதல்.

(iii) யுனெஸ்கோ (UNESCO) ஐக்கிய நாடுகளின் கல்வி விஞ்ஞான கலாசார அமையம்

(அ) இலங்கையில் உயர்கல்வி நிறுவனங்களைத் தாபித்து அவற்றினை நன்கு நிறுவி, வேண்டிய உதவிகளை வழங்கி வருகிறது.

உதாரணம் : திறந்த பல்கலைக்கழகம், மொறட்டுவ பல்கலைக்கழகம்

(ஆ) கற்றலிற்கான உபகரணங்கள் வழங்கல், ஆசிரியர்களுக்குப் பயிற்சிகளை வழங்கல், நவீன கணினி நிறுவனங்களைத் தாபித்தல், முதலான பணிகளையும் ஆற்றிவருகின்றது.

(iv) (அ) உலகநாடுகள் அனைத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தல் உலகநிறுவனம் ஐக்கியநாடுகள் சபையாகும். உலக நாடுகள் அனைத்தினதும் அபிவிருத்தியில் இதுவே கவனம் செலுத்துகின்றது.

(ஆ) நாடுகளுக்கிடையிலான யுத்தங்கள் ஏற்படாது தடுப்பதிலும், நாடுகளிடையே சமாதானம் நிலவ விடுவதிலும் ஐக்கியநாடுகள்சபை ஒன்றே ஈடுபட்டு வருகின்றது.

9. (i) (அ) கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தகவலயம் - கம்பகா மாவட்டம்

(ஆ) பியகம சுதந்திரவர்த்தக வலயம் - கம்பகா மாவட்டம்

(இ) கொக்கல சுதந்திர வர்த்தக வலயம் - காலி மாவட்டம்

(ii) (அ) உண்ணாட்டில் பயன்படுத்தப்படாத வளங்களைப் பயன்படுத்தி அபிவிருத்தி காணல்.

(ஆ) வெளிநாட்டு நேரடி முதலீடுகள் மூலம் உள்நாட்டு மூலதனப் பிரச்சினைகளைத் தீர்த்தல்.

(இ) வெளிநாட்டு முகாமை, தொழில்நுட்பத்திறன் என்பனவற்றைப் பெற்றுக்கொள்ளல்.

(ஈ) பெரும்பாலானோருக்கு வேலைவாய்ப்புகளைப் பெறுதல்.

(iii) (அ) கைத்தொழிலுக்குத் தேவையான மூலப்பொருட்கள், வலு, நீர்வசதி, போக்குவரத்து, துறைமுக வசதி, விமானத்தளம் என்பன ஈரவலயத்திலேயே அமைந்து உள்ளன.

(ஆ) பயிற்றப்பட்ட மலிவான தொழிலாளர், அதிக சனத் தொகை கொண்ட கொழும்பு, கம்பகா, களுத்துறை, காலி மாவட்டங்களிலிருந்து இலகுவாக பெற்றுக் கொள்ள முடிகிறது.

(iv) (அ) 1978 இன்பின் திறந்த பொருளாதாரக் கொள்கை காரணமாக இலங்கையில் இயங்கி வந்த குடிசைக் கைத்தொழில்கள் தமது உற்பத்திக்கான சந்தை வாய்ப்பை இழந்தன. இறக்குமதியாகும் அதே வகைப் பொருட்களுடன் அவை போட்டியிட முடியாது போயிற்று.

(ஆ) மேலும், பெரியளவிலான யந்திரமயமான தொழிற் சாலைகள் உருவாகின. கைப்பணி விற்பன்னர்களால் யந்திர சாதனங்களுடன் போட்டியிட முடியாது போயிற்று. குடிசைக் கைத்தொழில்களில் ஈடுபட்டோர் நகரப்புறங்களைநாடி தொழில் தேடி இடம்பெயர்ந்தனர்.

*10.* (i) A – விக்டோரியா – மகாவலிகங்கை
B – சமனெலவெவ – வளவைகங்கை
C – கன்யொான் – களனி கங்கை

(ii) (அ) நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்தி வேளாண்மையை அதிகரித்தல்.

(ஆ) நீர்த்தேக்கங்கள் மூலமாக நீர் மின் உற்பத்தியை அதிகரித்தல்.

(இ) பாரிய நீர்த்தேக்கங்கள் மூலம் வெள்ளப் பெருக்கைத் தடுத்தல், நன்னீர் மீன் உற்பத்தி.

(ஈ) ஊர்காண் பயணிகளைக் கவர்தல், விவசாயம் சார்ந்த கைத்தொழில்களை விருத்தி செய்தல்.

(iii) (அ) இலங்கையின் பாரிய பலநோக்குத் திட்டம் துரித மகாவலிகங்கைத் திட்டமாகும். வீணே கடலில் கலந்த மகாவலி நீரை மொறக்கந்த, விக்டோரியா, கொத்மலை, ரன்தெனிகல, மாதுறு முதலான நீர்த்தேக் கங்களில் தேக்கி வடபுறமான கால்வாய்கள் மூலம், உலர் வலயத்தை விவசாயக் களஞ்சியமாக்கியமை.

(ஆ) மேற்படி நீர்த்தேக்கங்களில் நீர்மின் உற்பத்தி நிலையங் களை ஏற்படுத்தி மின்சாரத்தேவையைக் கூடியவரை பூர்த்தி செய்தமை.

(iv) (அ) சாதக விளைவு

நீர்மின்சாரம், நீர்த்தேக்க நீரின் அளவில் தங்கி உள்ளது. நீரினளவு மழைவீழ்ச்சியைப்பொறுத்தது. மழைவீழ்ச்சி குறையும்போது, நீர்மின் உற்பத்தியும் வீழ்ச்சியடையும். அவ்வேளை அனல்மிகு மின்சாரம் மிகவும் உதவி யானது. அது நிலக்கரியை அடிப்படையாகக் கொண்டது.

(ஆ) பாதக விளைவு

அனல்மிகு மின்சாரத்தை உற்பத்தி செய்ய நிலக்கரி முக்கியமான எரிபொருளாகவுள்ளது. நிலக்கரியை எரிப்பதால் வளி மாசடைகிறது. சூழல் மாசடைய நேரிடுகிறது.

விலை : ரூபா 175.00